பக்கங்கள்: 20

விலை:20 ரூபா

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | ஆவணி 10 ஞாயிற்றுக்கிழமை 26.08.2018 | கதிர் 294

### இது ரகசியம் அல்ல!

பாரதீய ஜனதாக் கட்சியைச் சேர்ந்த ராஜ்ய சபை உறுப்பினரான சுப்பிரமணிய சுவாமி கடந்த வாரம் கொழும்பு வந்தார் அல்லவா?

அடுத்த மாதம் புதுடில்லியில் தாம் நடத்தும் ஒரு கருத்தரங்கில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைப்

பக்கம் 18

# செயலணிக்குச் செல்வதனால் பின் செல்லாது அரசியல் தீர்வு



## விக்கிக்குச் சம்பந்தன் பதில்

கொழும்பு, ஓகஸ்ட் 26

வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலணியில் கூட்டமைப்பு பங்கேற்பதால் அரசியல் தீர்வு பின்தள்ளிப்போகாது. தீர்வு முயற்சிகளில் அது குந்தகத்தையும் ஏற்படுத்தாது.

- இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன்.

பக்கம் 18

# தமிழ் மக்களின் விருப்பத்துடனேயே ஜனாதிபதி செயலணியில் பங்கேற்பு

## கூட்டமைப்பின் பங்காளியான புளொட் கூறுகிறது

(எஸ்.நிதர்ஷன்)



யாழ்ப்பாணம், ஓக.26

தமிழ் மக்களின் தேவைகளுக்காக அவர்களின் விருப்பத்துடனேயே வடக்கு – கிழக்கு அபிவிருத்தி தொடர்பான ஜனாதிபதியின் செயலணிக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலந்து கொள்வதற்குத் தீர்மானித்துள்ளது எனக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான புளொட் அமைப்பு தெரிவித்துள்ளது.

பக்கம் 18

# தொடர் போராட்டத்துக்கு தயாராகிறது முல்லைத்தீவு

## மகாவலி அதிகார சபைக்கு எதிராக

முல்லைத்தீவு, ஓக.26

மகாவலி அதிகார சபையினால் முல்லைத்தீவு மாவட்டத்தில், மேற்கொள்ளப்படும் அத்துமீறல்களுக்கு எதிராக 3 அம்ச கோரிக்கையை முன்வைத்து எதிர்வரும் 28ஆம் திகதி காலை தொடக்கம் முல்லைத்தீவில் தொடர் மக்கள் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

மகாவலிக்கு எதிரான தமிழர் மரபுரிமைப் பேரவை எனும்

பக்கம் 18

# எல்லை நிர்ணய அறிக்கையை நாங்கள்தான் தோற்கடித்தோம்

## வவுனியாவில் மனோ பெருமிதம்

வவுனியா, ஓக.26

மாகாணசபை எல்லை நிர்ணய அறிக்கை தோற்கடிக்கப்பட்டமைக்குப் பின்னால் உள்ள வெற்றி எங்களின் வெற்றி. நானும் சில தமிழ்க் கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும்

பக்கம் 18

# பிரதமர் வியட்நாம் பயணம்

கொழும்பு, ஓக.26

இந்து சமுத்திர மாநாட்டில் பங்கேற்பதற்காகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வியட்நாமுக்கு நேற்றுப் பயணமானார்.

நாளையும், நாளை மறுதினமும்

பக்கம் 18

# நல்லாட்சி அரசிலும் மனித உரிமை மீறல்

## மனித உரிமை ஆணைக்குழு குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக.26

நல்லாட்சி அரசிலும் மனித உரிமை மீறல்கள் நடை

பக்கம் 18

Athavan News

இலங்கை செய்திகள் | உலகச் செய்திகள்

சினிமாச் செய்திகள் | விளையாட்டுச் செய்திகள் | சுவாரசிய துணுக்குகள்

போன்றவற்றை உடனுக்குடன் அறிந்துகொள்ள

www.athavannews.com




Terms & conditions apply. Closing date 10th September 2018 at 10:00 am Sri Lanka time
You must download the Athavan News app to be eligible to enter the raffle.

உங்கள் MOBILE & TABLET களில்

ஆதவன் நியூஸ்

APPS இனை DOWNLOAD செய்து

பெறுமதிமிக்க பரிசில்களை

வெல்லுங்கள்

GET IT ON Google Play

Download on the App Store

நல்லூர் முன்றலில் செப்டெம்பர் 10ஆம் திகதி ( பூங்காவனத் திருவிழா ) மாலை 6 மணிக்கு

அதிஷ்டசாலிகள் தெரிவுசெய்யப்படுவர்

ஆதவன் தொலைக்காட்சி மற்றும் இணையத்தளத்தில் விளம்பரங்கள், மரண அறிவித்தல்களுக்கு

தொடர்பு கொள்ளுங்கள் 011 406 3006 sales@athavannews.com

# ஞானசார தேரருக்கு மன்னிப்பு பெற்றுக்கொடுக்கப் பேச்சு

கொழும்பு, ஓக. 26

நீதிமன்ற அவமதிப்பு குறித்து குற்றவாளியாகக் காணப்பட்டு கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள பொது பல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு ஜனாதிபதி மன்னிப்பை பெற்றுக்கொடுக்கப்பேச்சுக்களை நடத்த புத்தசாசன அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா தீர்மானித்துள்ளார்.

அதன்படி, ஜனாதிபதியுடனும் அமைச்சரவையிலும் இது குறித்து கலந்துரையாட தான் தீர்மானித்துள்ளார் என அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா பொது பலசேனா அமைப்புக்கு அறிவித்துள்ளார்.

பொது பலசேனா அமைப்பின் தேசிய அமைப்பாளர் விதாரந்தெனிய நந்த தேரர் தலைமையிலான குழுவினர் புத்தசாசன அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேராவைச் சந்தித்த போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பொதுபலசேனாஅமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் நீதிமன்றை அவமதித்தார் எனக்கூறி



தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், அனைத்துக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலும் அவரைக் குற்றவாளியாக கண்ட மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த ஓகஸ்ட் 8ஆம்திகதி 19வருட சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

நீதிமன்ற அவமதிப்பு உள்ளிட்ட நான்கு குற்றங்கள் தொடர்பில் விதிக்கப்பட்ட இந்த 19 வருட சிறைத்தண்டனையை 6 வருடங்களில் அனுபவிக்க இதன்போது மேன் முறையீட்டு நீதிமன்றின் தலைமை நீதிபதி ப்ரீத்தி பத்மன் சூரசேன மற்றும் ஷிரான் குணரத்ன ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழு கட்டளையிட்டது.

இந் நிலையில், குற்றவாளியான ஞானசார தேரர் சுகயீனம் காரணமாக ஸ்ரீ ஜயவர்தன புர வைத்தியசாலையில் 5 ஆம் இலக்க சிகிச்சை அறையில் சிகிச்சை பெற்றுவரும் நிலையில் கடந்த திங்களன்று சிறு நீரகம் தொடர்பிலான நோய் நிலைமை காரணமாக அவருக்கு சத்திர சிகிச்சையும் முன்னெடுக்கப்பட்டது. சிறைக்காவலர்களின் பாதுகாப்பில் அவர் தற்போது சிகிச்சைப் பெற்று வருகின்றார்.

2016 ஆம் ஆண்டு ஜனவரி 25 ஆம் திகதி ஹோமாகம நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்ற ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பிலான வழக்கு விசாரணைகளின் இடைநடுவே, கலகம் ஏற்படுத்தும் வண்ணம் நடந்துகொண்டு நீதிமன்றை அவமதித்தார் என, அப்போது ஹோமாகம பிரதான நீதிவானும் தற்போதைய கொழும்பு பிரதான நீதிவானுமாகிய ரங்க திஸாநாயக்க ஊடாக ஞானசார தேரருக்கு எதிராக மேன் முறையீட்டு நீதிமன்றில் முறையிடப்பட்டிருந்தது.

அதன்படி நீதிமன்ற அவமதிப்பு விவகாரத்தை மையப்படுத்தி சட்ட மா அதிபரால் ஞானசார தேரருக்கு எதிராக மேன் முறையீட்டு நீதிமன்றில் முன்வைக்கப்பட்டிருந்த குற்றப்பத்திரிகையில் குறிப்பிடப்பட்டிருந்த நான்கு குற்றச் சாட்டுக்களும் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாக அறிவித்த நீதிபதி, ஞானசார தேரர் குற்றவாளி என முதலில் அறிவித்தார்.

2016 ஆம் ஆண்டு ஜனவரி 25 ஆம்திகதி அல்லது அதனை அண்மித்த நாளொன்றில் ஹோமாகம நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்ற தனக்குச் சம்பந்தமே இல்லாத வழக்கொன்றில் ஆஜராகி நீதிமன்றின் கௌரவம், சட்டத்தின் ஆட்சிக்கு சவால் விடுத்தமை ஊடாக மன்றை அவமதித்தமை, பீ 74/7/10 எனும் வழக்கு (எக்னெலிகொட காணாமல் ஆக்கப்பட்டமைக்குரித்த வழக்கு) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது-

அதனை வழி நடத்திய அரச சிரேஷ்ட சட்டவாதி திலீப பீரிஸை அசிங்கமான வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்தி திட்டி அவமானப்படுத்தியமை, நீதிமன்றின் கட்டளைக்கு செவிசாய்க்காமை, நீதிமன்ற சுயாதீனத் தன்மைக்குச் சவால் விடுத்தமை ஆகிய குற்றச் சாட்டுக்கள் அரசியலமைப்பின் 105 ஆவது அத்தியாயத்துக்கு அமைவாக சட்ட மா அதிபரால் ஞானசார தேரருக்கு எதிராக மேன் முறையீட்டு நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இந்த நான்கு குற்றச்சாட்டுக்களுமே சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டதாக மேன் முறையீட்டு நீதிமன்றம் அறிவித்தது.

அதன்படி முதலாவது, இரண்டாவது குற்றங்கள் தொடர்பில் ஞானசார தேரருக்குத் தலா 4 வருட கடூழிய சிறைத்தண்டனையையும், 3 ஆம் குற்றத்துக்கு 6 வருட கடூழியச் சிறைத் தண்டனையையும், 4 குற்றத்துக்கு 5 வருட கடூழியச் சிறைத் தண்டனையுமாக மொத்தம் 19 வருட கடூழிய சிறைத் தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அதனை 6 வருடங்களில் அனுபவிக்கவும் இதன்போது நீதிமன்றம் உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பில் ஞானசார தேரர் முன்வைத்துள்ள மேன் முறையீடு எதிர்வரும் 29 ஆம் திகதி ஆரப்படவுள்ளமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது

# விசேட அதிரடிப்படையின் தளபதியை கடுமையாக சாடுகிறார் பொன்சேகா

இலங்கையின் விசேட அதிரடிப்படையின் தளபதிக்கு எதிராக முன்னாள் இராணுவத் தளபதியும் அமைச்சருமான சரத்பொன்சேகா முன்வைத்துள்ளகுற்றச்சாட்டுகளால் பெரும்பரபரப்பு எழுந்துள்ளது

நாடாளுமன்ற உரையின்போது அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

நல்லாட்சி அரசு வழங்கியுள்ள சுதந்திரத்தைச் சில பொலிஸ் அதிகாரிகள் தவறாகப் பயன்படுத்துகின்றனர் என சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

சைனாகடையில் புகுந்த எருமை மாடுகள் போல அவர்கள் நடந்துகொள்கின்றனர் எனவும் சரத் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

விசேட அதிரடிப்படையின் தளபதியான பிரதிப் பொலிஸ்மா அதிபர் லத்தீவ் உட்பட சில பொலிஸ் அதிகாரிகள் மீது அவர் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார்

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

லத்தீவ் சைனா கடையில் புகுந்த எருமை மாடு போன்று நடந்து கொள்கின்றார். அவர் எனது ஆதரவாளர்களான இளைஞர்களை துன்புறுத்துகின்றார் .

களனியைச் சேர்ந்த எனது ஆதரவாளர் ஒருவரை போதைப்பொருள் வைத்திருந்தார் என்ற போலி குற்றச்சாட்டின் கீழ் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அவர்கள் எனது ஆதரவாளரின் வீட்டைச் சோதனையிட்டனர் தங்களுக்கு தகவல் கிடைத்தது என தெரிவித்தே அவர்கள் சோதனையை மேற்கொண்டனர் .

எனினும், அவர்களால் அந்த வீட்டிலிருந்து எதனையும் கண்டுபிடிக்க முடியவில்லை. பின்னர் அந்த வீட்டிலிருந்து 80 மீற்றர் தொலைவில் உள்ள ஆற்றுக்கரை யோரத்திலிருந்து கொக்கெய்னை மீட்டதாக தெரிவித்தனர்.

இதற்கு சில நாளகளிற்கு பின்னர் அந்த வீட்டை மீண்டும் சோதனையிட்ட பொலிஸார், அந்த வீட்டில் குண்டுதயாரிக்கப்படுவதாக குற்றம்சாட்டியுள்ளனர். ஆனால் பழைய கைக்குண்டையே மீட்டுள்ளனர்.

எனது மற்றுமொரு ஆதரவாளர் இயந்திரங்களை வாடகைக்கு விடுபவர். அவர் தன்னிடம் இயந்திரங்களை வாடகைக்குப் பெறும் வாடிக்கையாளர்களின் அடையாள அட்டையை வாங்கி வைப்பது வழக்கம் இந் நிலையில் அவரிடம் பல அடையாள அட்டைகள் இருந்தன எனத் தெரிவித்து அவரைக் கைதுசெய்துள்ளனர். இந்தக் கைதுகள் அனைத்திற்கும் விசேட அதிரடிப்படையின் தள பதி லத்தீவ் காரணம்.

நான் இந்த விடயத்தை சட்ட மொழுங்கு அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுசென்றேன். அப்பாவிகளைத் துன்புறுத்த வேண்டாம் என கேட்டுக்கொண்டேன். எனினும் லத்தீவ் தொடர்ந்தும் அப்பாவிகளை துன்புறுத்துகின்றார்

பொலிஸாரை ஒழுங்குடன் நடக்க செய்யாவிட்டால் நல்லாட்சி என கோசமிடுவதில் அர்த்தமில்லை எனவும் சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.

## யாழ்., கிளிநொச்சி முஸ்லிம் மக்களின் மூன்றாம் நாள் ஒன்று கூடல் இன்று

### தவிசாளர் பாயிஸ் - மேயர் ஆனல்ட் கௌரவிப்பு

யாழ்.கிளிநொச்சி முஸ்லிம் பேரவையின் ஏற்பாட்டில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் நடைபெற்று வரும் யாழ். மற்றும் கிளிநொச்சி முஸ்லிம் மக்களின் ஒன்று கூடல் நிகழ்வு - மூன்றாவது நாளான இன்று ஞாயிற்றுக்கிழமையுடன் நிறைவுறும்.

யாழ். ஒஸ்மானியா கல்லூரி வளாகத்தில் இன்றைய மூன்றாம் நாள் நிகழ்வாக நல்லெண்ண கௌரவிப்பு அமர்வு இடம்பெறும். பிற்பகல் 3.45 மணிக்கு ஆரம்பமாகும். இந் நிகழ்வுக்கு வடக்கு மாகாண சபை உறுப்பினர் அய்யூப் அஸ்மின் தலைமை வகிப்பார்.

புத்தளம் நகர சபை தவிசாளர் கே.ஏ.பாயிஸ் மற்றும் யாழ். மாநகர சபை முதல்வர் இம்மானுவல் ஆனோல்ட் ஆகியோர் வரவேற்று கௌரவிக்கப்படுவர்.

இன்றைய இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா (நா.உ) வும், விசேட விருந்தினர்களாக யாழ். இந்தியத் தூதரக துணைத் தூதுவர் எஸ். பாலசந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான கே.எஸ். டக்ளஸ் தேவானந்தா, ஈ.சரவணபவன், விஜயகலா மகேஸ்வரன், வடக்கு மாகாண சபையின் தவிசாளர் சி.வி.கே. சிவஞானம், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் ச.சுகிர்தன், ஆர். ஜெயசேகரன் ஆகியோர் கலந்து கொள்வர்.

(இ-19)

# யாழ். சென்ற பஸ் நடத்துனர் மீது வவுனியாவில் நேற்றுத் தாக்குதல்

வவுனியா புதிய பஸ் நிலையத்தில் நேற்று அதிகாலை 3.00 மணியளவில் தனியார் பஸ் நடத்துநர் மீது தாக்குதல் மேற்கொண்ட தனியார் வங்கியின் உத்தியோகத்தர் உட்பட மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பதுளையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த தனியார் பேருந்து வவுனியா புதிய பஸ் நிலையத்தில் தரித்து நின்றுள்ளது.

இதன்போது அந்த பஸ்ஸின் நடத்துனர் அதிகளவு கட்டணம் பெற்றுள்ளார் என தெரிவித்து நடத்துனர் மீது அப் பஸ்ஸில் பயணம் மேற்கொண்ட தனியார் வங்கியின் உத்தியோகத்தர் மற்றும் அரச உத்தியோகத்தர் உட்பட மூவர் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் காயமடைந்த நடத்துநர் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காகக் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

நடத்துநர் மீது தாக்குதல் மேற்கொண்ட மூவரையும் கைது செய்த வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தம்பியை இழந்து தவிக்கும் மஹிந்தவுக்கு நேரில் சென்று ஆறுதல் சொன்ன மைத்திரி!

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரருக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சென்றுள்ளார்.

நேற்று காலை வீரகெட்டிய மெதமுலன வீட்டுக்கு ஜனாதிபதி சென்றுள்ளார். முன்னாள் ஜனாதிபதி உட்பட அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்குஜனாதிபதிமைத்திரி ஆறுதல் தெரிவித்தார்.

இதன்போது மைத்திரி – மஹிந்தவுக்கு இடையில் நீண்ட கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்றுள்ளது. இதன்போது முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவும் உடனிருந்தார்.



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரர் சந்திரா டியுடர் ராஜபக்ஷ கடந்த சில தினங்களுக்கு முன்னர் மரணமடைந்தார். அவரின் இறுதி நிகழ்வுகள் நேற்று இடம்பெற்றது.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி வீட்டை நோக்கிப் பெருமளவு அரசியல்வாதிகள் உட்பட ஆதரவாளர்கள் படையெடுத்து வருகின்றனர்.

இதன் காரணமாக தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளது. தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் கடவெல, பின்னடுவ, வெலிபென்ன மற்றும் மாத்தறைப் பகுதிகளில் நீண்ட வரிசையில் வாகனங்கள் தரித்து நின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ராஜபக்ஷ தரப்புடன் மைத்திரி நேற்று அரசியல் பேசவில்லை

### மெதமுலன வட்டாரங்கள் தகவல்

கொழும்பு, ஓக.26

மெதமுலனவுக்கு ஜனாதிபதி சிறிசேன நேற்று மேற்கொண்ட பயணத்தின்போது இடம்பெற்ற கலந்துரையாடலில், ராஜபக்ஷ தரப்பினருடன் அரசியல் விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட வில்லையென ராஜபக்ஷ தரப்பினருக்கு நெருக்கமான வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின் றது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வின் இளைய சகோதரர் சந்திரா ராஜபக்ஷவின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக நேற்றுக் காலை மெதமுலனவிலுள்ள ராஜபக் ஷக்களின் பாரம்பரிய இல்லத்துக்கு ஜனாதிபதி சிறிசேன சென்றிருந்தார்.

இதன்போது முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் ஜனாதிபதியை வரவேற்றமையுடன் கலந்துரை யாடலிலும் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது, முன்னாள் ஜனாதிபதியின் சகோதரரின் மறைவு தொடர்பாகவே கலந் துரையாடப் பட்டதாகவும், அரசியல் விடயங்கள் ஏதும் கலந்துரையாடப்படவில்லை என்பதைத் தன்னால் உறுதிப்படுத்த முடியும் என்றும் முன்னாள் ஜனாதிபதியின் உதவியாளரொரு வர் தெரிவித்தார்.

கடந்த 2014ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ராஜபக்ஷ அரசில் இருந்து வெளியேறியதன் பின் னர் மெதமுலனவுக்கு ஜனாதிபதி மைத் திரி மேற்கொண்ட முதலாவது பயணம் இது வாகும். (ஐ)

# மகாவலித் திட்டத்தை அரசு கைவிடும்வரை போராட்டம்

## சிவசக்தி ஆனந்தன் அறிவிப்பு



வவுனியா, ஓக.26

**மகாவலி அபிவிருத்தி அதிகார சபையினால் மகாவலி நீரை வழங்கும் திட்டம் என்ற பெயரில் வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் பாரம்பரிய காணிகளைக் கபளீகரம் செய்வதற்கு எதிராகத் தாங்கள் தொடர்ந்து போராடவுள்ளனர் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.**

அத்துடன் மகாவலி திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து மகாவலி எதிர்ப்பு தமிழர் மரபுரிமை பேரவை எதிர்வரும் 28 ஆம் திகதி நடத்தவுள்ள போராட்டத் துக்குத்தாங்கள் முழு ஆதரவை வழங்க வுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் நேற்று அவர் வெளி யிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளவை வருமாறு:-

வடக்கு,கிழக்கை நிரந்தரமாகப் பிரிப்பதற்கும், எமது பிரதேசத்தில் அரச அனுசரணையுடன் திட்டமிட்ட சிங்களக் குடி யேற்றங்களை ஏற்படுத்தி, எம்மை எமது பிரதேசத்திலேயே சிறுபான் மையினராக்குவதற்கும் அரசினால் மேற்கொள்ளப்படும் முயற்சியை முறியடிக்கவேண்டியது எம் அனை வரதும் கடமையாகும். அந்த வகையில் மகாவலி எதிர்ப்பு தமிழர் மரபுரிமைப் பேரவையின் கண்டனப் பேரணிக்கு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன் னணியும் தனது ஆதரவைத் தெரிவித் துள்ளது.

அரசின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள், தமிழினத்தின் மர புரிமையைத் திட்டமிட்டுச் சிதைப்ப துடன் இனப்பரம்பலையும் மாற்றிய மைத்து, தமிழினத்தின் அரசியல் உரிமைகளை பலவீனப்படுத்தும் நட வடிக்கைகளாகும்.

மகாவலி அபிவிருத்தித் திட்டம் என்ற போர்வையில் கபடநாடகம் ஒன்றை அரசு மேற்கொண்டு வருகின்றது. இதன் வெளிப்பாடே நெடுங்கேணிப் பிரதேசசபைக்கு 14 சிங்கள உறுப்பினர் களும் 11 தமிழ் உறுப்பினர்களும் அண்மையில் தெரிவு செய்யப்பட்ட நிகழ்வாகும்.

வடக்கு மாகாணத்துக்குக் காணி அதிகாரத்தை இல்லா தொழித்து இங் கும் சிங்களப் பெரும்பான்மையை நிறுவிதமிழன் மரபுரிமையை வேரறுத்து அரசியல், பொருளாதார, கலாசார ரீதி யாக தமிழினத்தை மலினப்படுத்தும் நோக்குடன் உருவாக்கப்பட்ட இந்தத் திட்டத்தை தடுத்திடத் தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண் டும்-என்றார். (ஐ)

## தாக்குதல்களின் பின்னணியில் வடமராட்சிப் பகுதி இளைஞர்

யாழ்ப்பாணம், ஓக.26

யாழ்ப்பாணத்தில் ஆவா குழுவை இலக்கு வைத்து நடத்தப்படும் மிரட்டல் தாக்குதல்களின் பின்னணியில் வடமராட்சி இளைஞர் ஒருவர் உள்ளார் என்று விசாரணைகளில் தெரியவரு வதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சமூக ஆர்வலர்கள் என்று குறிப்பிட்ட துண்டறிக்கையையும் அந்த இளைஞரின் அணியினரே வெளியிட்டுள்ளனர் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

யாழ்ப்பாணம் கலட்டிச் சந்திப் பகுதியில் அண்மையில் வடமராட்சி இளைஞர் ஒருவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் இடம் பெற்றது. ஆவா குழுவைச் சேர்ந்தவர்கள் சிலரே அந்த இளைஞர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தி யிருந்தனர்.

அதனால் ஆவா குழுவைச் சேர்ந்தவர் களைப் பழிதீர்க்கும் நோக்கில் வடமராட்சி இளை ஞர் மிரட்டல் தாக்குதலை முன்னெடுக்கிறார். அவருக்குப் பின்னால் ஆவா குழுவால் பாதிக் கப்பட்ட இளைஞர்கள் சிலரும் முகநூல் ஊடாக இணைந்து அண்மைக் காலமாக வன்முறை களில் ஈடுபடுகின்றனர் என்று பொலிஸார் மேலும் கூறினர். (ஐ)

## பேராசிரியர் ஹஸ்புல்லாஹ் யாழ்ப்பாணத்தில் மறைவு



யாழ்ப்பாணம், ஓக.26

யாழ். பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினரும், பேராதனைப் பல்கலைக் கழகபுவியியல்துறைமுன் னாள் சிரேஸ்ட விரிவுரை யாளருமான பேராசிரியர் எஸ்.எச்.ஹஸ்புல்லாஹ் (வயது-64) யாழ்ப்பா ணத்தில் நேற்றுக் காலமானார்.

நேற்று நடைபெற்ற பல்கலைக்கழகப் பேரவைக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த நிலையில் திடீ ரென ஏற்பட்ட சுகயீனம் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் அவர் சேர்க்கப்பட்டார். எனி னும் அவர் உயிரிழந்தார் என மருத்துவர்களால் தெரிவிக்கப்பபட்டது.

இவரது ஜனாஸா யாழ். போதனா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இவர் தற்போது மாகாண எல்லை நிர்ணய ஆணைக்குழு உறுப்பினராகவும் செயற்பட்டுள் ளமையுடன் மாகாண சபை எல்லை நிர்ணய அறிக்கையில் முஸ்லிம்களுக்கு அநீதி இழைக்கப் பட்டுள்ளதாகக் கூறி முஸ்லிம் மக்களுக்கு விழிப் பூட்டல் நிகழ்வு களையும் அவர் நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கடற்படையின் முன்னாள் தளபதிகள் இருவர் மீது கண் வைத்துள்ள சி.ஐ.டி.

கொழும்பு, ஓக. 26

சட்ட மா அதிபரின் ஆலோ சனை கிடைக்குமானால், முன் னாள்கடற்படைத்தளபதிகளான அட்மிரல் வசந்த கரன்னகொட வையும், அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவையும் கைது செய்ய குற்றப் புலனாய்வாளர் (சி.ஐ.டி) தயாராக இருப்பதாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் உயர் அதிகாரி ஒருவர் தெரி வித்தார்.

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் வைத்து 2008ஆம்ஆண்டு5மாணவர் கள்உள்ளிட்ட11பேரைவெள்ளை வானில் கடத்திச் சென்று, சட்ட விரோதமாகத் தடுத்து வைத்துக் கப்பம்பெற்றமைமற்றும்காணா மல் ஆக்கியமை தொடர்பில் நேரடியாகவோ, மறைமுக மாகவோ பொறுப்புக் கூற வேண்டியவர்கள் எனும் அடிப் படையில் இவர்கள் இருவர் குறித்தும் குற்றப் புலனாய் வுப் பிரிவு சாட்சிகளைச் சேகரித் துள்ள நிலையிலேயே, அது தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனை கோரப்பட்டுள்ள தாகவும், அந்த ஆலோசனை கிடைக்குமாயின் அவர்கள் இருவரும் உடன் கைது செய்யப் படுவர் எனவும் அந்த அதிகாரி மேலும் கூறினார்.

இதில் முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னகொட, இந்த கடத்தல்கள் மற்றும் கப் பம் கோரல்களை அறிந்தி ருந்தமைக்கான சான்று களைக் குற்றப் புலனாய்வுப் பிரிவு கண்டறிந்துள்ளது.

அதன்படி அவரை இந்தச் சம்பவத்துக்காகக் கைது செய்ய முடியுமா எனச் சட்டமா அதிபர் ஆலோசித்து வருகிறார் எனவும், அந்த ஆலோசனை கிடைத் ததும் வசந்த கரன்னகொட தொடர்பில் தீர்மானம் எடுக்கப் படும் எனவும் சி.ஐ.டி. தெரிவிக் கின்றது.

இந் நிலையில் முன்னாள் கடற்படைத் தளபதியும் தற்போ தைய முப்படைகளின் அலுவல கப் பிரதானியுமான அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவை இந்தக் கடத்தல் விவகாரத்தில் பிரதான சந்தேகநபரான லெப்டி னன்ட் கொமாண்டர் ஹெட்டி ஆராச்சி முதியன்சலாகே சந் தன பிரசாத் குமார ஹெட்டி ஆராச்சினுநேவிசம்பத்துக்கு அடைக்கலம் கொடுத்தமை, நாட்டைவிட்டுத் தப்பிச் செல்ல உதவியமை, நியாயத்தைப் பெற்றுக்கொடுக்கும் செயற் பாடுகளில் அநீதியான முறை யில்தலையீடுசெய்தமைதொடர் பில்கைது செய்வதற்கான விசா ரணைகள் ஆரம்பிக்கப்பட் டுள்ளன.

இது தொடர்பில் கோட்டை நீதிவானிடம்தனியானவழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ள நிலை யில், அந்த விசாரணைகள் முக்கிய கட்டத்தை அடைந்துள் ளன என சி.ஐ.டி. தெரிவித்தது.

அதன்படிநேவிசம்பத்துப்பிச் செல்ல, கடற்படைத் தளபதிக்கு சொந்தமான கணக்கில் இருந்து பணம் வழங்கப்பட்டுள்ளதாக கிடைக்கப் பெற்றுள்ள தகவல் களுக்கு அமையமக்கள்வங்கிக் கணக்கொன்றைச்சோதனைக்கு உட்படுத்தநீதிமன்றஅனுமதியும் பெறப்பட்டுள்ளது எனக் கூறப் படுகின்றது. (ஐ)

## வவுனியாவில் விபத்து; இரண்டு பேர் படுகாயம்

வவுனியா, ஓக.26

யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த கனரக வாகனம் ஒன்று கனகராயன்குளம் கொல் லர்புளியங்குளம் பகுதியில் வேகக்கட்டுப் பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி விபத்துக் குள்ளானது.

நேற்று அதிகாலை இந்த விபத்து இடம் பெற்றது. இதனால் வாகனத்தின் சாரதி மற் றும் உதவியாளர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள னர். விபத்து தொடர்பான மேலதிக விசாரணை களைக் கனகராயன்குளம் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ஐ)



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## கூட்டு எதிரணியை எதிர்கொள்ள ஐ.தே.கட்சியின் மாற்று யோசனை

வாக்களிப்பையும் மக்கள் தீர்ப்பையும் எதிர்கொள்ள அஞ்சும் ஆட்சியாளர்கள், ஏதேதோ சாக்குப் போக்குச் சொல்லி தேர்தல்களைத் தள்ளிப் போடப் பார்க்கின்றார்கள்.

மாகாண சபைத் தேர்தல்களை இழுத்தடிக்கும் கைங்கரியம் ஒருவாறு வெற்றிகரமாக ஒப்பேறுகின்றது.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான முறையான சட்டம் இப்போது நாட்டில் நடைமுறையில் இல்லை. இருந்த சட்டத்தை மாற்றுகின்றோம் என்ற பெயரில் பழைய சட்டத்தை ஒழித்தாயிற்று; நீக்கியாயிற்று.

புதிய சட்டத்தைக் கொண்டு வரும் முயற்சியையும் குறைப் பிரசவத்தில் தோற்கடித்தாயிற்று.

இப்போது மாகாண சபைத் தேர்தலை எப்படி நடத்துவது என்பதற்கு ஒரு சட்டம் நடைமுறையில் இல்லை.

எத்தகைய முறையில் அத்தேர்தலை நடத்துவது என்பதில் கட்சிகளிடையே முரண்பாடு, எதிரெதிர் நிலைப்பாடு நீடிக்கின்றது என்ற காரணத்தைக் காட்டியே அந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதையும், அதன் மூலம் அத்தேர்தலையும் இன்னும் சில காலத்துக்கு வெற்றிகரமாக அரசினால் இழுத்தடிக்க முடியும்.

ஆக, மாகாண சபைத் தேர்தல்கள் ஆறு மாதங்களோ, ஒரு வருடமோ நடத்தப்படாமல் தள்ளிப் போகும் என்பதை இப்போதே ஊகித்து உறுதியாகக் கூறிவிட முடியும்.

ஆனால், அதைத் தொடர்ந்து அடுத்த வருட இறுதிப் பகுதியில் – பெரும்பாலும் அடுத்த நவம்பரில் – அல்லது அதற்கு முன்னர், ஜனாதிபதித் தேர்தலை நடத்தியாக வேண்டும். அதைத் தள்ளிப் போடவோ, ஒத்திவைக்கவோ வாய்ப்புகள் குறைவு.

அதற்கு முன்னர் மாகாண சபைத் தேர்தலை நடத்தி, அதன் மூலம் – தமது பொட்டுக்கேடு வெளிப்பட்டு விட்டால் – மூக்குடைபட்டு விட்டால் – ஜனாதிபதித் தேர்தலுக்கு முகம் கொடுக்கவே முடியாது என அஞ்சும் ஆட்சியாளர்கள், அதனால்தான் மாகாண சபைத் தேர்தலைத் தள்ளிப் போட சாணக்கிய நகர்வுகளை முன்னெடுக்கின்றனர்.

மாகாணத் தேர்தல்களைத் தள்ளிப்போடப்படவும் வேண்டும். ஆனால் அதற்குக் காரணம் தாங்கள்தான் என்று அவப்பெயர் தங்கள் மீது வந்து விடவும் கூடாது என்று கருதி ஆட்சியாளர்கள் காய் நகர்த்துகின்றனர் என்பது தெளிவு.

கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் முகம் குப்புற விழும் விதத்தில் கிடைத்த அடி காரணமாக, ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் மாகாண சபைத் தேர்தலை நடத்த அஞ்சுகின்றனர் அவர்கள். உள்ளூராட்சித் தேர்தல் முடிவுப் போக்கோ – அல்லது அதை விட இன்னும் விபரீதமான நிலைப்பாடோ – மாகாண சபைத் தேர்தல்களின் போது மக்களினால் பிரதிபலிக்கப்படுமானால் தங்கள் நிலைமை அதோ கதிதான் என்பது அவர்களுக்குத் தெரியும். எனவே தேர்தலைகளை இழுத்தடிப்பதில் தீவிரமாகவும் தந்திரமாகவும் அவர்கள் இருக்கின்றனர்.

ஆனால், ஜனாதிபதித் தேர்தலை உரிய காலத்தில் எதிர்கொண்டாக வேண்டும். அதைத் தள்ளிப் போட்டு உச்ச முடியாது.

விஸ்வரூபம் எடுத்து வரும் கூட்டு எதிரணியை எப்படிக் கட்டுப்படுத்தி அடக்குவது, ஜனாதிபதித் தேர்தலில் அதன் எழுச்சியை எப்படி மடக்குவது என்று தெரியாமல் நல்லாட்சி அரசு தடுமாறுகின்றது.

பொதுவேட்பாளர் என்ற அணுகுமுறை இனிச் செல்லாது. ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தமது அரசியல் வாழ்வின் முதிர்வு நிலையில் இருக்கின்றார். ஏற்கனவே பொதுவேட்பாளர் என்ற பெயரில் சரத் பொன்சேகாவுக்கும் மைத்திரிபால சிறிசேனவுக்கும் அவர் இரண்டு தடவைகள் விட்டுக் கொடுத்தாயிற்று. இனி விட்டுக் கொடுத்தால் ஜனாதிபதி பதவி அவர் வாழ்க்கையில் இப்போதே வெறும் கனவாகிப் போய்விடும்.

அதனால் ஐ.தே.க. பக்கத்தில் கூட்டு எதிரணித் தரப்பைக் கட்டுப்படுத்த வேறு மாற்று யோசனை முன்வைக்கப்படுகின்றதாம்.

2015 ஜனாதிபதித் தேர்தலின் போது ஜனாதிபதி பதவிக்கு பொது வேட்பாளராக மைத்திரிபால சிறிசேனவையும், பிரதமர் பதவிக்கு ரணில் விக்கிரமசிங்கவையும் நிறுத்தியமை போல –

2019 ஜனாதிபதித் தேர்தலின் போது பொது வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்கவையும், பிரதமர் வேட்பாளராக மைத்திரிபால சிறிசேனவையும் நிறுத்துவது. இந்த ஏற்பாட்டில் ஐ.தே. கட்சியும் சு.கவும் ஒன்றுபட்டு நின்றால் கூட்டு எதிரணியைத் தோற்கடிக்க முடியும் என்ற யோசனை ஐ.தே.க. தரப்பினால் முன்வைக்கப்பட்டிருக்கின்றதாம்.

இதை மைத்திரி தரப்பு ஏற்றுக் கொள்ளுமா, ஐ.தே.க. – சு.க. இணைந்த நல்லாட்சி அரசின் தேனிலவுக் காலம் அடுத்த ஜனாதிபதித் தேர்தலின் போதும் நீடிக்குமா என்பவற்றை எல்லாம் பொறுத்திருந்தான் பார்க்க வேண்டும்.

கூட்டு எதிரணி என்ற பெயரில் விஸ்வரூபம் எடுத்து வரும் மஹிந்த தரப்பைக் கட்டுப்படுத்துவதாயின் நல்லாட்சி அரசின் ஒற்றுமை தொடர வேண்டும்.

ஆனால் அது நீடிக்குமா என்பது கேள்விக்குறியே.

# அனைத்து மாகாண சபைகளுக்கும் உடனடியாக தேர்தலை நடத்துங்கள்!

## சிறிநேசன் எம்.பி. கோரிக்கை



மட்டக்களப்பு, ஒக 26

மாகாணசபைத் தேர்தலை உடனடியாக நடத்தவேண்டுமாயின்பழையதேர்தல்முறையே சாத்தியமானதாக இருக்கும். மீண்டும்மீண்டும்திருத்தங்களைமேற்கொண்டவாறு இருந்தோமானால் கால தாமதங்களே ஏற்படும். எனவே கலைக்கப்பட்ட ஆளுநர்கள் வசமுள்ள அனைத்து மாகாண சபைகளுக்கும் உடனடியாக தேர்தலைநடத்திஅவற்றை மக்கள்பிரதிநிதிகளிடம்ஒப்படைக்க வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் கோரியுள்ளார்.

புதிய தேர்தல் முறைக்கான எல்லைநிர்ணய அறிக்கைதொடர்பாக நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் :-

இனவாரிப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறைக்கு ஓர் முடிவு கட்ட வேண்டும் என்பதற்காகவே 1931 ஆம் ஆண்டில் வட்டார முறையிலான (பிரதேசவாரி) பிரதிநிதித்துவ முறையை எமது நாட்டுக்கு ஆங்கிலேயர்கள் அறிமுகம் செய்து வைத்தார்கள். இருந்தும் இம்முறையில் கட்சிகள் பெறுகின்ற வாக்குகளுக்கு ஏற்ப ஆசனங்கள் வழங்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு காணப்பட்டமையால் 1978 ஆம் ஆண்டில் விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறை அறிமுகம் செய்யப்பட்டிருந்தது.

இந்த விகிதாசாரத் தேர்தலில் உள்ள விருப்பு வாக்கு முறைமையால் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன எனத் தெரிவித்தே அத் தேர்தல் முறையானது திருத்தப்பட்டு விகிதாசார முறையில் 40 வீதமும் வட்டார முறையில் 60 வீதமுமாக கலப்பு முறையில் கடந்த உள்ளூராட்சி தேர்தல்கள் நடத்தப்பட்டன. இந்தத் தேர்தல் முறையைக் கோட்பாடு ரீதியாக சிந்திப்பதிலிருந்து செயற்பாட்டு ரீதியாக பார்க்கும் போது பல குறைபாடுகளைக் கொண்டுள்ள ஒருதேர்தல்முறையாகவேகாணப்படுகின்றது. அதாவது இலங்கையில்உள்ளஉள்ளூராட்சிமன்றங்களில் பெரும்பலான சபைகள் அறுதிப் பெரும்பான்மையை பெறுவதில் சிக்கல் நிலையை எதிர்நோக்கி உள்ளன.

அத்துடன் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஏற்கனவே விகிதாசார முறையில் தமிழர்கள் பெற்றுவந்த வாக்குகள், ஆசனங்களை கூட இந்த புதிய தேர்தல் முறையில் இழக்கக் கூடியசந்தர்ப்பங்களும்உள்ளன. குறிப்பாக மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் மன்னார் மாவட்டங்களில் ஆசனங்களை இழப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன.

அதுமட்டுமன்றி அறுபதுக்கு நாற்பது, ஐம்பதுக்கு ஐம்பது என மீண்டும்மீண்டும்திருத்தங்களை மேற்கொண்டவாறு இருந்தோமானால் கால தாமதங்களே ஏற்படும். ஏற்கனவே கலைக்கப்பட்டு மக்களால் தெரிவு செய்யப்படாத ஆளுநர்கள் வசம் உள்ள அனைத்து மாகாண சபைகளுக்கும் உடனடியாகத் தேர்தலை நடத்தி அவற்றை மக்கள் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கவேண்டும். அவ்வாறு உடனடியாக தேர்தலை நடத்த வேண்டுமாயின் பழைய தேர்தல் முறையே சாத்தியமானதாக இருக்கும்–என்றார்.(ஐ)

# கற்சிலைமடு சுற்றுலா மையம் திறப்பு




முல்லைத்தீவு, ஒக.26

வடக்கு மாகாண சபையின் 2017 ஆம் ஆண்டு சுற்றுலா அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் கற்சிலைமடுப் பகுதியில் 40 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட கற்சிலைமடு சுற்றுலா மையம் நேற்று முன்தினம்திறந்துவைக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு பிரதேச சபைத் தவிசாளர் செ.பிறேமகாந்த் இதனைத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர்கள், முல்லை மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஜே.ராஜமல்லிகை, புதுக்குடியிருப்புப் பிரதேச சபைச் செயலாளர், பண்டாரவன்னியன் அறங்காவல்அமைப்பின்உறுப்பினர்கள், புதுக்குடியிருப்பு பிரதேச சபை ஊழியர்கள், பொதுமக்கள், நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ)

## பண்டாரவன்னியன் வெற்றி நாள் முல்லைத்தீவில் நினைவு நிகழ்வு



முல்லைத்தீவு, ஒக 26

முல்லைத்தீவு கோட்டையை மாவீரன் பண்டாரவன்னியன் வெற்றி கொண்ட 215ஆம் ஆண்டு வெற்றி நாள் நேற்று நினைவு கூரப்பட்டது.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் கரைதுரைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் சின்னராசா லோகேசுவரன் ஆகியோரால் முல்லைத்தீவு நகரப் பகுதியில் அமைந்துள்ள பண்டாரவன்னியனின் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து மலர் தூவி நினைவு கூரப்பட்டது. (ஐ)

## வாகன விபத்தில் ஒருவர் சாவு

தம்புள்ளை, குருநாகல் பிரதான பாதையில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கலேவெல பொலிஸ் பிரிவிலுள்ள இப்பன்கட்டுவ என்ற இடத்தில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

கப் ரக வாகம் ஒன்றின் பின் பகுதியில் லொறி ஒன்று மோதியதில் அந்தக் கப் வாகனம் அருகிலிருந்த வியாபார நிலைய மதிலில் மோதியதில், கப் வாகனத்தில் இருந்த ஒருவரே உயிரிழந்துள்ளார்.

## நாளை

27.08.2018
திங்கட்கிழமை
நட்சத்திரம் : சதயம் பி.ப. 3.55 வரை
திதி: பிரதமை மு.இ. 7.11 வரை
சுபநேரம் : 12.05 – 1.35 வரை
இராகுகாலம் :7.35 – 9.05 வரை

# இரண்டாயிரத்து 400 கிராமிய குளங்களை மறுசீரமைக்கும் வேலைத்திட்டம் ஆரம்பம்!

நாடளாவிய ரீதியில் இரண்டாயிரத்து 400 கிராமிய குளங்களை மறுசீரமைக்கும் வேலைத்திட்டம் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

நேற்று முன்தினம் முற்பகல் பத்து மணிக்கு கூடியுள்ள சுபநேரத்தில் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. முதற்கட்டமாக பொல்பித்திகம கும்புக்குலாவ குளம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார். நாட்டுக்கு உரித்தான விவசாய தொழில்நுட்பத்தின் மூலம் உள்நாட்டு விவசாயத் துறையிலும் விவசாயப் பொருளாதாரத்திலும் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவது இதன் நோக்கமாகும். ஜனாதிபதியின் வழிகாட்டலின் கீழ் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. இதன்கீழ் குருநாகல் மாவட்டத்தில் மாத்திரம் 300 குளங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

வடமேல் மாகாணத்திற்கு நீர் வழங்கும் வயம்ப எல அபிவிருத்தித் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகளும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட இருக்கின்றன. இதன்மூலம் 13 ஆயிரத்து 500 விவசாயக் குடும்பங்கள் நன்மையடைய இருக்கின்றன. ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி உதவி வழங்குகிறது.

வடமேல் மாகாணத்தின் விவசாயிகளினதும் அரசியல் பொறுப்பதிகாரிகளினதும் கோரிக்கைக்கு அமைய மஹாவலி நீரை வடமாகாணத்திற்கு எடுத்துச் செல்வது இந்த வேலைத்திட்டத்தின் இலக்காகும். செலவிடப்படும் தொகை ஆயிரத்து 600 கோடி ரூபாவாகும். 2020 ஆம் ஆண்டளவில் நிர்மாண பணிகள் பூர்த்தி செய்யப்படவுள்ளன. இதன்மூலம் 12 ஆயிரத்து 500 விவசாய குடும்பங்களுக்குத் தேவையான பாசன நீர் வழங்கப்படும். 40 ஆயிரம் குடும்பங்கள்; குடிதண்ணீர் அனுகூலங்களை பெறவுள்ளன.

# அரசு மீதான எதிர்ப்பலையை செப்.5 கொழும்பில் பாருங்கள்


மஹிந்த தெரிவிப்பு

நாட்டில் இன்று பொருட்களின் விலையைக் கட்டுப்படுத்த முறைமையொன்று இல்லை எனவும், மக்களின் பிரச்சினைகளை அரசிலுள்ள மக்கள் பிரதிநிதிகள் கண்டுகொள்ளாதிருக்கின்றனர் என்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு–

நாட்டில் இன்று மக்களுக்கு தலைக்கு மேல் பிரச்சினைகள் அதிகரித்துள்ள நிலையில் நாட்டில் மக்கள் சந்தோஷமாக இருப்பதாக அமைச்சர்கள் அறிவித்தல் விடுத்து வருகின்றனர். இதனைக் கேட்கும் மக்களுக்குச் சிரிப்பு தான் வரும் .

மக்களின் பிரச்சினைகளை மறந்து கைவாறு அடித்துக் கொண்டிருக்கும் இந்த நல்லாட்சி அரசுக்கு எதிராக நல்லதொரு பாடத்தைப் புகட்டுவதற்கு எதிர்வரும் செப்ரெம்பர் 5 ஆம் திகதி கொழும்பில் பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று இடம்பெறவுள்ளது என்றும் மஹிந்த ராஜபக்ஷ மேலும் குறிப்பிட்டார். (க)

# தேர்தல் முறையைக் கட்சிகள் இனவாதமாகப் பார்க்கக்கூடாது

## பைஸர் முஸ்தபா தெரிவிப்பு

தேர்தல் முறைமை மாற்றத்தை இனவாதக் கோணத்தில் பார்க்க வேண்டாமென அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

கலப்பு முறையால் இனத்துக்கான பிரதிநிதித்துவம் கிடைக்காது எனச் சில கட்சிகள் குறிப்பிடுவது வெறும் மாயையாகும். இனத்துவக் கட்சியின் கவலையெல்லாம் கட்சிக்கான பங்கு கிடைக்கவில்லையென்பதேயாகும் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சில கட்சிகள் இனவாதக் கோணத்தில் இதனைப் பார்க்கின்றன. நாடு ஏற்கனவே பாரிய இன முரண்பாட்டுக்கு முகங்கொடுத்திருப்பதால் மீண்டும் இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை ஏற்படுத்த வேண்டாம் எனக் கேட்டுக் கொள்வதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு–

தொகுதிவாரி முறையையும் உள்ளடக்கிய கலப்பு முறையான தேர்தல் முறையை மாற்ற முயற்சிப்பவர்கள் ஜனநாயகத் துரோகிகளாவார்கள்.

தற்போதுள்ள விருப்புவாக்குமுறை மோசடி நிறைந்த முறை என்பதாலேயே ஜன நாயகத்தை நிலைநாட்ட தொகுதிவாரி முறையையும் உள்ளடக்கிய கலப்புமுறையைக் கொண்டு வந்தோம் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# 36 ஆயிரம் டெங்கு நோயாளர் நாடளாவிய ரீதியில் கண்டறிவு



கொழும்பு, ஓக.26

கொழும்பு மாவட்டத்தில் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 785 ஆல் அதிகரித்துள்ள து என்றும் இந்த வருடத்தின் ஆரம்பம் முதல் ஓகஸ்ட் மாதத்தில் இது வரையில 36 ஆயிரத்து 7 நோயாளர்கள் நாடளாவிய ரீதியில் இனங்காணப்பட்டுள்ளனர்.

மேலும் ஓகஸ்ட் மாதத்தில் மாத்திரம் 2788 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன், கொழும்பு உள்ளிட்ட கம்பஹா ஆகிய மாவட்டங்கள் மற்றும் கண்டி மாவட்டத்திலும் அதிகளவான டெங்கு நோயாளர்கள் அடையாளங்காணப்பட்டுள்ளனர் என டெங்கு நோய் கட்டுப் பாட்டுப் பிரிவு அறிவித்துள் ளது.

இந்த வருடத்தின் ஜனவரி மாதம் முதல் இதுவரையில் கொழும்பு மாவட்டத்தில் 6 ஆயிரத்து 937 நோயாளர்களும் கொழும்பை அண்மித்த மாவட்டமான கம்பஹாவில் 3 ஆயிரத்து 619 டெங்கு நோயாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர். இந்த தகவல்களின் அடிப்படையில் 35.4 வீதமான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மேல்மாகாணத்தில் பதிவாகின்றன.

மேலும் கண்டி மாவட்டத்தில் இதுவரையில் 2 ஆயிரத்து 563 நோயாளர்கள் அடையாளங்காணப்பட்டுள்ளனர். இம் மாதத்தில் மாத்திரம் ஒட்டுமொத்தமாக 2 ஆயிரத்து 788 நோயாளர்கள் நாடளாவிய இனங்காணப்பட்டுள்ளதுடன் சுற்றுச் சூழல் பேணப்படாமை, முறையான வைத்திய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளாமையுமே இவ்வாறு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்குக் காரணம் என அந்தப்பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

# நல்லூரில் இன்று மாலை நடைபெறும் இசையரங்கு

நல்லூர், ஓக.26

இலங்கை இளங் கலைஞர் மன்றம் நல்லூர் உற்சவத்தையொட்டி, தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கு, துர்க்கா தேவி மணி மண்டபத்தில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இன்று மாலை 6.45 மணி முதல் 8.15 மணிவரை நடைபெறும் இசைக் கச்சேரிகளில் முதலாவது நடைபெறும் வீணை இசையில் –

வீணை: கு.கல்யாணி, உ.சௌமியா, வி.அம்சத்வனி, மிருதங்கம்: க.சுவாமிநாத சர்மா.

அடுத்து வரும் இசைக் கச்சேரியில்–

பாட்டு: ரவீந்திரன் சுரசாகித்தியன், வயலின்: எஸ். தியாகரன், மிருதங்கம்: எஸ். கமலதாஸ், கடம்: ஞா.வசந். (இ

# பொன்னாலையில் பக்தி கானங்கள்

வட்டுக்கோட்டை, ஓக.26

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் மகோற்சவத்தில தினமும் மாலை 7 மணி – 8 மணி வரை ஆலய முதன்மை மண்டபத்தில் உற்சவ கால கலை நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

இதில் நாளை திங்கட்கிழமை கலைமாமணி க.லோகேஸ்வரனின் "பக்தி கானங்கள்" இசை நிகழ்வு பக்க வாத்திய சகிதம் இடம்பெறும். (இ

# காலியில் வெளிநாட்டு பெண்ணை பாலியல் துஷ்பிரயோகம் செய்த நபர் கைது!

காலியில் வெளிநாட்டுப் பெண்ணைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்த நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொத்தல பிரதேசத்தை சேர்ந்த உணவகத்தின் ஊழியர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சீன நாட்டுப் பெண் ஒருவரே இந்த அனர்த்தத்திற்கு முகங்கொடுத்துள்ளார். அவர் இரவு விருந்து ஒன்றில் கலந்து கொண்டதன் பின்னர் அதிகாலை 2 மணியளவில் அவர் தங்கியிருந்த ஹோட்டலுக்குச் சென்றுள்ளார்.

ஹோட்டலுக்குச் செல்லும் போது இந்த சந்தேக நபர் இந்தப் பெண்ணை பலவந்தமாக பிடித்து கீழே தள்ளி துஷ்பிரயோகம் செய்துள்ளார். எனினும் அவர் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளார்.

இந்தச் சீன பெண் தனது நண்பியின் ஹோட்டல் ஒன்றிலேயே தங்கியிருந்துள்ளார். அதே ஹோட்டலில் சேவை செய்யும் ஊழியரே இந்தச் சம்பவத்தில் ஈடுபட்டவர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட பெண் கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# சகல இனங்களுக்கும் நீதியான முறையில் எல்லை நிர்ணயம் மேற்கொள்ளப்படவில்லை!

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் குற்றச்சாட்டு



சகல இனங்களுக்கும் நீதியான முறையில் எல்லை நிர்ணயங்கள் மேற்கொள்ளப்படவில்லை. முஸ்லிம்களும், மலையக மக்களும் இதனால், அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் குற்றஞ் சாட்டினார்.

புள்ளிவிவரங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள எல்லை நிர்ணயத்தால் சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவம் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் விசனம் தெரிவித்தார்.

மாகாண சபைகளின் தேர்தல் தொகுதி எல்லைகளை நிர்ணயிப்பதற்கான குழுவின் அறிக்கை மீதான விவாதத்தில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் ரவூப் ஹக்கீம் இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு–

மாகாண சபைகளுக்கான தேர்தலை மேலும் இழுத்தடிக்காது ஜனவரி மாதம் முதல் வாரத்தில் நடத்துவதாயின் ஆகக் குறைந்தது பழைய முறைக்காவது செல்லவேண்டி யுள்ளது.

எல்லை நிர்ணய அறிக்கையால் சிறுபான்மையினருக்குப் பெரும் அநீதி இழைக்கப்பட்டுள்ளது. எல்லை நிர்ணயத்தை மேற்கொண்ட குழுவின் உறுப்பினர்களின் செயற்பாடுகள் தொடர்பில் குறைபாடுகள் உள்ளன.

எல்லை நிர்ணயக் குழுவினர் பல் உறுப்பினர் தொகுதிகளை அமைப்பதற்கு விரும்பவில்லை. அவர்கள் புள்ளிவிவரங்கள் என்ற ஆடையை அணிந்துகொண்டு எல்லைகளை நிர்ணயம் செய்துள்ளனர். ஒரு லட்சம் வாக்காளர்கள் இருந்தால் அங்கு ஒரு தொகுதியை ஏற்படுத்த முடியும் என்பதே அவர்களின் எடுகோள்.

பல் உறுப்பினர் தொகுதியை ஏற்படுத்துவதாயின் 2 லட்சம் பேர் இருக்க வேண்டும் என்பதே அவர்களின் நிலைப்பாடாக இருந்தது. சிறுபான்மையினத்தவர்களின் உரிமைகளை கவனத்தில் கொண்டு பல் உறுப்பினர் தொகுதிகளை உருவாக்க அவர்கள் விரும்பவில்லை.

உதாரணமாக கண்டி, அநுராதபுரம், குருநாகல், கேகாலை ஆகிய மாவட்டங்களில் முஸ்லிம்கள் கணிசமாக வாழ்கின்றனர். அந்தப் பகுதிகளில் பல் உறுப்பினர் தொகுதிகளையோ அல்லது அவர்களுக்கான தனியான தொகுதிகளையோ அவர்கள் உருவாக்க விரும்பவில்லையெனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

# திருமணத்தை வெறுக்கும் தென்கொரியப் பெண்கள்

திருமணம் செய்துகொள்ள போவதில்லை, குழந்தை பெற்றுக்கொள்ள போவதில்லை, ஆண்களுடன் எவ்வித உறவையும் கொள்ளப்போவதில்லை என்று சமீப காலமாக தென் கொரியாவைச்



சேர்ந்த பெண்கள் பலரும் கூறி வருகின்றனர்.

உலகிலேயே குறைந்தளவு குழந்தை பிறப்பைக் கொண்டுள்ள தென் கொரியாவில், பெண்களின் நிலைப்பாட்டில் மாற்றம் வராதவரை எதுவும் மாறுவதற்கு வாய்ப்பில்லை.

வாழ்க்கையில் எப்போதுமே குழந்தை பெற்றுக்கொள்ளும் எண்ணம் எனக்கில்லை என்கிறார் தென் கொரிய தலைநகர் சோலை சேர்ந்த 24 வயதாகும் ஜங் யூன் – ஹவா என்ற இளம்பெண்.

பிரசவத்தின் உடல் வலி எனக்குத் தேவையில்லை. அது எனது வாழ்க்கைக்கு சீரழிவாக அமையும் என்று அவர் கூறுகிறார்.

ஒரு குடும்பத்தின் உறுப்பினராக இருப்பதைக் காட்டிலும், நான் தனிமையில் வாழ்ந்து, எனது வாழ்க்கை லட்சியத்தை அடைவதில் கவனம் செலுத்த விரும்புகிறேன் என்று ஜங் யூன் – ஹவா கூறுகிறார்.

தொழில்ரீதியான வாழ்க்கையும், குடும்ப வாழ்க்கையும் தனித்தனியாவை என்று ஜங் யூன்– வா மட்டுமல்லாமல் பல கொரிய பெண்களும் நினைக்கிறார்கள்.

தென் கொரியாவில் பெண்கள் கர்ப்பமடைவதால் பாகுபாட்டுக்கு உட்படுத்தப்படுவதை தடுக்கும் சட்டங்கள் நடைமுறையில் உள்ளன. ஆனால், பல தொழில் அமைப்புகள் இந்த சட்டங்கள் நடைமுறையில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துவதில்லை என்று கூறுகின்றன.

சோல் நகரின் வடக்குப் பகுதியில் வசிக்கும் சோய் மூன் – ஜியாங் வாழ்க்கை கதை இந்த பிரச்சினையின் வீரியத்தை மேலும் உணர்த்துகிறது. தனக்கு ஒரு குழந்தை பிறக்கவுள்ளதாக அவர் தனது முதலாளியிடம் கூறினார். அதை அடுத்து அவர் வெளிக்காட்டிய எதிர்வினையைக் கண்டு அவர் அதிர்ச்சியடைந்தார்.

உங்களுக்கு ஒரு குழந்தை பிறந்தால், அதுதான் முதன்மை இடத்தை பெறும், அதனால் அலுவலகப் பணி பின் தள்ளப்படும். அப்படிப்பட்ட நிலையில் நீங்கள் வேலையில் தொடர முடியுமா? என்று தனது முதலாளி கேட்டார் என அவர் கூறுகிறார்.

மேலும், அவர் தனது கேள்வியை தொடர்ந்த வண்ணம் இருந்தார்.

மூன் – ஜியாங் அப்போது வரி கணக்காளராகப் பணியாற்றிக்கொண்டிருந்தார். சிறிது காலத்திற்கு பிறகு மூனுக்கு அவரது முதலாளி அதிகளவிலான வேலைப் பளுவை அளிக்கத் தொடங்கினார். இது குறித்து மூன் புகாரளித்தபோது, அவர் கடமையுணர்ச்சியுடன் பணிபுரியவில்லை என்று கூறப்பட்டது, பிரச்சினையின் வீரியத்தை மேலும் அதிகப்படுத்தியது.

அவர் என்னிடம் கத்திக்கொண்டிருந்தார், நான் என் நாற்காலியில் உட்கார்ந்திருந்தேன், மொத்த மன அழுத்தமும் என் உடலில் ஊடுருவ தொடங்கியது. என்னால் கண்களைத் திறக்க முடியவில்லை என்று மூன் தன்னுடைய நிலையை விவரிக்கிறார்.



- சைமன் மேபின் -

எனது சகப் பணியாளர் மருத்துவ உதவியாளரை அழைக்க, நான் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டேன்.

அப்போது, மூனுக்கு ஏற்பட்டுள்ள அதிகப்படியான மனஅழுத்தம் கருச்சிதைவுக்கான தொடக்க அறிகுறிகளை காட்டுவதாக மருத்துவர்கள் கூறினர்.

ஒரு வாரகாலத்தை மருத்துவமனையில் கழித்த பின், தனது வயிற்றிலுள்ள குழந்தையை காப்பற்றினார். பிறகு, மீண்டும் பணிக்குச் சென்ற மூனை வலுக்கட்டாயமாகப் பணியிலிருந்து வெளியேற வைப்பதற்கு இயன்ற அனைத்து காரியங்களையும் அவரது முதலாளி மேற்கொண்டார்.

இந்த வகையான அனுபவம் அசாதாரணமானது அல்ல என்று கூறும் மூன், என்னுடன் பணிபுரியும் பல பெண்களுக்கு குழந்தைகளே இல்லை, அவர்களுக்கு குழந்தையை பெற்றுக்கொள்ளும் திட்டமும் இல்லை என்று மேலும் கூறுகிறார்.

கடுமையாக, அதிக நேரம், கடமையுணர்ச்சியுடன் பணியாற்றுவது கடந்த ஐம்பதாண்டுகாலத்தில் தென் கொரியா பெற்ற மிகப் பெரிய வளர்ச்சியின் காரணமாக பார்க்கப்படுகிறது.

ஆனால், தென் கொரியாவின் இந்த வளர்ச்சியில் பெண்களின் பங்களிப்புக்கு சரியான அங்கீகாரம் கொடுக்கப்படுவதில்லை என்று யூன் – ஹ்வா கூறுகிறார்.

தென்கொரியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு மிகக் குறைந்த ஊதியத்தில் தொழிற்சாலைகளில் பணியாற்றிய பெண்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது என்று அவர் கூறுகிறார்.

ஆனால், சிறிதுகாலம் முன்புவரை ஆண்கள் மட்டுமே செய்யும் தொழில்களாக அறியப்பட்ட வேலைகளை தற்போது பெண்கள் அனைத்து துறைகளிலும் அதிகளவில் செய்து வருகின்றனர். விரைவான சமூக, பொருளாதார மாற்றங்கள் இருந்த போதிலும், பாலினம் குறித்த மனப்போக்குகள் மெதுவாகவே மாறி வந்தன.




இந்நாட்டில் பெண்கள் ஆண்களுக்கு சியர்லீடர்களாக இருப்பதற்கு எதிர்பார்க்கின்றனர் என்று யூன் – ஹ்வா கூறுகிறார்.

தான் திருமணம் செய்துகொண்டு செல்லும் குடும்பத்தின் ஒட்டுமொத்த தேவையை பெண்கள் கவனிக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுவதாக அவர் மேலும் கூறுகிறார்.

என் ஆளுமை இதுபோன்ற பாத்திரத்திற்கு பொருந்தாது, என்னும் யூன் – ஹவா, நான் என் சொந்த வாழ்க்கையில் பிஸியாக இருக்கிறேன் என்று கூறுகிறார்.


தென் கொரிய ஆண்கள் அந்நாட்டு பெண்களை எப்படி பார்க்கிறார்கள் என்பதை ஒரு வார்த்தையில் விவரியுங்கள் என்று அவரிடம் கேட்டதற்கு, அடிமைகள் என்று அவர் பதிலளிக்கிறார். *




## ஆண்களுடன் எந்த வகை உறவும் வேண்டாம்; பிள்ளைப் பேறும் வேண்டாம்

---

# தாஜ்மஹாலைப் பற்றிய நீங்கள் அறிந்திராத உண்மைகள்



தாஜ்மஹால், உலககாதலின் இலச்சினையாய் திகழும் ஓர் இந்திய கலை பொருள்.

இதன் பின்னணியில் பல மர்மங்கள் புதைந்திருந்தாலும், இதனுள் உறங்கிக் கொண்டிருக்கும் உயிரின் காதலும், நேசமும் விலைமதிப்பற்றதாகும்.

பல ஆண்டுகளாக, பல ஆயிரக்கணக்கான வேலையாட்களை கொண்டு விலைமதிப்பற்ற சலவை கற்கள் கொண்டு கட்டி முடிக்கப்பட்டது தாஜ்மகால். உண்மையில், இதன் நேர் எதிராக பிரதிபலிக்கும் மற்றொரு தாஜ்மஹாலையும் கட்ட ஷாஜாகான் நினைத்திருந்தார்.

காலத்தை கடந்து நிற்கும் இந்த காவிய சின்னத்தை பற்றிய சில வியக்க வைக்கும் தகவல்கள் பற்றி இனி காணலாம்.

* தாஜ்மஹால் அதிகாலை பின்க் நிறத்திலும், நாள் வேளையில் வெள்ளை நிறத்திலும், இரவு நிலா வெளிச்சத்தில் கோல்டன் நிறத்திலும் காட்சியளிக்கும்.

* தாஜ்மஹாலின் தூண்கள், வெளிப்புறத்தில் சற்று சாய்ந்திருப்பது போன்று தான் கட்டமைக்கப்பட்டுள்ளது. இதனால், பூகம் பம் வந்தாலும் கூட, அவை கட்டடத்தின் மீது விழாமல், வெளிப்புறத்தில் தான் விழும்.

* மிக ரம்மியமான இந்த கட்டடத்தை கட்ட 28 வகையான விலைமதிப்பற்ற சலவை கற்கள் பயன்படுத்தப்பட்டன.

* தாஜ்மஹாலை நீங்கள் எந்த திசையில் இருந்து பார்த்தாலும் சமச்சீரான அளவில் தோற்றத்தில் தான் தெரியும். ஆனால், உள்ளே இருக்கும் கல்லறைகள் இரண்டும் வெவ்வேறு அளவில் இருக்கின்றன. பெண் கல்லறையைவிட, ஆண் கல்லறை பெரிது எனக் கூறப்படுகிறது.

# போர்க்களத்தில் கண்ட வெற்றிகளோடு நில்லாது

## பரம்பரை விருத்தியிலும் களமாடிய செங்கிஸ்கான்!

- ஜாஃபர் சையத் -

13ஆம் நூற்றாண்டின் தொடக்கத் தில், வடகிழக்கு ஆசியாவில் இருந்து தோன்றிய ஒருவர் உலகத்தையே நடுங்கச் செய்தார். செங்கிஸ்கான் உலக வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஆட்சியாளர்களில் ஒருவராக கருதப்படுகிறார். படையெடுத்து செல்லும் அவர், பேரழிவையும் பலத்த உயிர்சேதங்களையும் ஏற்படுத்தி, நாடு நகரங்களையும், தேசங்களையும் தனது முன்னால் மண்டியிடச் செய்தார்.

பல நாடுகளில் ரத்த ஆற்றை ஓட விட்டு, எதிரிகளின் தலையை துண்டித்து, மலையாக குவித்த செங்கிஸ்கான், நகரங்களை சூறையாடியபடியே, பீஜிங் முதல் மொஸ்கோ வரை பல நகரங்களை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தார்.

ஒரு காலத்தில் மூன்று கோடி சதுர கிலோமீற்றர் பரப்பளவிற்கு பரந்து விரிந்திருந்த மங்கோலியப் பேரரசின் தற்போதைய எல்லைக்குள் வசிப்பவர்களின் மொத்தத் தொகையே மூன்று கோடிதான்.

ஆனால், செங்கிஸ்கானின் வெற்றி போர்க்களத்தோடு முடிந்துவிடவில்லை. மற்றொரு களத்திலும் அவரது செயல்பாடு மிகவும் வியப்பளிப்பதாக இருக்கிறது!

கிழக்கு மங்கோலியா எல்லைக் குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் மக்களிடையே ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட மரபணு ஆராய்ச்சியில் ஏறத்தாழ எட்டு சதவிகித ஆண்களின் 'வை' குரோமோசோம்களில் மங்கோலிய ஆட்சியாளர்களின் குடும்பத்தின் தடயங்கள் உள்ளன எனத் தெரியவந்தது.

உலகில் சுமார் ஒரு கோடியே 60 லட்சம் ஆண்கள் அதாவது உலக ஆண்களில் 0.5% செங்கிஸ்கானின் பரம்பரையினர் என்று கூறுகிறது இந்த ஆராய்ச்சியின் முடிவுகள்.

பாகிஸ்தானில் ஹஜாரா பழங்குடியினப் பகுதியில் வசிக்கும் மக்களின் மரபணுக்களிலும் இதுபோன்ற தடயங்கள் தென்படுகின்றன. அந்த மக்களும் தாங்கள் மங்கோலிய இனத்தைச் சேர்ந்தவர்கள் என்றே தங்களை அடையாளப்படுத்துகின்றனர். இதைத்தவிர, முகல், சுக்தாய் மற்றும் மிர்ஸா போன்ற குடும்பப் பெயர்களைக் கொண்ட மக்கள் தாங்களும் மங்கோலிய இனத்தைச் சேர்ந்தவர்களாகக் கூறுகின்றனர்.

### ஒருவருக்கு எத்தனை குழந்தைகள்?

அறிவியல் ரீதியான மரபணு ஆராய்ச்சிகள் ஒருபுறம் இருக்கட்டும், ஆனால் செங்கிஸ்கானின் வாரிசுகள் பற்றி வரலாற்றுப் பதிவுகள் என்ன சொல்கின்றன?

டசின் கணக்கில் திருமணம் செய்து

## உலகில் சுமார் ஒரு கோடியே 60 லட்சம் ஆண்கள் அவனின் வாரிசுகள் என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள்



கொண்டவர் செங்கிஸ்தான் என்பதும் அவரது மகன்களின் எண்ணிக்கை 200 என்றும் சொல்லப்படுகிறது. அவருக்கு பிறகு, அவரது மகன்கள் ஆட்சி யையும் சம்ராஜ்ஜியத்தையும் மட்டும் விரிவாக்க வில்லை, பரம்பரையையும், வாரிசுகளின் எண்ணிக்கைகளையும் விரிவுபடுத்தினர்.

செங்கிஸ்கான் மரணமடைந்து 33 ஆண்டுகளுக்கு பிறகு அவரது சரித்திரத்தை 'தாரீக் – ஏ – ஜகாங்குஷா' என்ற பெயரில் எழுதினார் உதா மலிக் ஜுபாயனி என்ற வரலாற்றாசிரியர்.

செங்கிஸ்கான் காலத்தில், அவரது பரம்பரையைச் சேர்ந்த 20 ஆயிரம் பேர் நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருந்தார்கள். இதைப்பற்றி நான் அதிகம் எதுவும் சொல்லப்போவதில்லை. ஏனெனில், ஒருவரால் எப்படி இவ்வளவு அதிகமான குழந்தைகளை பெறமுடியும்? என்ற கேள்வி எழும். இந்த புத்தகத்தைப் படிக்கும் வாசகர்கள் பொய்யான தகவல்களை பரப்புவதாக குற்றம் சாட்டப்படலாம்.

இந்த இடத்தில் ஒரு முக்கியமான சம்பவத்தை குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கலாம். செங்கிஸ்கானுக்கு 60 வயதாக இருந்தபோது, தனக்கு பிறகு அரசராக பதவியேற்பது யார் என்பதை முடிவு செய்யும் முக்கியமான கூட்டத்தை அவர் கூட்டினார். முதல் மனைவி மூலம் பிறந்த



ஜோச்சி, ஒக்தாயி, சுக்தாயி, தோலி ஆகிய நான்குமகன்களைகூட்டத்திற்குஅழைத்த செங்கிஸ்கான் அவர்களிடம் பேசினார்.

ஒரு கதையை உதாரணமாக கூறிய செங்கிஸ்கான் அதன் மூலம் ஒற்றை தலைமையின் அவசியத்தை மகன்களுக்கு எடுத்துரைத்தார். எனது மகன்கள் அனைவரும் அரசராக விரும்பினால், ஒருவரின் கீழ் மற்றவர்கள் பணியாற்ற மறுத்தால், அது, இரண்டு பாம்புகள் பற்றிய பழைய கதை ஒன்றை நினைவுபடுத்துவதாக இருக்கும். அந்த கதையில் ஒரு பாம்புக்கு பல தலைகள் இருக்கும், மற்றொரு பாம்புக்கு ஒரு தலையும் பல உடல்களும் இருக்கும்.

பல தலைகள் கொண்ட பாம்புக்கு பசியெடுத்து அது இரைதேடகிளம்பினால், எந்த வழியாக செல்லலாம் என்று அதன் பல தலைகளுக்கும் கருத்து வேறுபாடு எழும். ஒத்த கருத்து ஏற்படாத காரணத்தால் எங்குமே செல்லமுடியாமல் இறுதியில் பட்டினியிலேயே பல தலை பாம்பு இறந்துவிடும். ஆனால் ஒற்றைத் தலையும், பல உடம்பும் கொண்ட பாம்புக்கு இந்தப் பிரச்சினை இல்லை, அது பல உடல்களுக்குத் தேவையான உணவை உட்கொண்டு நிம்மதியாக வாழ்ந்தது

கதையை சொல்லி முடித்த செங்கிஸ்கான், தனது மூத்த மகன் ஜோசிகானை உரையாற்ற அழைக்கின்றமையால் இதன் பொருள், பிற சகோதரர்கள், ஜோசிகானின் தலைமையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதே.

இது இரண்டாவது மகன் சுக்தாயிக்கு பிடிக்கவில்லை.

நீங்கள் ஜோசியை உரையாற்ற அழைக்கின்றமையால், அவனையே அரசனாக்க முடிவு செய்துவிட்டீர்கள் என்றுபொருள்கொள்ளலாமா? தவறான வழியில் பிறந்த அவனை எங்கள் தலைவராக எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? என்று தனது இருக்கையில் இருந்து எழுந்து நின்று தந்தையிடம் தனது மனத் தாங்கலை முறையிட்டார்.

40 ஆண்டு கால கதை சுக்தாயி குறிப்பிட்டுச் சொல்ல விரும்பியது 40 ஆண்டு பழைய கதை. செங்கிஸ்கானின் எதிரிகளினால் கடத்தப்பட்டார் அவருடைய முதல் மனைவி போர்தா காதூன். 1161ஆம் ஓல்கோத் பழங்குடியினத்தில் பிறந்த



போர்தாவுக்கும், தைமூஜி னுக்கும் (செங்கிஸ் கானின் உண்மையான பெயர்) சிறு வயதிலேயே திருமணம் நிச்சயமாகிவிட்டது. திருமணம் நடக்கும்போது போர்தாவுக்கு 17 வயது, செங்கிஸ் கானுக்கு 16 வயது.

திருமணமான சில நாள்களிலேயே செங்கிஸ் கானின் எதிரிகள், செங்கிஸ் கானின் குடும்பத்தினர் மீது தாக்குதல் நடத்தினார்கள். ஆறு தம்பிகள் மற்றும் தாயுடன் செங்கிஸ் கான் தப்பித்தாலும், அவரது மனைவி போர்தா மட்டும் அகப்பட்டுக் கொண்டார்.

உண்மையில் போர்தாவை கடத்துவதே தாக்குதல் நடத்தியவர்களின் நோக்கம். இந்த கடத்தலின் பின்னணியில் இருப்பதோ மற்றுமொரு கடத்தல் கதை. செங்கிஸ் கானின் தந்தை, தங்கள் இனத்திற்கு எதிரியாக இருந்த மற்றொரு பழங்குடி இனத்தை சேர்ந்த பெண்ணை கடத்திக் கொண்டு வந்து திருமணம் செய்து கொண்டார். அவர்தான் செங்கிஸ்கானின் தாய்.

செங்கிஸ்கானின் தாயான தங்கள் இனப் பெண் கடத்தப்பட்டமையை பல ஆண்டுகளாகியும் மறக்காதவர்கள், பழி தீர்த்துக் கொள்வதற்காகச் செங்கிஸ்கானின் மனைவியைக் கடத்தினார்கள். மாட்டு வண்டி ஒன்றில் மறைந்திருந்த போர்தாவை கண்டுபிடித்து, குதிரையில் ஏற்றிக் கொண்டு விரைந்தார்கள் கடத்தல்காரர்கள்.

தனது மனைவியைத் தேடும் வேட்டையை தொடங்கினார் செங்கிஸ்கான். மனைவியை கடத்திய கானாபதோஷ் மார்கத்பழங்குடியினத்தவர் ஆசியகண்டத்தின் பல ஆயிரம் மைல்கள் பரப்பளவிலான சமவெளிகளில் வசித்து வந்தனர். மனைவியைத் தேடி நீண்ட பயணம் மேற்கொண்ட தைமூஜின் என்னும் செங்கிஸ் கான், ஆட்களையும் திரட்டினார்.

அவர்கள் என்னுடைய வீட்டை மட்டும் சூறையாடவில்லை, என்னுடைய மனதையும் சூனியமாக்கிவிட்டார்கள் என்று சொல்லி வருந்துவார் செங்கிஸ்கான்.

இறுதியில் தனது மனைவியை சகாக்களின் உதவியால் மீட்டுவந்தார் செங்கிஸ் கான். இந்தச் சம்பவம் அவரது வாழ்வில் மிக முக்கியமானது என்று சில வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர். ஏனெனில் மனைவியைத் தேடி அவர் பயணித்த பாதையில் தான் பிற்காலத்தில் பயணித்து உலகின் மிகப் பெரிய சாம்ராஜ்ஜியத்தை உருவாக்கினார் செங்கிஸ் கான்.

போர்தா மீட்கப்படுவதற்கு எட்டு மாதங்கள் ஆகிவிட்டன. தனது இடத்திற்கு வந்த சில மாதங்களிலேயே ஜோசியை பெற்றெடுத்தார் போர்தா.

ஜோசியின் பிறப்பு பற்றி பல வதந்திகள் பரவினாலும், ஜோசியை தனது மூத்த மகனாகவே கருதினார் செங்கிஸ் கான். தனக்கு பிறகு ஜோசியே பதவி யேற்கவேண்டும் என்று அவர் கருதியதற்கும் அதுவே காரணம்.

ஆனால் 40 ஆண்டுகளுக்கு பிறகு, ஒரே தாயின் வயிற்றில் பிறந்த மகன்களே, மூத்த சகோதரனின் பிறப்பு பற்றி கேள்வி எழுப்புவார்கள் என்று செங்கிஸ் கானுக்கு தோன்றவில்லை.

### சகோதரர்களுக்கு இடையே சண்டை

தம்பி சுக்தாயி, தன் மீது குற்றம் சுமத்துவதை தாங்க முடியாத ஜோசி, வேகமாக எழுந்து தம்பியின் கன்னத்தில் ஓங்கி அறைவிட்டார். இருவருக்கும் இடையே மூண்ட கைகலப்பை விலக்கி விட அனைவரும் வர வேண்டியதாயிற்று.

தனது காலத்திற்கு பிறகு மூத்த சகோதரன் ஜோசி அரியணை ஏறுவதற்கு மூன்று மகன்களும் தடைகளை ஏற்படுத்துவார்கள் என்பதை புரிந்து கொண்டார் தந்தை செங்கிஸ் கான். சகோதரர்கள் இடையே சண்டை மூண்டால் நாடு பிளவு படும் என்று செங்கிஸ் கான் கவலையடைந்தார்.

அப்போதுசுக்தாயிஒருயோசனையை முன்வைத்தார். மூத்த சகோதரர்கள் இருவரையும் விடுத்து, மூன்றாவது மகனான ஒக்தாயி என்பவரை அரசராக்கலாம் என்ற சுக்தாயின் திட்டத்திற்கு சகோதரர்கள் அனைவரும் ஒப்புக்கொண்டனர்.

இது செங்கிஸ் கானுக்கு வருத்தத்தை ஏற்படுத்தினாலும், வேறு வழியில்லை என்ற நிலைமை ஏற்பட்டது. அந்த சம்பவத்திற்கு பல நூற்றாண்டுகளுக்கு பிறகு இன்று செங்கிஸ்கானின் வழித்தோன்றல்கள் கோடிக்கணக்கில் இருக்கின்றனர் என்று சொல்லப்பட்டாலும், அவரது மூத்த மகனின் பிறப்பு பற்றி, பிற மகன்களே கேள்வி எழுப்பியது வரலாற்றின் விநோதமான முரண்பாடு.

1227 ஒகஸ்ட் 18ஆம் திகதியன்று தனது இறுதி மூச்சை விட்ட செங்கிஸ் கானின் வாழ்க்கையில் அவர் அனு

காலைக்கதிர் Kalaikkathir


# இந்த வாரம் உங்களுக்கு எப்படி?

**26.08.2018 – 01.09.2018**

சந்திராஷ்டம நாள் - புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் நற் கருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.

*2018 ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் 10 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை பூரணைத்திதி மாலை 5.26 வரை பின்னர் பிரதமை. நட்சத்திரம். அவிட்டம் பகல் 12.36 மணி வரை பின்னர் சதயம். மரணயோகம் பகல் 12.36 மணி வரை பின்னர் சுபயோகம்.*

**ராகுகாலம்** - *மாலை 4.49 மணி முதல் 6.20 மணி வரை*

**சுபநேரம்** - *காலை 9.03 மணி முதல் 10.33 மணி வரை*

*இன்று யஜுர் வேத உபாகர்மம், பூரணை விரதம்.*

**திவசம் செய்ய வேண்டிய திதி**- *ஆவணிமாத பூரணை.*

**கணிப்பு: 'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா (ஜே.பி.)**

## மேஷம்:

நன்மையான வாரம். பணப்புழக்கம் திருப்தியைத் தரும். வியாபாரம் அபரிதமான வளர்ச்சி அடையும். செய்யும் தொழிலில் முன்னேற்றம் உண்டாகும். எடுக்கும் முயற்சிகளில் வெற்றி கிட்டும். பூர்வீகச் சொத்து சம்பந்தமான வழக்குகள் முடிவுக்கு வரும். சகோதர உறவு பலப்படும். கொடுக்கல், வாங்கல் சரளமாக நடைபெறும். மறைமுக எதிர்ப்புக்கள் விலகும், உத்தியோகத்தர்களுக்கு தடைப்பட்ட உயர்வுகள் கிடைக்கும். குடும்பத்தில் சுப காரியங்களுக்கான முயற்சிகளை மேற்கொள்வார்கள்.

## ரிஷபம்:

சமபலன்கள் காணப்படுகின்றன. பணவரவு சுமாராக இருக்கும். செலவினங்கள் அதிகரிக்கும். உடலாரோக்கியத்தில் உஷ்ண சம்பந்தமான பாதிப்புக்கள் ஏற்படும். குடும்பத்தில் ஓரளவு அமைதி நிலவும். விருந்தினர் வரவால் களிப்பும், செலவுகளும் அதிகரிக்கும். உற்றார், உறவினர்கள் ஓரளவு அனுகூலமாக இருப்பார்கள். உத்தியோகத்தர்கள் பிறர் விஷயங்களில் தலையீடு செய்வதை தவிர்த்து தங்கள் பணிகளில் மட்டும் கவனம் செலுத்துவது நல்லது. தேவையற்ற பயணங்களைத் தவிர்க்க வேண்டும்.

## மிதுனம்:

யோகமாக வாரம். பணபலம் அதிகரிக்கும். குடும்பத்தில் நெருக்கம், பாசம் அதிகரிக்கும். வீடு, வாகனம் யோகம் உண்டாகும். சிலருக்கு வெளிநாடு சென்று தொழில் பார்க்கும் யோகம் உண்டாகும். சுய தொழில் புரிவோருக்கு போதிய ஆதாயம் கிடைக்கும். சகோதர உறவு வலுவடையும். சிலருக்கு அரசுப் பணி கிடைக்கும். மாணவர்களுக்கு உயர் கல்வி கற்பதற்கு அரசு வழியால் வாய்ப்பு, வசதிகள் வந்து சேரும். இதுவரை இழுபறியாக இருந்த பூர்வீகச் சொத்துகள் கைக்கு வந்து சேரும். வியாபாரம் நன்றாக நடக்கும்.

## கடகம்:

சஞ்சலமானவாரம். பணம் தட்டுப்பாடாக இருக்கும். மனதில் யோசனை, கவலை அதிகரிக்கும். குடும்பத்தில் செலவுகள் அதிகரிப்பால் என்ன செய்வது என்றறியாத கவலை உண்டாகும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் அதிகரிக்கும். தொழிலில் நிறையப் பாடுபட வேண்டி வரும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பளுவும், அலைச்சல்களும் அதிகரிக்கும். மாணவர்கள் கல்வியில் ஊக்கமின்றி, விளையாட்டில் நாட்டம் அடைவார்கள். கொடுக்கல், வாங்கலில் சிக்கல்கள் உண்டாகும்.

## சிம்மம்:

சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். தேக சுகம், குடும்ப சுகம் ஓரளவு சீராக இருக்கும். வியாபாரத்தில் ஓரளவு லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் வேலைப் பளுவுடன், அலைச்சல்களும் அதிகரிக்கும். பெண்களுக்கு குடும்பப் பொறுப்புகள் அதிகரிக்கும். தொழிலாளர்கள் கடும் முயற்சியால் தொழில் வாய்ப்புக்களைப் பெறுவார்கள். வழக்குகள் இழுபறியில் இருக்கும். திருமண காரியங்கள் இழுபறியில் இருக்கும். வேலை தேடுவோருக்கு வேலை கிடைப்பது கடினம்.

## கன்னி:

மேன்மையான வாரம். பொருளாதாரம் ஏற்றமடையும். குடும்ப மகிழ்ச்சி மேலோங்கும். வியாபாரத் தொழில் நன்கு செழிப்படையும். உத்தியோகத்தர்களுக்கு திறமைகளின் அடிப்படையில் உயர்வுகள் கிடைக்கும். மாணவர்கள் கல்வித் தேர்வுகளில் சிறப்பாகச் சித்தி அடைவார்கள். பெண்கள் சுய தொழிலில் மேன்மை அடைவார்கள். தொழில் பிரிவினர் தொழிலாளர்களின் ஒத்துழைப்பால் முன்னேற்றமும், போதிய வருமானமும் பெறுவார்கள். சிலருக்கு திட்டமிட்ட வெளிநாட்டுப் பயணம் அனுகூலமாகும்.

## துலாம்:

ஆக்கபூர்வமான வாரம். பணம் சரளமாகப் புழங்கும். குடும்பத்தில் ஒற்றுமையுணர்வு அதிகரிக்கும். பிள்ளைகளின் முன்னேற்றத்தால் பெருமை உண்டாகும். வாடகை வீட்டில் இருக்கும் சிலர் சொந்த வீடு வாங்குவார்கள். சேர வேண்டிய தாய் வழிச் சொத்துக்கள் உரிய நேரத்தில் கிடைக்கும். சகோதர உறவு பலப்படும். இதுவரை பிரிந்திருந்தவர்கள் மீண்டும் இணையும் வாய்ப்புண்டாகும். உத்தியோகத்தில் மேலதிகாரிகள் அனுசரணையாக இருப்பார்கள். கொடுக்கல், வாங்கலில் இணக்கம் உண்டாகும்.

## விருச்சிகம்:

சலனம் மிகுந்த வாரம். பணவரவு குறையும். குடும்பத்தில் ஒற்றுமை குறையும். உறவுகளுடன் பேசும் போது எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். பிரயாணம் செல்லும்போது கவனம் தேவை. அநாவசியச் செலவுகளால் கடன்பட நேரும். உடலில் சில உபாதைகள் தோன்றி மறையும். உத்தியோகத்தில் கடும் வேலைப் பளுவால் உடல் சோர்வடையும். மாணவர்கள் கல்வியில் ஊக்கம், உற்சாகமின்றிக் காணப்படுவார்கள்.

## தனுசு:

விருத்தியான வாரம். பொருளாதாரம் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்கும். குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். தொழில், வியாபாரம் செய்பவர்களுக்கு நல்ல வாய்ப்புக்கள் தேடி வரும். உத்தியோகத்தில் உடன் பணி புரிபவர்களின் ஆதரவு கிட்டும். உற்றார், உறவினர்கள் அனுசரித்து நடந்து கொள்வதன் மூலம் அனுகூலப் பலன்களை அடைய முடியும். பணம் கொடுக்கல், வாங்கலில் பெரிய முதலீடுகளை ஈடுபடுத்தி லாபம் காண முடியும். மாணவர்கள் கல்வியில் மேம்படைவார்கள்.

## மகரம்:

சுபீட்சமானவாரம். பணம் தாராளமாகப் புழங்கும். எடுக்கும் காரியங்களில் எல்லாம் வெற்றி கிடைப்பதால் மன நிறைவும், மகிழ்ச்சியும் உண்டாகும். குடும்பத்தில் சுபீட்சமும், மகிழ்ச்சியும் நிறைந்திருக்கும். சகோதர உறவு வலுவடையும். கடந்த காலக் கஷ்டங்கள் தீர்ந்து நிம்மதி உண்டாகும். திருமண வயதை அடைந்தவர்களுக்கு நல்ல வரன் கிடைக்கும். செய்யும் தொழில் வியாபாரத்திலும் போட்ட முதலீட்டை விட இரு மடங்கு லாபம் கிடைக்கும். கொடுக்கல், வாங்கலில் சரளமான நிலை இருக்கும்.

## கும்பம்:

இனிமையான வாரம் வருமானம் வளமாக இருக்கும். குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். சுப காரியங்கள் கைகூடும். கடன்கள் குறையும். பல பெரிய மனிதர்களின் தொடர்பு மகிழ்ச்சியைத் தரும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும். கொடுத்த கடன்கள் தடையின்றி வசூலாகும். பிரிந்திருந்த குடும்பங்கள் ஒன்று சேர்வார்கள். உறவினர்கள், நண்பர்களின் சகாயம் கிடைக்கும். வேலையற்றோருக்கு வேலை கிடைக்கும். சிலர் குடும்பத்துடன் சுற்றுலா செல்வார்கள்.

## மீனம்:

குழப்பமான வாரம். பணம் தட்டுப்பாடாக இருக்கும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாகும். முயற்சிகள் தடைப்படும். தொழிலில் கவனம் எடுக்க வேண்டும். உறவினர்களுடன் விட்டுக் கொடுத்துச் செல்வது நன்மை தரும். உத்தியோகத்தில் நிறையப் பாடுபட வேண்டி வரும். பொறுமை, நிதானம் தேவை. சிலருக்கு உடல் நலக் குறைவு உண்டாகும். வியாபாரத்தில் வேலையாளர்கள் ஏமாற்றுவார்கள். கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை.

# மயிலிட்டியில் ஆளுநர் விகாரைக்கு அடிக்கல் நட்டதன் மர்மம் யாது?

## நல்லிணக்கத்துக்கு ஊறு ஏற்படுத்தும் கைங்கரியமா இந்த நடவடிக்கை?




போருக்குப் பின்னரான காலப் பகுதியிலே வடக்கு மாகாணத்தில் பௌத்தமய மாக்கல் சிங்கள மயமாக்கல் என்பன தொடர்பான குற்றச்சாட்டுக்கள் தொடர்ச்சியாக எழுந்து வருகின்ற நிலையிலே அவ்வாறான பிரச்சினைகளுக்கு தூபமிடும் வகையில் மற்றுமொரு செயற்திட்டமாக புதியதொரு விகாரை அமைப்பதற்கான திட்டமொன்று இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது பெரும் சர்ச்சையை கிளப்பும் திட்டம் அமைந்திருக்கின்றது.

குறிப்பாக ஜனாதிபதியின் நேரடி பிரதிநிதியாகவும் வடக்கு மாகாணத்தின் உச்ச பொறுப்பில் இருக்கக் கூடிய ஆளுநர் காங்கேசன்துறை மயிலிட்டிக்குச் நேரடியாக சென்று இந்த விகாரைக்கு அடிக்கல்லை நட்டிருப்பது சர்ச்சைகளை தோற்றுவித்திருக்கிறது. குறிப்பாக வடக்கு மாகாண முதலமைச்சர் ஆளுநர் மீது பலத்த குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றார்.

அதாவது மாகாண சபையின் ஆயுள் காலம் முடிவடையவிருக்கும் நிலையில் மாகாண சபைக்கு இருக்கின்ற காலங்களில் மாகாண சபையின் செயற்பாடுகளுக்கு ஆளுநர் தடையேற்படுத்துகின்றார் என்று கூட குற்றஞ்சாட்டியிருந்தார். மேலும் மாகாண சபையின் ஆயுட் காலம் முடிவடைந்ததும் ஆளுநர் அதிகாரத்தின் கீழ் மாகாணம்வரும் போது மேலும் மிகப் பெரிய விகாரைகளை அமைப்பதற்கு ஆளுநர் தயாராகி வருகின்றார் என்றும் முதலமைச்சர் பகிரங்கமாக குற்றச்சாட்டையும் வைத்திருக்கின்றார்.

இந்த நிலையில் இப்போது அதனை நிரூபிக்கும் வகையில் பிரதேச சபையின் அனுமதிகள் எவையும் பெறப்படாமல் சட்டவிரோதமாக விகாரையொன்று அமைப்பதற்கான அடிக்கல் நடப்பட்டிருக்கின்றது. இந்த விகாரைக்கான அடிக்கல் நட்டப்பட்ட காணி தொடர்பிலே தற்போது பல்வேறு சந்தேகங்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன.

தமிழ் மக்கள் செறிந்து வாழ்ந்து வந்த இந்தப் பிரதேசத்தில் பௌத்தர்களே இல்லாத நிலையில் பௌத்த சங்கங்கள் மற்றும் பௌத்த மதத் தலைவர்களின் கோரிக்கையின் அடிப்படையில் இந்த விகாரையை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அங்குள்ள மக்களும் அந்த மக்களின் பிரதிநிதிகளும் தெரிவிக்கின்றனர்.



பரம்பரை பரம்பரையாக அந்த மண்ணில் வாழ்ந்து வந்த மக்களை வெளியேற்றி விட்டே இந்த விகாரை அமைக்கப்படுகிறது. அவ்வாறு விகாரை அமைப்பதற்குரிய எந்தவித அனுமதிகளும் பெறப்படவில்லை. இவ்வாறான நிலையில் அடாத்தாக விகாரை அமைப்பதையே தாம் எதிர்ப்பதாக அங்குள்ள மக்களும் அந்த மக்களின் பிரதிநிதிகளும் வலிகாமம் வடக்க மீள்குடியேற்ற புனர்வாழ்வுக் குழுவினரும் தெரிவித்துள்ளனர்.

இத்தகையதொரு நிலைமையில் தான் அங்கு விகாரை அமைப்பது தொடர்பில் தற்போது பல்வேறு தகவல்களையும் அவர்கள் வெளிப்படுத்தியிருக்கின்றனர். அதாவது அந்தக் காணியில் ஏன் விகாரை அமைக்கப்படுகிறது. அங்கு முன்னர் விகாரை இருந்ததா. அந்தக் காணி யாருடையது என்பது குறித்தான சந்தேகங்கள் எழுப்பப்படுகின்றன.

கடந்த 1946 ஆம் ஆண்டு கலகம ஆராய்ச்சிகோ ஏபிரகாம் பெரேரா என்பவர் பிறத்மனாவத்தை பண்டித தம்மா கீர்த்தி திஸ்ஸ தேரர் மற்றும் களுத்துறை பண்டித கிலதார திஸ்ஸ தேரர் ஆகிய மூவருக்கும் தற்போது விகாரை அமைக்கப்படவுள்ள காணியை சத்தியக் கடதாசி முடித்து வழங்கியிருக்கின்றார்.

அந்தக் காணியில் விகாரை அமைக்கப்பட்டிருந்தது என்றும் அந்த விகாரை யுத்தம் காரணமாக அழிவடைந்து விட்டது என்றும் அதனாலேயே அதனைப் புனரமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் அந்தப் புனரமைப்புக்கான அடிக்கல்லை நட்ட வடக்கு ஆளுநர் தெரிவித்திருக்கின்றார்.

ஆனால் அந்தப் பகுதியில் தாங்கள் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வருகின்றோம் என்றும் அங்கு எந்தவித விகாரைகளும் இருக்கவில்லை என்றும் அங்குள்ள மக்கள் கூறுகின்றனர். மேலும் தமக்கு காணி இல்லாததால் தற்போது விகாரை அமைக்கப்படும் சுமார் 20 பரப்புக் காணியில் கடந்த 1980 ஆம் ஆண்டு முதல் 11 குடும்பங்கள் கொண்ட தாங்கள் வசித்து வந்தோம் என்றும் அதற்கான 'பேர்மிட்ட' பத்திரங்கள் அரசாங்கத்தால் தங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன என்றும் மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஆயினும் நாட்டில் தொடர்ந்த உள்நாட்டு யுத்தம் காரணமாக கடந்த 1990 ஆம் ஆண்டு தாம் அங்கிருந்து இடம் பெயர்ந்து முகாம்களிலும் நண்பர்கள் உறவினர்கள் வீடுகளிலும் வாழ்ந்து வந்தோம் என்றும் இன்னும் சில பேர் குடும்பங்களாக இந்தியாவிற்குச் சென்று விட்டனர் என்றும் கூறுகின்றனர்.

இவ்வாறானதொரு நிலைமையிலையே கடந்த 2017 ஆம் ஆண்டு தமது சொந்த இடங்களில் தாம் மீளக் குடியமர்த்தப் பட்டதாகவும் கூறுகின்ற அந்த மக்கள் மீள்குடியமர்வின் போது தாம் மீளவும் தமது வழங்கப்பட்ட காணிகளிலேயே குடியேற்றப்பட்டதாகவும் தெரிவிக்கின்றனர்.

யுத்தத்தினால் அங்கிருந்து வெளியேறிய 11 குடும்பங்களில் 6 குடும்பங்கள் மீள்குடியமர்வின்போது அதே இடத்தில் மீளக் குடியமர்ந்து ஒரு வருட காலமாகின்றது. ஆயினும்; அந்த 11 குடும்பங்களில் 6 பேர் தான் வந்துள்ளனர் என்றும் ஏனையவர்கள் உள்நாட்டிலே வேறு இடங்களிலும் சிலர் இந்தியாவிலும் இருக்கின்றனர் என்றும் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு பல்வேறு கஷ்டங்கள் துன்பங்களுக்கு மத்தியில் அடிப்படை வசதிகள் ஏதுமற்ற நிலையில் கடந்த ஒரு வருடமாக தாம் வாழ்ந்து வந்த நிலையில் தமது வீட்டுக் காணிக்கும் படையினரும் பௌத்த மதகுருமார்களும் திடீரென வந்து அளவீடு களை மேற்கொண்டதாகவும் அந்தக் காணி அவர்களுடையது என்று கூறி அங்கிருந்து தம்மை வெளி யேறுமாறு கேட்டதாகவும் அங்கு வாழ்ந்த மக்கள் கண்ணீருடன் தெரிவிக்கின்றனர்.

இதன் பின்னர் தாம் பிரதேச செயலகம் சென்று அரச அதிகாரிகளிடம் விடயத்தைக் கூறினோம். அவர்கள் தமக்கு வேறு காணியைப் பெற்றுத் தருவாதாகத் தெரிவித்திருந்தனர். இதற் கமைய தற்பொது வேறு காணியொன்றைப் பெற்றுக் கொடுத்துள்ளதாகவும் ஆனால் முன்னர் இருந்த நிலப்பரப்பை விட குறைவான நிலப்பரப்பே தற்பொது வழங்கப்பட் டுள்தாகவும் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருக்கின்றனர். மேலும் தாம் முன்னர் வசித்த காணியை தம்மிடம் தர வேண்டுமென்றும் அவர்கள் கோருகின்றனர்.

இதே வேளை கடந்த பல வருடங்களாக மக்கள் வாழ்ந்து வந்த உரித்தன் கட்டி என்ற அந்தப் பிரதேசத்தை சிங்களக் கட்டி என்று மாற்றியுள்ளதாகவும் குறிப்பிடுகின்ற வலிகாமம் வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வுக் குழு, அந்தக் காணிக்கு தற்போது பௌத்த தேரர்கள் உரிமை கோருவது தமக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

ஏனெனில் இந்தக் காணி மக்களுக்காக வழங்கப்பட்டு அதற்கான உரிமம் பத்தி ரங்களும் அரசினால் அவர் களுக்கு வழங்கப்பட்டு அந்த இடத்திலே குடியமர்ந்திருக்கின்றார்கள். குறிப்பாக கடந்த 1990 ஆம் ஆண்டு வரையிலே அந்தக் காணியில் மக்கள் நிரந்தரமாக வசித்து வந்த நிலையில் யுத்தத்திற்குப் பின்னரான காலத்திலே நன்கு திட்டமிட்டு அக் காணிகளிலிருந்து அவர்கள் வெளியேற்றப்பட்டிருக்கின்றார்கள்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

> **பரம்பரை பரம்பரையாக அந்த மண்ணில் வாழ்ந்து வந்த மக்களை வெளியேற்றி விட்டே இந்த விகாரை அமைக்கப் படுகிறது. அவ்வாறு விகாரை அமைப் பதற்குரிய எந்தவித அனுமதிகளும் பெறப்படவில்லை. இவ்வாறான நிலையில் அடாத்தாக விகாரை அமைப்ப தையே தாம் எதிர்ப்பதாக அங்குள்ள மக் களும் அந்த மக்களின் பிரதிநிதிகளும் வலிகாமம் வடக்க மீள்குடியேற்ற புனர்வாழ்வுக் குழுவினரும் தெரிவித்துள்ளனர்.**

**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் எஸ். பொன்னம்பலத்தின் 31 ஆவது நினைவு தினம் இன்றாகும். அதை யொட்டிய நிகழ்வுகள் இன்று ஆஸ்திரலியாவில் நடக்கின்றன. அன்னார் பற்றிய ஒரு நினைவுக் கட்டுரைத் தொடர் இது.**

# சிறியன சிந்தியாது மானுடம் வென்றவர் அதிபர் சரணவ முத்து பொன்னம்பலம்

- கலாநிதி. திருநாவுக்கரசு கமலநாதன் -

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் புகழ் பூத்த அதிபர்கள் வரிசையில் முக்கியத்துவம் நிறைந்தவர்களில் சரவணமுத்து பொன்னம்பலம் அவர்களும் சிறப்பானவர்.

அவர் பன்முக ஆளுமை நிறைந்தவர். நல்ல பண்பாளர். நயத்தகு நாகரிகம் மிகை வரப்பெற்றவர். மானுடம் மிக்க மனிதராக, நல்ல கணவராக, நல்ல தந்தையாக, நல்ல மாமனாராக, நல்ல பேரனாராக, நல்ல குடும்பத் தலைவராக வாழ்ந்து வழிகாட்டியவர்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நல்ல ஆசிரியராக, நல்ல உப அதிபராக, நல்ல அதிபராக, பழைய மாணவர் சங்க போஷகராக, மாணவர்களின் இதயத் தெய்வமாக வாழ்ந்து அவர்களை உயர் வித்து மகிழ்ந்தவர்.

**மானுடம் மிக்க மாண்பினர்**

சமூகம் மதிக்கும் கௌரவமான மனிதராக வாழ்ந்தவர் அதிபர் சரவணமுத்துப் பொன்னம்பலம் அவர்கள். யாழ்ப்பாணத்துக் கல்விச் சமூகம் அவரைப் பெரிதும் மதித்து வாழ்த்தியது. அவரது நேர்மையான செயற்பாடுகளும், கனிவான பேச்சும், அமைதியான நடத்தைகளும், தோற்றமும் அவர் மேல் மற்றவர்களுக்கு மதிப்புக் கலந்த விருப்பை ஏற்படுத்தியிருந்தன.

அவர் அதிர்ந்து பேசியோ, கடிந்து உரைத்தோ கண்டிலோம். அவருடன் கல்வி கற்ற சக பாடிகளும், அவரிடம் கல்வி கற்ற மாணவர்களும், அவரிடம் பணியாற்றிய ஆசிரியர்களும், உற்றார் உறவினர்களும் இதனை உறுதி செய்யப் பின்நிற்பதில்லை. எல்லோருக்கும் நல்லவராக, எல்லோரிடமும் இனியவராக வாழ்ந்து வழி காட்டியவர் அவர். மானுடத்தை நேசிக்கும் மாண்பினர்க்குரிய மிகப் பெரிய பண்பு அவரிடம் மிகுந்திருந்தமையே அதற்கான காரணம் என்று கூற முடியும்.

அமரர் பொன்னம்பலம் அவர்களின் வாழ்வில் உயர்வான வேறு பல நல்ல அம்சங்களும் சேர்ந்திருந்தன. இவற்றில் முக்கியமாகப் பின்வரும் இரண்டினைக் குறிப்பிடலாம்.

1. அவரிடம் காணப்பட்ட Neatness (செய் காரியங்களில் ஒழுங்கு அல்லது நேர்த்தியான இயல்புகள்)

உடைகள் அணிவதிலும் சரி, அலுவலகத்தில் அல்லது வீட்டில் பாவனைப் பொருள்கள் வைத்திருப்பதிலும் சரி, ஓர் ஒழுங்கு காணப்படும். அது அவர் சார்ந்த சூழலில் ரம்மியமான இயல்பை தோற்றுவித்திருக்கும். பொருள்களைப் பாவித்த பின்னர் அவை முன்னர் இருந்தது போலவே அதற்குரிய இடத்தில் அதற்குரிய முறையில் சேர்த்து விடுவார். அவர் அணியும் உடைகளிலும் அந்தச் சுத்தமும் கவர்ச்சிகரமான நேர்த்தியும் காணப்படும். அவருடனான பல வருட பழக்கத்தில் என்றும் கசங்கிய அல்லது அழகு குறைந்த உடை அணிந்தமையை நான் கண்டிலேன். அவர் தோற்றம் அழகானது. அவரது உடை நேர்த்தியானது. அவரது நடத்தை மானுடம் நிறைந்தது. ஆகவே அவர் ஆளுமை மாணவர்களால் பெரிதும் விரும்பப்பட்டது. அவர் பாவிக்கும் மோட்டார் வண்டி கூட மிகச் சுத்தமாக இருக்கும். ஆசிரியராகப் பதவியேற்று வரும் போதே அழகான Opal வண்டியில் வந்து எல்லோரையும் கவர்ந்தவர்.

2. அவரிடம் காணப்பட்ட Perfectness (செய்காரியங்களில் பூரணத்துவம் அல்லது முற்றுப் பெற்ற நிலையும், தர உறுதியும்)

எந்தவொரு செயலையும் ஆழ்ந்து நோக்கி அவதானித்துச் செய்கின்ற தன்மை அதிபர் ச.பொன்னம்பலத்திற்கே உரிய சிறப்பான இயல்பாகும். செய்கின்ற செயலை முதலில் திட்டமிட்டுக் கொள்வார். அதற்கான படிமுறைகளைத் தீர்மானித்துக் கொள்வார். செயல் தங்கு தடையின்றி முன்னேறி முடிவுறும். எதிலும் முழுமை காணாது செயலை நிறுத்துவதில்லை. ஆதலால் அவர் ஆளுமை மாணவர்களைக் கவர்ந்திழுத்தது. எக் காரியங்களைச் செய்தாலும் செய்காரியங்களின் தர உறுதி பேணப்பட வேண்டும் என்பது அவர் இயல்பு. அதனால் அவரது கற்பித்தல் முதல் நிர்வாக வேலை கள் வரை உயிர்த்துடிப்புடன் செயற்பட்டன.

**அன்பான கணவர்**

மனைவியின் மனமறிந்து நல்ல கணவராக, மனைவியின் மனம் எவ்விதத்திலும் கோணாது தமது இல் வாழ்க்கையை பேணி வாழ்ந்தவர். தனது மனைவியை "குணம்" என்றே அன்புடன் அழைப்பார். அவ்வாறு அவர் அழைக்கும் போது மனைவி



மேல் அவர் கொண்ட அன்பின் ஆழத்தைக் கண்டு கொள்ள முடியும். மனைவியினது இவ் வாண்டின் பிறந்த நாள் திரு. பொன்னம்பலம் அவர்கள் மறைவதற்கு நான்கு நாள்களுக்கு முன் (19.07.2018) அன்று காலையில், தானே "கேக்" தயாரித்து மாலை மனைவியின் பிறந்த நாளைக் கொண்டாடியிருந்தார். அவரின் அன்பின் ஆழத்தைக் கண்டு உறவினர்கள், நண்பர்கள் மகிழ்ந்தனர். அவருக்கு இணையாக மனைவியும் அவர் மீது மட்டற்ற அன்பு கொண்டு அவர்கள் இல்லறம் நல்லறமாக திகழ்ந்தது.

**பொறுப்பான தந்தை**

அமரர் பொன்னம்பலம் அவர்களுக்கு ஒரே மகன். அவர் பெயர் கலாநிதி விசாகன். தந்தையைப் போல் அமைதியான சுபாவமும் மற்றவரை மதிக்கும் பண்பு மிக்கவரும் தந்தையாரின் குண நலன்களை உள்வாங்கி,

**"மகன் தந்தைக்காற்றும் உதவி இவன் தந்தை என்நோற்றான் கொல்லெனும் சொல்"**

என்றவள்ளுவத்துக்கமைவாக வாழ்ந்து வருபவர். அவரைப் பற்றிக் கதைக்கும் போதெல்லாம் அதிபர் பொன்னம்பலம் அவர்களின் முகத்தில் மட்டற்ற மகிழ்ச்சி காணப்படும். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நான் ஆசிரியராக இருந்த வேளை, விசாகன் அங்கு மாணவராகக் கற்று வந்தார். அவருக்கு நேரடியாகக் கற்பிக்கும் சந்தர்ப்பம் எனக்கு இல்லை. யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆசிரியர் என்ற வகையயில் எனக்கும் மரியாதை தருவார். அந்த வகையில் அமரர் பொன்னம்பலம் அவர்களால் அவர் பயிற்று விக்கப்பட்டு யாவரும் பாராட்டும் வகையில் வளர்க்கப்பட்டுள்ளார்.

**"தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து முந்தி இருப்பச் செயல்"**

என்னும் வள்ளுவத்தையும் கருத்திற் கொண்டு கலாநிதி விசாகன் அவர்கள் இன்று நல்ல நிலையில் உள்ளமை அதிபர் பொன்னம்பலம் அவர்கள் தனது தந்தை நிலை கடமையை செவ்வனே ஆற்றியதின் விளைவு எனலாம்.

**மரியாதைக்குரிய மாமனார்**

தனது மருமகள் மீது அளவற்ற பாசமும், விருப்பமும் கொண்டவர் அதிபர் பொன்னம்பலம் அவர்கள். கலாநிதி விசாகன் குடும்பம் ஆஸ்திரேலியாவில் இருந்த காலத்தில் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார். அவர்கள் அடிக்கடி வீட்டுக்கு வருவதாகவும், மருமகள் கோமதியின் (கோமி என்று தான் கூறுவார்) உடன் வந்து தனது மருத்துவ விடயங்களில் இருந்து உணவு விடயங்களிலும் கவனம் செலுத்துவார் எனவும் "She is very understanding girl" என்று பெறுமையுடன் என்னிடம் கூறுவார். கலாநிதி விசாகன் குடும்பம் பல்வேறு காரணங்களுக்காக ஆஸ்திரேலியாவில் இருந்து அமெரிக்கா செல்லும் வேளை அவர்கள் விட்டுப் பிரிவதில் பெரிதும் சங்கடப்பட்டார். அவர்கள் அங்கிருந்தால் மருமகள் தங்களைக் கவனித்துக் கொள்வார்; இனி நாங்கள் தான் எங்களைப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கூறியதில் இருந்து மருமகள் மீது அவருக்கு இருந்த நம்பிக்கை, அன்பின் உறுதி ஆகியவற்றை அறிய முடிந்தது.

**பாசமுள்ள பேரன்**

தனது பேரப்பிள்ளைகளான சேயோன், யுவன், தாரிணி ஆகியோர் பற்றிக் கூறுவதில் அலாதியான சந்தோஷம் அவருக்கு. அவர்கள் தங்களுடன் பழகும் பாங்கையும், அவர்களின் சாதனைகளையும் கூறி மகிழ்வார். அவர்களது பாடங்களை தனது I Pad இல் இருந்து காண்பித்து அவை எங்கே, எப்போ எடுத்தவை என்றெல்லாம் கூறுவார். அவர்கள் தொடர்பாக I Miss Them என்று கூறி மன வருத்தம் அடைவார். அச் சமயம் அவர் கண்கள் பனிப்பதை அவதானித்து, சமாதானம் கூறி சமாளிக்க வேண்டியேற்படுவதுண்டு. அவ்வளவு பாசத்தையும் மனதில் அடக்கி வைத்திருந்தவர் அவர்.

(தொடரும்...)

# மயிலிட்டியில் ஆளுநர்...

(09 பக்கத் தொடர்ச்சி)

அவசர அவசரமாக படையினர் அரச அதிகாரிகள் இணைந்து காணிக்கு உரிமை கோரிய மக்களுக்கு எதிர்காலத்தில் அந்தக் காணிக்குச் சிக்கல்கள் ஏற்படாமல் இருப்ப தற்காக அந்த மக்களுக்கு அதற்கு அருகில் வேறொரு காணியை வழங்கியிருக்கின்றார்கள். அதற்கான உரிமங்களையும் பெற்றுக் கொடுத்து வீடுகளையும் அமைத்துக் கொடுத்துள்ளனர்.

இவ்வாறு விகாரை அமைக்கும் திட்டமானது திடீரெனச் செயற்படுத்திய ஒன்று அல்ல. அது மிக நீண்ட காலமாக திட்டமிடப்பட்டு அமைக்கப்பட்ட ஒன்றாகவே கருதப் படுகிறது. ஆகவே வட மாகாண மக்களும் சரி, மாகாண அரசியல்வாதிகளும் சரி தொடர்ச்சியாக கூறி வருகின்ற குற்றச்சாட்டு தான் மாகாணத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற் றங்கள் பௌத்தமயமாக்கல் என்பது. அக் குற்றச்சாட்டுக்களை மீண்டும் நிரூபிக்கின்ற வகையிலான செயற்திட்டமாகவே இந்த விகாரை அமைக்கும் செயற்திட்டமும் அமைந்திருக்கிறது.

உண்மையில் வட பகுதி மக்களைப் பொறுத்தவரையில் அவர்கள் பௌத்த மதத்திற்கோ சிங்கள மக்களுக்கோ எதிரானவர்கள் அல்லர் என்பதை அவர்கள் மீண்டும் மீண்டும் தெளிவுபடுத்தியும் தெரியப்படுத்தியும் வருகின்றார்கள். சட்ட ரீதியான எந்தச் செயற்பாட்டையும் அவர்கள் எதிர்க்கவில்லை. ஆனால் சட்டவிரோதமானதை எதிர்க்கின்றனர் என்பதே நிதர்சனம். இதற்கு உதாரணமாக முல்லைத்தீவின் நாயாறு மற்றும் வடமராட்சி கிழக்கு மீனவர்கள் அத்துமீறலைக் குறிப்பிடலாம். அதில், தமிழ் மக்கள் கூறி வருகின்ற ஒரே குற்றச்சாட்டு சட்ட ரீதியல்ல என்பதால் சட்ட ரீதியானதாக இருக்க வேண்டும் என்பதே ஆகும்.

அரசமைப்புச் சபைச் சட்டத்திற்கு உட்படாது செயற்படுகின்ற போது தமிழ் மக்கள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். அவ்வாறு சட்ட விரோதமான முறையில் காணிகள் சுவீகரிக்கப்படுவதும், குடியேற்றங்களைச் செய் வதும் அத்துமீறி தொழிலில் ஈடுபடுவதைத் தான் தமிழ் மக்கள் எதிர்க்கின்றார்கள். ஆனால் தெற்கிலே இந்த விவகாரங்களை வைத்து தமிழ் மக்கள் விகாரைகளை வடக்கில் அமைக்கவும், வடபகுதியில் சிங்களவர்கள் வந்து தொழில் செய்யவும் எதிர்க்கின்றனர் என்று ஒட்டு மொத்தமாக காட்டப்படுகிறது.

இந்த பௌத்த விகாரை அமைப்பும் எதிர்காலத்திலே இவ்வாறனதொரு தோற்றப் பாட்டையே காட்டும். தமிழ் மக்கள் சிங்களவர்களை எதிர்க்கின்றார்கள் என்ற தோரணையில் இந்த விவகாரம் காட்டப்பட்டு இதனூடாக தங்களது வாக்கு அறுவடைகள் அல்லது இனவாத ரீதியிலான தங்களது பிரச்சார நடவடிக்கைகளை முன்னெடுக்கவே அரசியல்வாதிகள் முனைவார்கள். இதனூடாக நாட்டின் இரு சமூகங்களுக்கும் இடையிலான நல்லிணக்கம் என்பது மேலும் பாதிக்கப்படப்



போகும் ஒன்றாகவே இருக்கப்போகின்றது.

வடக்கு மாகாண மக்களைப் பொறுத்தவரையில் மிகத் தெளிவாக இருக்கின்றனர். சிங்களவர் சட்ட ரீதியாக எதனையும் செய் வதற்கும் சிங்கள மக்கள் இங்கு வருவதை எதிர்ப்பதற்கோ சட்ட ரீதியான தொழில்களைச் செய்வதற்கோ ஒருபோதும் அவர்கள் எதிராக இருக்கவில்லை. மாறாக சட்டவிரோதமான தொழிலைச் செய்வதற்கே அவர்கள் தொடர்ச்சியாக எதிர்த்து வருகின்றனர் என்பதை இந்த நாட்டு மக்களும் அரசியல்வாதிகளும் தெளிவாகப் புரிந்து கொண்டால் இந்த நாட்டின் நல்லிணக்கத்திற்கும் சகவாழ்விற்கும் அடிப்படையான விடயம் கட்டியெழுப்படும் என்பது உறுதி .

இதேவேளை யுத்தம் முடிவடைந்து கடந்த 9 வருடங்களில் வடக்கு மாகாணத்தில் 131 விகாரைகள் அமைக்கப்பட்டுள் என என வடக்கு மாகாண சபையில் தெரிவித்திருக்கின்றார் உறுப்பினர் ரவிகரன். இதன்படி யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 6 விகாரைகளும், கிளிநொச்சி மாவட்டத்தில் 3 விகாரைகளும், மன்னார் மாவட்டத்தில் 20 விகாரைகளும், வவுனியா மாவட்டத்தில் 35 விகாரைகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 67 விகாரைகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன எனவும் குறிப்படுகின்றார். ஆனால் யாழ் மாவட்டத்தில் நான்கு விகாரைகள் இருக்கின்றன என மாவட்டச் செயலகம் வெளியிட்டுள்ள தகவல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்தகைய தொரு நிலைமையிலையே புதிய புதிய விகாரைகள் அமைப்பதன் நோக்கங்கள் தொடர்பிலும் சந்தேகங்கள் வெளியிடப்பட்டிருப்பதுடன் அதற்கான எதிர்ப்புக்களும் தெரிவிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. சிங்கள மதத்தவர்கள் எவருமே இல்லாத இடத்தில் தமிழ் மக்கள் வாழ்ந்து வந்த இடங்களிலிருந்து தமிழ் மக்களை வெளியேற்றிவிட்டு புதிய விகாரைகளை அமைக்கும் அரசின் நடவடிக்கைகள் இன நல்லிணக்கத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்துவனவாகவே அமையும் என்பது நிச்சயம். *

# புலிகளுக்கு எதிரானவர் அல்லர் கருணாநிதி

## ஈழத்துக்கும் இவரே கலைஞர்

- ஷோபாசக்தி -



பிரபாகரனின் 23ஆவது வயதில் மெரினா கடற்கரையில் கலைஞருடன் முதற் சந்திப்பு நிகழ்ந்தது.

கலைஞர் அனைத்து ஈழப்போராளி இயக்கத் தலைவர்களுடனும் தொடர்ச்சியான உறவையும் உரையாடலையும் வைத்திருந்தார்.

எம்.ஜி.ஆர். போல வெறுமனே புலிகளுக்கு மட்டுமான நட்புச் சக்தியாகவோ ஈழப் பிரச்சினை குறித்து அறிவில்லாதவராகவோ கலைஞர் இருக்கவில்லை. அவர் ஈழப் பிரச்சினையின் அடிப்படை குறித்துத் தெளிவாகப் புரிந்திருந்தார்.

வைகோ அல்லது நெடுமாறன் போல அவர் வெறுமனே குருட்டுத்தனமாகப் புலிகளின் புகழைப் பாடுபவராக இருந்ததில்லை. புலிகளைக் கண்டிக்க வேண்டிய நேரத்தில் கண்டிக்கச் செய்தார்.

எதிர்க்க வேண்டிய நேரத்தில் எதிர்த் தார். ஆனால், அந்த எதிர்ப்பு ஒருபோதும் வெறுப்பாக மாறியதில்லை. புலிகளின் அரசியல் துறை தலைவர் சு.ப. தமிழ்ச்செல்வன் கொல்லப்பட்டபோது கலைஞர் இரங்கல் கவிதை எழுதினார்.

அப்போது தன்னுடைய திரைப் படங்களில் ஈழத்துக்கு ஆதரவான கூறுகளைக் கலைஞர் பொதித்துவைத்து எழுதினார். தமிழகத்தின் கட்டபொம்மனுக்கு இணையாக ஈழத்தில் பேசப்படும் பண்டாரவன்னியனை வைத்து பாயும்புலி பண்டாரவன்னியன் எனக் காவியம் எழுதினார்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு வெளியான எனது 'கண்டிவீரன்' சிறுகதைத் தொகுப்பை நான் கலைஞர் மு.கருணாநிதிக்கு சமர்ப்பித்திருந்தேன்.

அந்தச் சமர்ப்பணக் குறிப்பில் அவரை திரைப்பட வசனங்கள் ஊடாக எனக்குத் தமிழைக் கற்றுக்கொடுத்த ஆசான் எனப் பதிவு செய்திருந்தேன்.

தமிழக அரசியலிலும் தமிழ் சினிமாவிலும் கலைஞரின் வீறுகொண்ட எழுச்சி 1940களின் இறுதியில் ஆரம்பிக்கிறது. அதே வேளையிலேயே தி.மு.கவின் தாக்கமும் கலைஞரின் திரைப்படங்களும் அவரது எழுத்துகளும் கடல் கடந்து இலங்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்தின.

இலங்கைத் தமிழர்களின் வீடுகளிலே அறிஞர் அண்ணாத்துரையின் படமும் கலைஞரின் படமும் தொங்கத் தொடங்கின. இலங்கையில் தமிழ்த் தேசியமும் தமிழருக்கு சுயாட்சிக் கோரிக்கையும் தனிநாட்டுக் கோரிக்கையும் முளைவிடத் தொடங்கிய காலமும் இதுதான்.

இலங்கைத் தமிழ்த் தேசிய அரசியல் கட்சித் தலைவர்களும் அவர்களின் உணர்வுமிக்கதீவிரத் தொண்டர்களும்தி.மு.கவைப் பின்பற்றியே தங்களது அரசியலை வடிவமைத்துக்கொண்டார்கள்.

தி.மு.கவின் தனித் தமிழ்நாடு கோரிக்கையும் அதன் பின்னான முழுமையான மாநில சுயாட்சிக் கோரிக்கையும் அந்தக் கோரிக்கைகளை முன்னெடுக்க அவர்கள் முன்னெடுத்த மொழிப் பற்று, இனவுணர்வு, பண்டையகால தமிழ்நில அரசர்களின் காலத்தைப் பொற்காலமாகச் சித்திரிப்பது, மேடைகளில் முழங்கும் அடுக்குத் தமிழ், தீப்பொறியான பத்திரிகை எழுத்துகள் எல்லாவற்றையும் இலங்கைத் தமிழ்த் தேசியவாதிகள் அப்போது தி.மு.கவை பின்பற்றியே அமைத்துக்கொண்டார்கள். பிற்காலத்தில் அவர்களது தேர்தல் சின்னமாக தி.மு.கவின் உதயசூரியனே அமைந்து போயிற்று.



அதேவேளையில் தி.மு.கவின் சாதி மறுப்பு, கடவுள் மறுப்பு, சமூகநீதி, சுயமரியாதைத் திருமணம் போன்றவற்றையெல்லாம் மிகக் கவனமாக இலங்கைத் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் தவிர்த்துக் கொண்டார்கள்.

ஏனெனில், அன்றிலிருந்து இன்றுவரை இலங்கைத் தமிழ் அரசியல் கட்சிகளின் அதிகாரம் ஆதிக்க சாதியினரான வெள்ளாளர்களிடமே இருந்து வருகிறது.

தங்களது அரசியல் வளர்ச்சிக்குத் தேவையான தமிழ்த் தேசியத்தை மட்டுமே அவர்கள் தி.மு.கவிடமிருந்து எடுத்துக்கொண்டார்கள்.

அன்னப்பறவை தண்ணீரிலிருந்து பாலைப் பிரித்து எடுக்குமாம். இவர்கள் பாலிலிருந்து தண்ணீரை மட்டுமே பிரித்து எடுத்துக்கொண்டார்கள்.

நான் மின்சாரமோ திரையரங்கோ பத்திரிகைகளோ இல்லாத ஒரு சிறு கிராமத்தில் சிறுவனாக வளர்ந்த எழுபதுகளில் கிராமத்து கோயில் திருவிழாக்களிலோ அல்லது திருமண நிகழ்ச்சிகளிலோ கிராமத்தின் உயர்ந்த பனைகளில் லவுட் ஸ்பீக்கரைக் கட்டி கலைஞரின் திரைப்பட வசனங்களை ஒலிக்கவிடுவார்கள். பராசக்தி, மனோகரா, பூம்புகார் என எத்தனையோ படங்கள்.

என் கிராமத்தின் பனைகளிலிருந்து ஒலிக்கும் அந்த வசனங்களில் சாதி மறுப்பும் கடவுள் மறுப்பும் பாட்டாளி வர்க்கச் சிந்தனையும் பெண் உரிமைக்குரலும் சிவாஜி கணேசனதும் எஸ்.எஸ். ராஜேந்திரனதும் கண்ணம்பாவினதும் விஜயகுமாரியினதும் குரல்களிலே வரும். கலைஞரின் அரசியல் எழுச்சி உரைகள் தேர்தல் சமயங்களில் சற்றே மாற்றிப் பிரதிபண்ணி உள்ளூர் இளைஞர்களால் பேசப்படும்.

கலைஞரின் திரைப்பட வசனங்கள் கிராமத்து நாடகங்களில் அப்படியே நடிக்கப்படும். கலைஞரின் குரலை வாங்கிப் பேசிய பல இளைஞர்களில் நானும் ஒருவன்.

எந்தவொரு முற்போக்கு அரசியல் இயக்கமோ அரசியல் பத்திரிகையோ கிடையாத என் கிராமத்தில் கலைஞரின் வசனங்கள் மூலமே நான் இலக்கியத் தமிழையும் சமூகநீதி கோரிய குரலையும் சாதி எதிர்ப்பையும் நாத்திகத்தையும் முதன் முதலில் கற்றுக்கொண்டேன்.

அந்தப் பெரும் நன்றிக் கடனே என் நூலொன்றைக் கலைஞருக்கு நான் சமர்ப்பிக்கக் காரணமாயிருந்தது. இதொன்றைத் தவிர நான் ஒருபோதும் எனது நூலொன்றை உயிருடன் இருந்த ஒருவருக்குச் சமர்ப்பித்ததில்லை.

இலங்கையில் தமிழர்கள் மீதான முதலாவது இன வன்முறை 1956இல் ஆரம்பித்தது. இதன் பின் எத்தனையோ இன வன்முறைகள்.

அத்தனை வன்முறைகளையும் எதிர்த்து இந்தியாவிலிருந்து ஒலிக்கும் முதற் குரல் கலைஞருடையதாக இருந்தது.


இலங்கைத் தமிழ் மக்களுக்கு சுயாட்சியும் கௌரவமான அரசியல் தீர்வும் ஜனநாயக ஆட்சிமுறையும் கிடைக்க வேண்டும் என இறுதிவரை மனப்பூர்வமாக விரும்பிய தலைவர் கலைஞர். கலைஞர் வெறும் அறிக்கைகளிலும் மேடைகளிலும் மட்டும் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகச் செயற்பட்டவர் அல்லர். அவரும் அவரது கட்சியினரும் ஈழத்தமிழர்களிற்கு ஆதரவாக எண்ணற்ற போராட்டங்களையும் மாநாடுகளையும் நடத்தியவர்கள்.

ஈழப் போராளிகளுக்கு தமிழகத்தில் தமது வீடுகளிலும் சட்டமன்ற விடுதிகளிலும் அடைக்கலம் கொடுத்தவர்கள்.

பல்வேறு இக்கட்டுகளிலிருந்து புலிகளைச் சட்டத்தை மீறியும் காப்பாற்றியவர்கள். தி.மு.கவின் முக்கிய தலைவரான சுப்புலஷ்மி ஜெகதீசனும் மற்றும் பலரும் இதற்காக நீண்டகாலம் சிறைவாசத்தையும் அனுபவித்திருக்கிறார்கள்.

கலைஞர் வைகோ போலவோ சீமான் போலவோ ஒருபோதும் சகோதரப் படுகொலை களை ஆதரித்தவரல்லர்.

ராஜீவ் காந்தி கொலையை நியாயப்படுத்திப் பேசியவரல்லர். ஆனால், புலிகள் சென்னையில் பத்மநாபாவையும் தோழர்களையும் கொலை செய்தமையைத் தொடர்ந்து கலைஞரின் ஆட்சி கலைக்கப்பட்டது.



ராஜீவ் காந்திப் படுகொலையைத் தொடர்ந்து தி.மு.க. குறிவைத்துத் தாக்கப்பட்டது. கட்சிக்கு பலத்த பின்னடைவு ஏற்பட்டது. அப்போது நடந்த தேர்தலில் வரலாற்றில் இல்லாதவாறு தி.மு.க. படுதோல்வியைச் சந்தித்தது.

## தமிழ்ச்செல்வனின் இறப்புக்கு கவிதாஞ்சலி வடித்தவர் அவர்

இலங்கையின் முக்கிய அரசியல் தலைவர்களாக விளங்கிய செல்வநாயகம், அமிர்தலிங்கம் போன்ற எல்லோருடனும் கலைஞருக்கு எப்போதுமே நல்லுறவு இருந்தது. பிரபாகரன் ஒரு முறை கலைஞருக்கு உதவி கோரி எழுதிய கடிதத்தில் எங்களின் நம்பிக்கை நட்சத்திரம் நீங்கள் என எழுதியிருந்தார்.

பிரபாகரனின் 23ஆவது வயதில் மெரினாக் கடற்கரையில் கலைஞருடன் முதற் சந்திப்பு நிகழ்ந்தது.

கலைஞர் அனைத்து ஈழ போராளி இயக்கத் தலைவர்களுடனும் தொடர்ச்சியான உறவையும் உரையாடலையும் வைத்திருந்தார்.

கலைஞர் 1985இல் உருவாக்கிய தமிழீழ ஆதரவாளர் அமைப்பு (டெசோ) ஈழத்தமிழர்களுக்காக பல்வேறு போராட்டங்களைத் தமிழகத்தில் நடத்தியது.

அன்டன் பாலசிங்கம் உட்பட மூன்று போராளி இயக்கத் தலைவர்களை இந்தியாவிலிருந்து நாடு கடத்த மத்திய அரசு முடிவெடுத்தபோது கலைஞர் அதை உறுதியாக எதிர்த்து நின்று டெசோ அமைப்பின் மூலம் போராடினார்.

பிரதமருக்குக் கறுப்புக்கொடி காட்டுவேன் என்றார். மத்திய அரசு உத்தரவை திரும்பப் பெற்றது.

1986 மேயில் மதுரையில் டெசோ அமைப்பின் சார்பில் மாபெரும் இலங்கைத் தமிழர் ஆதரவு மாநாட்டை நடத்தினார். வாஜ்பாய், என்.டி.ராமராவ் என அனைத்திந்தியத் தலைவர்கள் கலந்துகொண்ட மாநாடு அது. இம்மாநாட்டில் இயற்றப்பட்ட தீர்மானங்கள்:

இலங்கைத் தமிழர்களுக்கு நிலையான உரிமையும் நிரந்தரப் பாதுகாப்பும் கிடைக்கும் வரை போராடுவது. போராளிகளுக்கு அடைக்கலம் தரும் கடமையிலிருந்து தவறாமல் இருப்பது. தமிழினத்தின் பாதுகாப்புக்காக எந்தவித தியாகத்துக்கும் தயாராக இருப்பது.

இந்தக் கடமைகளைச் செய்யும்போது மத்திய – மாநில அரசுகளின் அடக்குமுறைகளுக்கு ஆளாக நேர்ந்தாலும் அவற்றை இன்முகத்துடன் ஏற்பது என்பவையாக இருந்தன.

இலங்கைக்கு 1987இல் சென்ற இந்திய அமைதிப் படையினர் பொதுமக்கள் மீது நிகழ்த்திய கொலைகளையும் பாலியல் வல்லுறவுகளையும் பொதுமக்களின் குடியிருப்புகள் மீதான விமானத் தாக்குதல்களையும் கலைஞர் உடனுக்குடன் கண்டித்தவாறேயிருந்தார்.

இதன் உச்சக்கட்டமாக 1990 மார்ச் இந்திய அமைதிப் படை நாடு திரும்பியபோது முதலமைச்சர் என்கிற ரீதியில் அதை வரவேற்க வேண்டிய கடமை கலைஞருக்கு இருந்தது. ஆனால், கலைஞர் அந்தக் கடமையை மறுத்தார்.

அப்போது கலைஞர் மீது வைக்கப்பட்ட விமர்சனம் 'தேசத்துரோகி' என்பதற்கு ஒப்பாக இருந்தது. அதற்கெல்லாம் கலங்காமல் தன் முடிவில் உறுதியாக இருந்தார் கலைஞர்.

இந்திய அமைதிப்படையை வரவேற்க செல்லாத முதல்வர் கலைஞர் இரகசியமாக ஆன்டன் பாலசிங்கத்தைச் சென்னைக்கு வரவேற்றார்.

அவரோடும் வட – கிழக்கு மாகாண சபை முதல்வர் வரதராஜப்பெருமாளோடும் பேசி தமிழ்ப் போராளிகளிடையே ஓர் உடன்பாட்டைக் கொண்டுவர முயற்சித்தார்.

அது நடக்கவில்லை. இதன் பின்பு நடந்தது ராஜீவ் கொலை. இதற்குப் பின்பு இந்திய அரசு மட்டுமல்ல இந்திய மக்களும் ஈழப் போராளிகளை வேறு மாதிரிப் பார்க்கத் தொடங்கினார்கள்.

புலிகளை அழித்துவிடுவது என்கிற முடிவில் இந்தியா மட்டுமல்ல பல்வேறு சர்வதேச நாடுகளும் உறுதியாக இருந்தன.

அமெரிக்காவில் நடைபெற்ற இரட்டைக் கோபுரத் தாக்குதலைத் தொடர்ந்து புலிகள் சர்வதேச அளவில் நெருக்கப்பட்டனர்.

கிட்டத்தட்ட 30 நாடுகளில் புலிகளுக்கு தடைவிதிக்கப்பட்டது. வெறுமனே ஒரு மாநிலக் கட்சியின் தலைவரான கலைஞரின் கைகளை மீறிச் சம்பவங்கள் நடந்தன.

முள்ளிவாய்க்காலில் இறுதிப் போர் நடந்துவரை கலைஞர் இந்த யுத்தத்தை நிறுத்த தன்னால் முடிந்தளவு முயற்சித்தார்.

தி.மு.க. முக்கியஸ்தர்கள் சிலரோடு புலிகள் கடைசிவரை தொடர்பை வைத்திருந்தனர். கலைஞர் மெரினா கடற்கரையில் சில மணிநேரங்கள் நடத்திய யுத்த நிறுத்தம் கோரிய உண்ணாவிரதம் கேலியானது எனச் சிலர் சொல்வதை நான் ஏற்பதாக இல்லை.

அவர் உண்ணாவிரமிருந்தபோது இலங்கை அரசு கனரக ஆயுதத் தாக்குதல்களையும் விமானத் தாக்குதல்களையும் நிறுத்துவதாக உறுதியளித்தது. அந்த உறுதியளிப்பின் நகல் பிரணாப் முகர்ஜி மூலம் கலைஞரிடம் கையளிக்கப்பட்ட பின்பே கலைஞர் உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார்.

கலைஞர் தமிழ்த் தேசியவாத முகம் கொண்ட பிற தமிழகத் தலைவர்களைப் போல புலிகளை விமர்சனமின்றி வழிபட்டவரல்லர்.

தீவிர புலி விசுவாசம் காட்டி அரசியல் செல்வாக்குப் பெற வேண்டிய நிலையில் அவர் இருக்கவில்லை.

அவரது அரசியல் பலமும் அவரது கட்சியின் கட்டமைப்பும் இந்த மொண் ணைத்தனமான தமிழ்த் தேசியத்திலிருந்து வேறானவை. ஜனநாயக அரசியலை அடிப்படையாக்கொண்டவை.

திராவிட இயக்கத்தில் தமிழ் இலக்கியத்தில் தமிழ் சினிமாவில் என்றென்றைக்கும் தலைமகனாகக் கலைஞர் கருதப்படுவது போல ஈழத்தமிழர்களின் இன்பதுன்பங்களில் உடன் இருந்தவராக எங்களது அரசியலிலும் கலை – இலக்கியத்திலும் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியவருமாகவே கலைஞரைக் காலம் குறித்துக்கொள்ளும்.

*

காலைக்கதிர் Kalaikkathir





# என்ன கழுத்து வலியா? எளிய பயிற்சி முறை!

நீண்டநேரம் அலுவலகத்தில் அமர்ந்து வேலை செய்பவர்கள், எங்கே நேரம் கிடைக்கிறது? என அலுத்துக்கொள்வது வழக்கம். ஆனால், இருந்த இடத்திலேயே சில எளிய பயிற்சிகளைச் செய்ய முடியும்.

நீண்ட நேரம் அமர்ந்திருக்கும்போது தசைகள் இறுக்கம் அடைந்திருக்கும். அந்தநேரத்தில் பயிற்சி செய்தால், தசைகள் பாதிக்கப்படும். பயிற்சியைத் தொடங்குவதற்கு முன், நிமிர்ந்த நிலையில் கதிரையில் உட்கார்ந்து, புன்னகையுடன் ஆழமாக மூச்சை இழுத்து விட வேண்டும். பாதங்களைத் தரையில் பதித்து, உள்ளங்கைகளைத் தொடைகளில் வைத்து, கண்களை மூடி 10 முறை ஆழமாக மூச்சை இழுத்து, வெளிவிட வேண்டும்.

சாதாரணமான நிலையில் உட்கார்ந்தபடியே கண்களைத் திறந்து, ஆழமாக மூச்சை இழுத்துக்கொள்ள வேண்டும். மெதுவாக மூச்சு விட்டபடியே இடதுபுறமாகக் கழுத்தைத் திருப்பி, மூச்சை உள் இழுத்தபடி பழைய நிலைக்கு வந்து, மூச்சை வெளியேவிட வேண்டும்.

கழுத்தைத் திருப்பும்போது, இரண்டு விநாடிகள் அப்படியே வைத்திருக்க வேண்டும். இதேபோல், வலதுபுறம், மேல், கீழ் எனக் கழுத்தைத் திருப்பி பயிற்சி செய்ய வேண்டும். கழுத்தை மட்டும் திருப்ப வேண்டும். இந்தப் பயிற்சியை மூன்று முறை செய்ய வேண்டும்.

பலன்கள்: மூளைக்குத் தேவையான ஒக்சிஜன் மற்றும் ரத்தம் சீராகச் செல்லும். மூளை செல்கள் புத்துயிர் பெறும். கழுத்து வலி குறைவதை உணர முடியும். இறுக்கங்கள் நீங்கும்.

# காய்கறிகள், பழங்கள் சாப்பிட்டால் நீரிழிவு கட்டுக்குள் இருக்கும்



காய்கறி மற்றும் பழங்களை சாப்பிடுவதால் உங்களது நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கும்.

வெண்டைக்காய் அடிக்கடி உங்களது உணவுப்பட்டியலில் சேர்த்துக் கொள்ளுங்கள். இவற்றைத் தாண்டி வெண்டைக்காய் ஊற வைத்த தண்ணீரை குடிப்பது மிகவும் சிறந்தது. முதல் நாள் இரவிலேயே வெண்டைக்காயை துண்டுகளாக வெட்டி தண்ணீரில் ஊற வைத்திட வேண்டும். பின்னர் மறுநாள் காலை அந்த தண்ணீரை வடிக்கட்டி காலையில் குடித்து வர நீரிழிவைக் கட்டுக்குள் கொண்டு வர முடியும்.

பீர்க்கங்காயில் இருக்கும் பெப்டைட்ஸ், ஆல்க லாப்ட்ஸ், சோன்டின் போன்ற இரசாயனப் பொருள்கள் ரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவைக் குறைக்க உதவுகின்றன.


பீன்ஸ்வகைகளில் அதிக அளவு நார்ச்சத்து, புரோட்டீன், பொட்டாசியம், மக்னீசியம் நிறைந்துள்ளன. இவை, உடலுக்குத் தேவையான ஆற்றலை அளித்து, நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்துகின்றன. இது, செரிமானத்தை சீராக்கி, ரத்தத்தைச் சுத்திகரிக்கிறது. இதனால், ரத்தத்தில் சர்க்கரை அளவு கட்டுப்படுத்தப் படுகிறது.

காலி ஃப்ளவரில் பைட்டோகெமிக்கல் மற்றும் அஸ்கார்பிக் அமிலம் நமக்கு ஏராளமான நன்மைகளை செய்திடுகிறது. இதனால் இதயம் தொடர்பான பிரச்சனைகள் மற்றும் ரத்தச் சர்க்கரையளவு கட்டுக்குள் வைக்க உதவுகிறது.

பாகற்காயில் அதிகளவு பீட்டா கரோட்டீன் இருக்கிறது. இவை தான் நம் உடலில் விட்டமின் ஏயாக சேகரிக்கப்படுகிறது. இதைத் தாண்டி இதில் கல்சியம், பொட்டாசியம்,விற்றமின் பி1, பி2, பி3, சி, மக்னீசியம், ஃபோலேட், சிங்க், பொஸ்பரஸ், மாங்கனீஸ், நார்ச்சத்து ஆகியவை உண்டு.

இவை ரத்தத்தில் இருக்கக்கூடிய அதிகளவு சர்க்கரையை குறைத்து கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க உதவி செய்யும்.

# பேராசையால் வந்த வினை




திருவெண்ணெய் நல்லூரில் பேராசைக்காரன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் எந்த பொருளை பார்த்தாலும் அதைத் தான் அடைய வேண்டும் என நினைப்பான். எனவே, நாளடைவில் பார்த்தசாரதி என்ற அவனுடைய பெயரே மறைந்து போய் பேராசைக்காரனாயிற்று.

ஒரு நாள், வெளியூருக்கு வியாபார நிமித்தமாக வண்டியில் சரக்குகளை ஏற்றிக் கொண்டு சென்றான்.

வியாபாரம் முடிந்து காட்டு வழியாக வந்து கொண்டிருந்தான். தண்ணீர் வேட்கை கொண்ட அவன் கண்களுக்கு கிணறு ஒன்று தெரிந்தது. வண்டியைவிட்டு இறங்கிய அவன் அந்தக் கிணற்றருகே சென்றான். ஒரு பாத்திரத்தில் கயிற்றைக் கட்டி அதை கிணற்றுக்குள் விட்டுத் தண்ணீர் எடுக்கத் தொடங்கினான்.

கிணற்றுக்குள் இருந்து யார் இங்கே தண்ணீர் எடுப்பது?' என்ற பயங்கரமான குரல் கேட்டது.

அஞ்சி நடுங்கிய அவன் கிணற்றுக்குள் எட்டிப்பார்த்தான். உள்ளே யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. நடுங்கும் குரலில், ஐயா! நான் ஓர் ஏழை. தண்ணீர் குடிப்பதற்காக இங்கு வந்தேன். நீங்கள் யார்?" என்று கேட்டான்.

விரும்பியதை எல்லாம் கொடுக்கும் மந்திரக் கிணறு இது. இதைப் பாதுகாக்கும் பூதம் நான். யார் கண்ணுக்கும் நான் தெரியமாட்டேன்," என்றது அந்தக் குரல்.

மந்திரக்கிணறா! விரும்பியதை எல்லாம் தருமா?" என்று வியப்புடன் கேட்டான் அவன்.

உன்னிடம் பொற்காசுகள் உள்ளனவா? ஒரு பொற்காசை இந்தக் கிணற்றுக்குள் போடு உன் விருப்பம் எதுவானாலும் கேள். உடனே அது நிறைவேறும். நன்றாக நினைவு வைத்துக் கொள். இரண்டு முறைதான் இந்தக் கிணறு உன் எண்ணத்தை நிறைவேற்றும்," என்றது அந்தக் குரல்.

என்னதான் நடக்கிறது பார்ப்போமே' என்ற எண்ணத்தில் ஒரு பொற்காசை கிணற்றுக்குள் போட்டான். விலை உயர்ந்த நகைகளாலும் பொற்காசுகளாலும் என் வண்டி நிரம்ப வேண்டும்..." என்றான் அவன்.

ஒரு நொடிக்குள் அவன் வண்டி பொற்காசுகளாலும் நகைகளாலும் நிரம்பி இருந்தது. இதைப் பார்த்து வியப்படைந்தான் அவன்.

ஆ! ஏராளமான செல்வம் கிடைத்துவிட்டது. இந்த நாட்டிலேயே பெருஞ்செல்வன் நான் தான்," என்று மகிழ்ச்சியுடன் சொல்லிக் கொண்டே வண்டியில் அமர்ந்தான்.

ஐயோ! காட்டு வழியாகச் செல்ல வேண்டுமே! வழியில் திருடர்கள் இருப்பார்களே... அவர்கள் இந்த நகைகளையும் பொற்காசுகளையும் கைப்பற்றிக் கொள்வார்களே! என்ன செய்வது?' என்று சிந்தித்தான்.

நல்ல வழி ஒன்று அவனுக்குத் தோன்றியது. கிணற்றருகே வந்த அவன் தன்னிடம் இருந்த இரண்டாவது பொற்காசையும் அதற்குள் போட்டான்.

உனக்கு என்ன வேண்டும்?" என்று உள்ளிருந்து குரல் கேட்டது.

வண்டியில் இருக்கும் நகைகளும் பொற்காசுகளும் என் கண்களுக்கு மட்டும் தெரிய வேண்டும். பிறர் கண்களுக்குத் தெரியக் கூடாது," என்று கேட்டான்.

அப்படியே ஆகட்டும்," என்று குரல் வந்தது.

வண்டியை ஓட்டிக் கொண்டு புறப்பட்டான். எதிரில் திருடர்கள் சிலர் வந்தனர். அவர்கள் கண்களுக்கு வண்டியில் இருந்த நகைகளும் பொற்காசுகளும் தெரியவில்லை. தன் அறிவுக் கூர்மையை மெச்சிக் கொண்டான் பேராசைக்காரன். மகிழ்ச்சியுடன் தன் வீட்டை அடைந்தான்.

வீட்டுக்குள் ஓடினான். இனி நாமோ நம் பரம்பரையோ வறுமையில் வாட வேண்டாம். அரசனைப் போல செல்வச் செழிப்புடன் வாழலாம். வண்டியில் விலை உயர்ந்த பொருள்கள் என்னென்ன கொண்டு வந்துள்ளேன் பார்!" என்று மகிழ்ச்சியுடன் சொன்னான்.

வண்டி காலியாக இருப்பதைப் பார்த்து அவன் மனைவி திகைத்தாள். என்னங்க! வண்டியில் விலை உயர்ந்த பொருள்கள் இருக்கின்றன எனச் சொன்னீர்கள். எந்தப் பொருளும் இல்லையே," என்றாள்.

அவன் கண்களுக்கு வண்டியில் ஏராளமான பொற்காசுகளும் நகைகளும் இருப்பது தெரிந்தது. மனைவியைப் பார்த்து, வண்டியை நன்றாகப் பார்," என்றான்.

நன்றாகப் பார்த்து விட்டுத் தான் சொல்கிறேன் என்றாள்.

அப்பொழுதுதான் அவனுக்குத் தான் கேட்ட இரண்டாம் வரம் எவ்வளவு தவறானது என்று புரிந்தது. தன் மனைவியிடம் நடந்ததைக் கூறினான். கிடைத்த விலை மதிப்பற்ற பொருள்களைப் பயன்படுத்த முடியாத நிலையை எண்ணி வருத்தம் அடைந்த அவன் வண்டியை ஓட்டிக் கொண்டு மீண்டும் காட்டிற்குச் சென்றான்.

அந்த இடத்தில் மந்திரக்கிணறும் இல்லை; ஒன்றும் இல்லை. பைத்தியம் பிடித்தவனைப் போல் வண்டியை எட்டி உதைத்தான். அதிலிருந்து நகைகளும், பொருள்களும் கீழே கொட்டிச் சிதறின.

அவை இவன் கண்களுக்கு மட்டுமே தெரிந்தன. தன்னுடைய பேராசை குணத்திற்கு கிடைத்த பரிசு என நினைத்து மிகவும் வருந்தினான் பார்த்தசாரதி.

**நீதி : பேராசை பெரும் நஷ்டம் கொடுக்கும்.**

# ஆட்டிறைச்சியிலும் வடை!

குழந்தைகள் ஆட்டிறைச்சி என்றால் சாப்பிட மறுப்பார்கள். அதைக் குழந்தைகள் சாப்பிடும் வகையில் வடை செய்வது எப்படி என்று பார்க்கலாம்.

தேவையான பொருள்கள் :

எலும்பில்லாமல் ஆட்டிறைச்சி – 200 கிராம்
கடலைப்பருப்பு – 50 கிராம்
சோம்பு – 10 கிராம்
கரம்மசாலாத் தூள் – 2 கிராம்
பூண்டு– 50 கிராம்
பச்சைமிளகாய் – 3
கறிவேப்பிலை – 3 ஈர்க்கு
கொத்தமல்லித்தழை – சிறிதளவு
சீரகம் – 5 கிராம்
வெங்காயம் – 25 கிராம்
பொட்டுக்கடலை (லேசாகப் பொடிக்கவும்) – 20 கிராம்
எண்ணெய் – பொரிக்கத் தேவையான அளவு
பெருங்காயம் –சிறிதளவு
உப்பு – தேவையான அளவு



செய்முறை :

எலும்பில்லாமல் கொத்திய ஆட்டிறைச்சி நன்றாக சுத்தம் செய்து வைக்கவும்.

வெங்காயம், பூண்டு, கறிவேப்பிலை, கொத்தமல்லியை பொடியாக நறுக்கி கொள்ளவும்.

ஒரு பாத்திரத்தில் கடலைப்பருப்பு, சோம்பு, சீரகம், பச்சைமிளகாய் சேர்த்து ஊறவைத்து பின்பு கரகரப்பாக அரைத்துக் கொள்ளவும்.

அரைத்த விழுதுடன் கொத்திய ஆட்டுக்கறியையும் போட்டு அரைத்து தனியாக வைக்கவும்.

பொட்டுக்கடலை, கரம் மசாலாத்தூள், பெருங்காயம் சேர்த்து தண்ணீர் விடாமல் மிக்ஸியில் அரைத்து எடுத்துக் கொள்ளவும்.

ஒரு பாத்திரத்தில் அரைத்த ஆட்டிறைச்சி விழுது, பொட்டுக்கடலை விழுது, உப்பு சேர்த்து ஒன்றாகக் கலந்து சிறு உருண்டைகளாகப் பிடித்து, தட்டையாகத் தட்டவும். இவ்வாறு அனைத்து மாவிலும் செய்து வைக்கவும்.

சட்டியில் எண்ணெய் ஊற்றி சூடானதும் செய்து வைத்துள்ள உருண்டைகளை வடைகளாக தட்டி போட்டு எண்ணெயில் போட்டு பொரித்து சூடாகப் பரிமாறவும்.

குழந்தைகள் விரும்பிச் சாப்பிடுவார்கள்.

காலைக்கதிர்
Kalaikkathir



# காலமும் 06 கணங்களும்

# புத்தகம் வெளியிடுவதற்காக மனைவியின் தாலிக்கொடியை ஈடுவைத்த கவிஞர் ஈழவாணன்

## அக்னி வேள்வியில் புடமிட்டு வந்த கவிவாணன் நினைவுகள்

- முருகபூபதி - ஆஸ்திரேலியா -

கண்ணகி கால் சிலம்பை கழற்றினாள். சிலப்பதிகாரம் படித்தோம்

என்மனைவி கை வளையல்களை கழற்றினாள்

நீங்கள் கண்ணீர்ப்பூக்கள் படிக்கிறீர்கள்.

இந்தக் கவிதையைப் படித்திருப்பீர்கள். அல்லது அறிந்திருப்பீர்கள். கவிஞர் மேத்தா, தனது கண்ணீர்ப்பூக்கள் கவிதைத் தொகுப்பு முன்னுரையில் சேர்த்துக்கொண்ட கவிதை இது.

சிறிது காலத்தில் மேத்தா, ஆனந்த விகடன் பொன்விழா ஆண்டை முன்னிட்டு சோழநிலா நாவல் எழுதி, முப்பதாயிரம் ரூபா பரிசினைப் பெற்றபொழுது, ஈழத்தில் ஒரு கவிஞர் நண்பர் இளங்கோவன் யாழ்ப்பாணத்தில் வெளியிட்ட இலக்கிய ஏட்டில் இவ்வாறு பதில் கவிதை எழுதினார்,

சோழா நிலா எழுதினீர்கள்
கை வளையல்களை மீட்டீரா?

இப்படி ஒரு சுவாரஸ்யம் எங்கள் இலக்கிய உலகில் நிகழ்ந்தது.

மனைவிமாரிடம் ஏச்சும் திட்டும் மாத்திரம் நாம் வாங்கவில்லை. எமக்கு அவசியம் நேர்ந்த சமயங்களில் அவர்களிடமிருந்து நகைகளும் வாங்கியுள்ளோம். இது தமிழ் எழுத்தாளர் பரம்பரையின் இலட்சணம்.

அவ்வாறு தனது அருமை மனைவியின் தாலிக்கொடியை ஈடுவைத்து கவிதைப் புத்தகம் வெளியிட்டவர் கவிஞர்



கவிஞர் மு.மேத்தா

ஈழவாணன்.

உமக்கேனய்யா! இந்த வேலை? என்று நண்பர்கள் அவரிடம் சினந்தாலும் அதனைக்கேட்டு முகம் சுழிக்காத இலக்கிய உணர்வுமிக்க அருமையான பெண்மணி திருமதி. ஈழவாணன். எனினும் கணவர் கேட்டாரே என்பதற்காகதாலிக்கொடியைஅவர் கழற்றியிருக்கக் கூடாது என்று பேசினார்கள் நண்பர்கள்.

ஏனென்றால் கவிஞர் மேத்தாவுக்கும் மற்றும் பல தமிழக எழுத்தாளர்களுக்கும் கிடைத்தது போன்று பல்லாயிரக் கணக்கான ரூபாய் பரிசில்கள் ஈழத்து எழுத்தாளனுக்கு அக்காலப்பகுதியில் கிடைத்ததும் இல்லை. கிடைக்கப் போவதுமில்லை. விற்ற நகையை மீட்பதற்கு.

ஈழவாணனை முதல் முதலில் அவரது அக்கினிப்பூக்கள் வெளியீட்டு விழாவில் சந்தித்தேன். கொழும்பு கொள்ளுப் பிட்டி தேயிலை பிரசார சபை மண்டபத் தைப் பற்றி அறிந்திருப்பீர்கள். இலக்கிய வட்டாரத்துக்கு பிரசித்தமான இடம். அங்கு அடிக்கடி நூல் வெளியீட்டு நிகழ்வுகள், இலக்கியக் கூட்டங்கள் நடைபெறும்.

அங்கு நடந்த ஒரு நிகழ்வில் பேசிய கவிஞர் முருகையன், இதன் பெயரை புத்தக பிரசார சபை மண்டபம் என்று மாற்ற வேண்டும் எனக் கூறி கைதட்டல்களையும் சிரிப்பொலிகளையும் வாங்கிக் கொண்டார். அங்கு சென்றால் இலக்கியமும் சுவையான தேநீரும் கிடைக்கும்.

அக்கினிப்பூக்கள் வெளியீட்டு விழாவுக்கு தலைமை தாங்கியவர் அன்றைய அமைச்சர் செல்லையா குமாரசூரியர். நூல் ஆய்வுரை நிகழ்த்தியவர்கள் கைலாசபதி, சிவத்தம்பி, எச்.எம்.பி.மொஹிதீன்.

அடுத்தடுத்து இரண்டு ஈஸ்வரன்களை அழைத்து விட்டேன். இனி முகம் மதுவை அழைக்கின்றேன். எனவேடிக்கையாகப் பேசினார் குமாரசூரியர்.

அக்கினிப்பூக்கள்வெளியிட்டகையோடு புதுக்கவிதை இதழ் வெளியிடும் ஆவல் தோன்றியது ஈழவாணனுக்கு. நண்பர் மேமன்கவி, வானொலிக்கலைஞர் சித்திரவேல் உட்பட சிலர் அவருக்கு ஆதரவு வழங்கினர் ஆயினும் கையை கடிக்கும் எனத் தெரிந்ததும் சிலர் ஒதுங்கிக்கொண்டனர். இறுதிவரையில் தாக்குப்பிடித்து



கவிஞர் ஈழவாணன்

அவருடன் நின்றவர் நானறிந்தவரையில் மேமன்கவி மாத்திரமே.

ஈழவாணன் மறைந்த பின்பும் அவரது குடும்பத்திற்கு உதவுவதிலும் முன்னின்றவர் இந்த தமிழரல்லாத தமிழ்க் கவிஞர்தான்.

நானும் ஈழவாணனும் சந்தித்த காலம் இருவருமே வேலை தேடும் படலத்தில் கழிந்தது. இலக்கியம் பேசிப்பேசி வேலை தேடினோம்.

கிடைக்குமா.....? கிடைத்தது ஈழவாணனுக்கு மாத்திரம்தான்.

அக்னி புதுக்கவிதை ஏடும் ஆரம்பித்து, சில மாதங்களில் அது அவர் கையைச் சுட்டு, நின்றுவிட்ட பின்புதான் தினபதியில் அவர் ஒப்புநோக்காளராக (Proof Reader) சிரமப்பட்டுச் சேர்ந்தார். அங்கு ஏற்கனவே பணியாற்றிய அனுபவமும் அவருக்கிருந்தது.

ஸ்ரீமா அம்மையாரின் ஆட்சிக்காலத்தில் தடைசெய்யப்பட்டு இழுத்து மூடப்பட்ட நிறுவனம் அது. அச்சயம் ஈழவாணனும் வேலை இழந்திருந்தார். தனது துயரம் போக்கும் வடிகாலாக அக்னி ஏட்டைத் துவங்கினார். ஆத்மா திருப்தியடைந்திருக்கலாம். இட்ட முதலும் இன்றி நட்டப்பட்டார்.



புதுக்கவிதை சரியா? அதனை ஏற்றுக் கொள்ளலாமா? இது காலத்தையும் வென்றுவாழும் இலக்கிய வடிவமா? என்ற சர்ச்சைகள் மேலோங்கி தமிழகத்தில் வானம்பாடி குழுவினரால் நம்பிக்கையை தோற்றுவித்த வடிவம் அது.

வானம்பாடியைப் போன்று ஈழத்திலும் அக்னியை தரமாக வெளியிட வேண்டும் என்ற ஆவல் அவருக்கு அதிகம். அதில் முழுவதும் கவிதையாக இராமல் விமர்சனங்களுக்கும் இடமளிக்க விரும்பினார். நண்பர்கள் எம்.ஏ.நுஃமான், சண்முகம் சிவலிங்கம் , மு.கனகராஜன் , இ.இரத்தினம் , திருமதி பாலம்லக்ஷ்மணன், சில்லையூர் செல்வராசன் முதலானோரின் ஆலோசனைகளையும் பெற்றார்.

1970களில் இலக்கியக் கூட்டங்களுக்குகென்ன, வேறு எந்தக் கூட்டங்களுக்குமே பெண்கள் தலைமை ஏற்பதில்லை. அத்தகைய சூழலில் பெண்களை சமமாக நடத்திசம அந்தஸ்து வழங்குகிறோம் என்று பீற்றிக் கொள்ளும் நாமும் இது விடயத்தில் அசிரத்தையாகத்தான் இருக்கிறோம் என்று சொன்னதுடன் நின்றுவிடாமல், பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் அக்னி முதல் இதழ் வெளியீட்டு விழாவில் திருமதி.பாலம் லக்ஷ்மணன் அவர்களைத் தலைமை ஏற்கச் செய்தார் ஈழவாணன்.

எதிலும் வித்தியாசம் வேண்டும். புதுமையை நாடவேண்டும் என்ற ஆவலும் அவருக்கு அதிகம்.

தனது புதுக்கவிதை ஏட்டிற்கு அக்கினி என பெயர் சூட்டாமல் அக்னி என்றுதான் வைத்தார். ஏன்...? என்று கேட்டேன்.

அக்னி என உச்சரிக்கும் பொழுது அழுத்தம் அதிகம் என்றார்.

அக்னியை குறைந்த செலவில் அச்சி டுவதற்காக, நீர்கொழும்பில் அப்பொழுது எனது நண்பர்கள் நவரத்தினராசாவும் யோகநாதனும் இணைந்து குத்தகை அடிப்படையில் நடத்திய சாந்தி அச்சகத்தை அறிமுகப்படுத்தினேன். இந்த சாந்தி அச்சகம் பற்றி சில வார்த்தைகள்.

இதன்உரிமையாளர் எனது அன்புக் குரிய உறவினர் (அமரர்) அ.மயில்வாகனன். தமிழ் உணர்வுமிக்கவர். அண்ணி என்ற மாத இதழை 1966 இல் இரண்டு மாதங் களே வெளியிட்டு நட்டப்பட்டவர்.

பின்பு 1975 ஆம் ஆண்டில் எனது நண்பர்கள் பொறுப்பில் அச்சகம் இயங்கிய பொழுதுதான் எனது சுமையின் பங்காளிகள், எழுத்தாளர் சாந்தனின் ஒரே ஒரு ஊரிலே, திக்குவல்லை எழுத்தாளரின் பூ புதுக்க விதைத் தொகுதி, புத்தளம் தில்லையடிச் செல்வனின் விடிவெள்ளி புதுக்கவிதை ஏடு – ஈழவாணனின் அக்னி முதலானவை அங்கிருந்து வெளியாகின.

ஈழவாணன் சில நாள்கள் எம்முடனேயே அச்சகத்தில் இரவுப்பொழுதைக் கழித்து விடுவார். நானும் அவருடன் நித்திரை விழித்து அக்னி புரூஃப் (Proof) திருத்துவேன். கண்ணைச் சுழற்றினால் பேப்பர்களை தரையில் விரித்துபடுத்து விடுவோம்.

நவரத்தினராசா தேநீருடன் வந்து எம்மை துயில் எழுப்புவார். ஈழவாணனுக்கு தேநீரும் சிகரெட்டும் இருந்தால் போதும். உணவே அவசியமில்லை. அவரது பசி போக்கிய ஆகாரங்கள் அவை. அவருக்கு மட்டுமல்ல, எனது மேலும் சில எழுத்தாள நண்பர்களுக்கும் வறுமையில் பசி போக்கியவை தேநீரும் சிகரெட்டும் தான்.

அக்னியில் பாரதி மறுபரிசீலனை என்ற தலைப்பில் அந்த மகாகவியை ஒரு பொருள் முதல்வாதியாக நிரூபித்து ஒருவர் எழுதினார். அதனைப் புரூஃப் திருத்தும்பொழுது நண்பரை கடிந்து கொண்டேன். நண்பர் யேசுராசாவின் தொலைவும் இருப்பும் ஏனைய கதைகளும் சிறுகதை தொகுதிக்கும் மட்ட ரகமான விமர்சனம் அக்னியில் வெளியாகியது.

இவற்றைப் பிரசுரிக்க வேண்டாம் என்று ஈழவாணனுடன் சண்டை பிடித்தேன்.

உமக்குப் பிடிக்காதிருக்கலாம்.




ஆனால் இவற்றை விரும்பிப் படிப்பதற்கும் ஆட்கள் இருக்கிறார்கள் என்று மிகச் சுருக்கமாக எமது விவாதத்துக்கு முற்றுப்புள்ளி இட்டார்.

அவர் அக்னியின் ஆசிரியர். எதனையும் தீர்மானித்து முடிவெடுக்கும் உரிமை அவரைச் சார்ந்தது. நான் நண்பன். புரூஃப் திருத்துவது மாத்திரமே இப்போது எனது வேலை. அதனால் நட்பின் பொருட்டு விவாதத்தை தொடரவில்லை.

நான் எதிர்பார்த்தவாறே அந்த விமர்சனங்களுக்கும் எதிர்ப்புக் கிளம்பியது. அப்பொழுதும் அமைதியாகச் சிரித்தார் ஈழவாணன்.

அக்னி அவ்விதமாகவேனும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கை அவருக்கு.

Black Poetries இல் இருந்து சில அற்புதமான கறுப்பு இனத்தவர்



திருமதி பாலம் லக்ஷ்மணன்

கவிதை களை அக்னி மூலம் வெளியிட்டார். சில கவிதைகள் நண்பர்களினால் மொழி பெயர்க்கப்பட்டன. உண்மையில் அது தரமான சிறிய தொகுப்பு.

ஒரு நாள் அச்சகத்தில் தரையில் கிடந்த வெள்ளைத்தாளில் அச்சடிக்கப் பயன்படுத்தும்மை சிறிது கொட்டிவிட்டது. அச்சக ஊழியர் அந்தத் தாளை எடுத்து மடித்து குப்பைக் கூடையில் போடச் சென்றார்.

(19 ஆம் பக்கம் பார்க்க)



# நியூஸிலாந்தில் வாழ்ந்து மறைந்த சமூகப் படைப்பாளி

# டொக்டர் இராசலிங்கம்

நியூஸிலாந்து தமிழ் மக்களை ஒன்றிணைத்து அவர்களுக்கு ஒரு சங்கத்தை நிறுவி தமிழருக்கான கட்டமைப்பை உருவாக்கிய ஒரு சமூகப் படைப்பாளியின் கலைஞனின் நினைவு நாள். ஆவணிமாதம் 26 ஆம் திகதி இன்றாகும்.

இந்தநாளுக்குரிய நினைவுக்குரியவர் காலம் சென்ற அமரர் வைத்திய கலாநிதி நாகலிங்கம் இராசலிங்கம் ஆவார்

தமிழர்கள் மத்தியில் சங்கங்கள் தோன்றுவது அவர்களின் சிறப்பு அம்சங்களில் ஒன்று .அதனைக் கட்டிக்காக்காமல் விடுவதும் அவர்களின் சிறப்பு இயல்புகளில் பொதுவானதாகும். புலம் பெயர் தேசங்களில் இது ஒரு சர்வ சாதாரணமான விடயம். அதாவது ஒரு தமிழரின் சங்கம் நீண்டகாலமாக அதே பெயருடன்பதிவில்உள்ளதாயின் அந்தச் சங்கம் இன்னமும் இயங்காமல் இருக்கிறது என்றும் பொருள் கோடலாம்.

நியூஸிலாந்தில் தமிழ் மக்களுக்கு என்று ஒரு சங்கம் அமைக்கப்பட்டால் வேண்டும் என்று சுமார் முப்பத்தைந்து வருடங்களுக்கு முன்னர் இங்கு எவ்வித நடனப்பள்ளிகளோ இசைப்பள்ளிகளோ தமிழ்ப்பள்ளிகளோ இல்லாத ஒரு மாலைப்பொழுதில் ஓர் அமைப்பய் ஒரு சிலருடன் சேர்ந்து உருவாக்கிய மகான் வைத்திய கலாநிதி நாகலிங்கம், இராசலிங்கம் அவர்களின் நினைவு நாள் இன்று 26 ஆம் திகதி ஆகும்.

1983 ஆண்டு இன அழிப்பின் உச்சத்தில் நியூஸிலாந்து அரசின் வெளி விவகார அமைச்சரை தமது சகாக்களுடன் நேரில் சந்தித்து இலங்கையில் பாதிக்கப்பட்டவர்களை நியூஸிலாந்து ஏற்று வாழ்வு வழங்க வேண்டும் என்ற முயற்சியை ஆரம்பித்து அந்த முயற்சி ஓர் அமைப்பிற்கூடாக நடக்க வேண்டும் என்ற வகையில் இவரால் உருவானதே நியூஸிலாந்து தமிழ்ச்சங்கம் ஆகும்.

இப்படி தமது சேவைகளின் பரிணாமங்கள் மூலம் எண்பதுகளின் நடுவிலிருந்து தொண்ணூறுகளின் உச்சமாகிஇரண்டாயிரம்வரை நியூஸிலாந்தில்

## அகதிகள் சமூகங்களின் வாழ்வில் ஒளியேற்றியவர்

குடியேறிய பலரின் அன்புக்குரியவராகி அவர்களின் நாவில் உச்சரிக்கபடும் பெயர் ஆனவர் டொக்டர் இராசலிங்கம்.

டொக்டர் இராசலிங்கம் அர்ப்பணிப்புடன் கூடிய மருத்துவராக, பலவகைக் குடியேற்றவாசிகளுக்கும்

அகதிகளாக வந்தவர்களுக்கும் பெரிதும் பெரிதும் உதவியவர்.

30 வருடங்களுக்கும் மேலாக நியூஸிலாந்தில் வாழ்ந்து விருட்சமாக வளர்ந்து வருவதற்கு அவர்களுக்கு உதவியது அவரது முதற்பணிகளின் பெரும் பணியாகும்.

பணிகள் என்பதை விட முதற் பணிகள் என்பதே இங்கு பொருத்தமானது. எனலாம் .ஏனெனில் அவர் செய்த பல பணிகள் யாவுமே இங்கு வாழ் மக்களுக்கு முதற் பணிகளாகவே இருந்தன.

அவரது இறுதிக்காலத்தில் அவர் தாமாக உருவாக்கிய சமூக அமைப்பு ஒன்றிற்காக அவருடன் நெருங்கிப் பணியாற்றும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அவரது செயற்திட்ட அலுவலராக நான் பணியாற்றினேன். தமது வயோதிக நோயின் இயலாமையிலும் பல காரியங்களை செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தை அவரது அங்க அசைவுகள் இறுதி வரை காட்டிக்கொண்டே இருந்தன.

இலங்கை உட்பட பல்வேறு நாடுகளிலிருந்தும் வந்து நியூஸிலாந்தில் தஞ்சம் புகுந்தவர்களும் குடியேறியவர்களுமான அகதிகளுக்கும் புலம் பெயர்ந்த சமூகங்களுக்கும் உதவுவதற்காக அவர் தம்மை வருத்தி தமது வேலைப்பளு நிறைந்த உயர் நிலைத் தொழிலிலும் பங்காற்றினார்.

1983 ஆம் ஆண்டு இலங்கையின் ஆடி வன்செயல்களில் தமிழர்கள் பாதிக்கப்பட்டு இந்த நாட்டிற்கு வந்த போது அவர்களின் கரம் பிடித்து நோய் தீர்க்க வைத்த ஒரு சமூக வைத்தியராக இராசலிங்கம் செயற்பட்டார்.

அனைத்து சமூகங்களின் அகதிகளுக்கும் கடுமையாக உழைத்து அவர்களது வைத்திய சேவைகளுக்கும் சிறப்பான சேவைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை அமைப்பு ரீதியாக ஏற்படுத்துவதில் பாடுபட்டார்.

பல அமைப்புகளில் அங்கத்தவராக இருந்ததமையுடன் அகதிகள் தொடர்பான நிறுவனங்களை அமைப்பதிலும் அவற்றின் பணிப்பரிமாணங்களில் முக்கிய வகிபாகம் செய்தலிலும் தம்மை ஈடுபடுத்திக்கொண்டார்.

அவரது விரிவான சமூகப் பணிக்காக 1990 ஆம் ஆண்டில் இராணி சேவை பதக்கம் (Queens Service Medal 1990) வழங்கப்பட்டது, 2000 ஆம் ஆண்டில் Member of the New Zealand Order of Merit விருதும் , 2005 ஆம் ஆண்டில் ஒக்லாந்து நகர முதல்வரின் லிவிங் லெஜண்ட் விருது மற்றும் 2010 ஆம் ஆண்டில் கிவி வங்கி லோக்கல் ஹீரோவின் பதக்கம் Kiwi Bank Local Hero's Medal in 2010.என வழங்கப்பட்டன இலங்கையின் றோயல் கல்லூரியின் விளையாட்டுத்துறையிலான பல விருதுகளை அவர் பெற்றிருந்தார்..

யாழ்ப்பாணம் தென் மையிலையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை நீண்ட காலம் வதிவிடமாகவும் கொண்ட டொக்டர் இராசலிங்கம் அவரது மனைவியுடன் 1970 இல் நியூஸிலாந்திற்கு வந்தார். 4 ஆண்டுகளுக்குப் பிறகு தமது அயராத முயற்சியால் ‘மருத்துவ நிறுவகம்’ ஒன்றை ஆரம்பித்தார்.

தமிழ்ச்சங்கத்தைத் தொடர்ந்து நியூஸிலாந்தின் அகதிகள் மன்றத்தை அவர் உருவாக்கினார், அதன் மூலம் எல்லா இன மக்களுக்கும் தமது சேவையின் எல்லையை விரிவாக்கினார்

ஒக்லாந்து அகதிகள் சபையின் ஆரம்பத் தலைவராக அவர் பதவியேற்றமை இங்கு குறிப்பிடத்தக்க ஒன்றாகும் பல தசாப்தங்களுக்கு மேலாக இதன் மூலம் பல அகதிகள் சமூகங்களுக்கு சேவை செய்வதற்குத் தூணாக நின்றார்.

அகதிகள் உதவி பெறும் பொருட்டு அவர்களுக்கு ஏற்ற வகையிலான கொடுப்பனவுக்குகந்த சுகாதார பாதுகாப்பு சேவை உறுதி செய்யப்பட்டதில் அவர் வகிபாகமும் குறிக்கத்தக்க ஒன்றாகும்.

நியூஸிலாந்தின் அகதி மன்றத்தின் தலைவராக. அவர் அதில் இருப்பதையே ஏனைய அகதிச் சமூகங்களின் தலைவர்கள் பலரும் விரும்பினார்கள். அவரை அவர்கள் ஒரு தந்தையாகவே பார்த்தனர். கணித்தனர்.

நியூஸிலாந்துக்கான இனக் குரல் என்கிற வானொலியை உருவாக்கியதில் இவரது பங்களிப்பைப்பற்றியும் குறிப்பிடலாம் இதற்காக அவருடன் இணைந்து பணியாற்றும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. இது இனத்துவ சமூகங்களை ஒன்றாகக் கொண்டுவருவதை நோக்கமாகக் கொண்டது.

இறுதிக்காலத்தில் அதன் சேவைகளில் அவர் நிறைய அக்கறையாக இருந்தமையை நான் அறிவேன்.

1983 ஆம் ஆண்டில் அவர் உருவாக்கிய நியூஸிலாந்து தமிழ் சங்கம் அதன் ஆரம்பத்திலிருந்து சமூகப் பணிகள் பலவற்றில் இன்றும் ஈடுபடு கின்றது என்றால் அதற்கு வித்திட்டவர் அமரர் இராசலிங்கம் அவர்களே காரணம் என்பது இங்கு உயர்வு நவிற்சி அல்ல.

தமிழ்ச்சங்கத்தின் ஆரம்பத் தலைவராக அமரர் இராசலிங்கம் நியமிக்கப்பட்டார் , 5 குடும்பங்களில் ஆரம்பித்த தமிழ்ச் சங்கம் இன்று 400 க்கும் அதிகமான உறுப்பினர்களுடன் வியாபித்து வளர்ந்து நிற்கின்றது.

டொக்டர் இராசலிங்கம் எண்பதுகளின் இறுதியில் தமிழ்பாடசாலை ஒன்றை உருவாக்குவதில் கருவியாக இருந்தார்.

அவர் ஒக்லாந்தில் மற்றொரு தமிழ் பள்ளியான தமிழ்ப்பூங்காவை அமைப்பதில் வழிகாட்டியாக இருந்தார்.

நியூஸிலாந்தின் அகதிகள் தொடர்பான உளவியல் சுகாதார அமைப்பான - RASNZ Refugees as Survivors New Zealand தலைவராக இராசலிங்கம் திகழ்ந்தார். இன்றும் கூட அது அகதி அந்தஸ்துக்கு கோருபவர்கள் முதல் தமது குடும்ப அங்கத்தவர்களுடன் இணையத் துடிக்கும் பிரசைகளுக்கு ஏற்ற பணி களைச்செய்து வருகிறது.

இலங்கை அரசின் மனித உரிமைகள் விவகாரங்களை வெளிக்கொணரும் வகையிலான தமிழர் கூட்டமைப்பை 2001 இல் உருவாக்கினார்.

எழுபதுகளின் தொடக்கத்தில் இங்கு வந்தாலும் நியூஸிலாந்தில் வாழ்ந்த போது அவர் தாயகத்தின் சமூக அரசியலுடன் பிணைந்தே இருந்தார்.

மண்ணின் விதைக்கப்பட்ட நல்ல விதைகள் மட்டும் விளைந்து பயன் தருவது போல புலம்பெயர் நாடுகளில் இவரைப்போன்றபலரது சேவைகளினதும் பணிகளினதும் அறுவடைகள் இன்றும் பெருகிப் பலன் தரவேண்டும் .

அந்த நினைவையும் உணர்வையும் பகிரவே அன்னார் பற்றி காலக்கதிரில் இந்த நினைவுக்கு குறிப்பை பகிரும் எண்ணம் தோன்றியது.

ஸ்.எம்.வரதராஜன்



## ஒரே வேளையில் கர்ப்பமடைந்த தாதியர் 16 பேர்!

உலகில் விநோதமான நிகழ்வுகள் அவ்வப்போது நடந்து ஆச்சரியப்பட வைத்து கொண்டிருக்கும் நிலையில் அமெரிக்காவில் ஒரே மருத்துவ மனையில் பணிபுரியும் 16 தாதிகள் (நேர்ஸ்கள்) ஒரே நேரத்தில் கர்ப்பமாகியுள்ளனர். அதிலும் இந்த 16தாதிகளும் ஐசியூ பிரிவில் பணிபுரிபவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவில் உள்ள அரிசோனா மாகாணத்தில் பேனர் டெசர்ட் மெடிக்கல் சென்டர் என்ற மருத்துவ மனை உள்ளது. இங்கு ஐசியூ பிரிவில் மொத்தம் 16தாதிகள் பணிபுரிந்து வருகின்றனர்.

இவர்களுக்கு வெவ்வேறு காலகட்டங்களில் திருமணம் நடந்திருந்தாலும் தற்போது ஒரே நேரத்தில் கர்ப்பமாகியிருப்பது தெரியவந்துள்ளது. இந்த கொண்டாட்டத்தை கொண்டாடும் வகையில் கர்ப்பமான 16 தாதிகளும் குரூப் புகைப்படம் எடுத்து அதனை ஃபேஸ்புக்கில் பதிவு செய்துள்ளனர்.

வரும் டிசெம்பர் மற்றும் ஜனவரியில் இவர்கள் அனைவருக்கும் குழந்தை பிறக்கும் என்று கூறப்படும் நிலையில் இன்னும் ஒருசில மாதங்களில் அனை வரும் ஒட்டுமொத்தமாக பிரசவ விடுமுறை எடுக்க வுள்ளமையால் மருத்துவமனை நிர்வாகம் மாற்று ஏற்பாட்டுக்கு நடவடிக்கை எடுத்து வருகிறது.

## பெண்கள் மெய்மறந்து ரசிக்கும் சின்னத்திரை நாடகங்களால் சீரழியும் குடும்பங்கள்



பொழுதுபோக்குக்காக வந்ததே பெரிய திரை என்னும் சினிமா திரைப்படம். நாளடைவில் பொழுது போக்கிலும் மக்களுக்கான நல்ல அறிவுரைகள் இருந்தன. சமுதாய புரட்சிகளும், நாட்டு நலன், மொழி வளர்ச்சி, குடும்ப நடை முறை என்ற வட்டத்துக்குள் சினிமா சுழன்றது.

நாகரிக வளர்ச்சிக்குப் பிறகு அதன் போக்கு மாறியது. திரைப்படங்களில் வன்முறை காட்சிகள் அதிகரித்தன. தற்போது, திரைப்படத்தின் ஊடே ஆங்காங்கே ஆபாசங்களை இடைச்செருகி ஆர்ப்பாட்டங்களை விதைத்து வருகிறார்கள்.

திரைப்படங்களின் கதை இப்படி என்றால், சின்னத் திரையோ திரைப்படங்களை மிஞ்சிவிட்டன. இவை வீட்டுக்குள்ளே வந்து நம்மோடு உறவாடும் ரீ.வி., குடும்ப பெண்களின் நெஞ்சில் நிற்க வேண்டும் என்று எண்ணி, கண்ணீரை கடல் நீராக்கியது போதாதென ஒழுக்க சிதைவுகளுக்கும் பாலம் போட புறப்பட்டுள்ளது.

நல்ல சிந்தனைகளை விதைக்கும் நேரத்தில் அருவருப் பான காட்சிகளை இயக்குவதில் பல இயக்குநர்களும் ஒரே மாதிரி இருப்பது புரியாத புதிராக இருக்கிறது.

முக்கிய மாக கல்யாணமான ஒருவனை இன்னொருத்தி அடைந்தே தீருவேன் என்று சபதமிடுவதும், வேறு ஒருவன் மனை வியை மணமுடித்தே தீருவேன் என இன்னொருவன் முழக்கமிடு வதும் காட்சிகள்தோறும் கங்கணம் கட்டிக் கொண்டு வருகின்றன. இதுதான் வில்லத்தனம் என்று எண்ணி எல்லோரும் தொடர்வது ஏற்புடையதா?

ஒன்றோடு நின்றால் பரவாயில்லை. அநேகமான நாடகங்களில் இப்படித்தான் இருக்கின்றன. காட்சிக்கு காட்சி குடும்பத்தை எப்படியெல்லாம் கெடுப்பது என்ற கருவை மெருகேற்றி தரப்படுவது சரியானதல்ல.

இத்தகைய போக்கால், தமிழர் தம் கலாசாரம் சிதைந்து போகாதா? பண்பாடு பண்படுமா? பாழ்ப்பட்டு போகாதா? ஏதோ ஒன்று என்றால் திருத்திக்கொள்ளலாம். தினமும் தொடர்கதையாக தொடர்ந்தால் நலமா? கற்பனைக்கு அளவுகோலே கிடையாதா? கண்ணியம் சிதைந்திட விடலாமா?

இவை சமூகத்தில் நடப்பதை பிரதிபலிப் பதாக கூறி சமாளிக்க முடியாது. பெரிய திரையும், சின்னத் திரை சீரியல்களும் சமூகத்துக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும் என்பதுதான் காலத்தின் தேவை.

ஆபாசத்தை முடக்கி, அன்பை வளர்த்து, சிந்திக்கும் மனிதர்களுக்கு மேலும் சிந்தனையை ஊட்டி, ஒழுக்க சிதைவுகளுக்கு இடம் தரக்கூடாது. செல்வம் சேர்க்க வேண்டும் என்ற ஒரே கண்ணோட்டத்தை விட்டு, கண்ணிய பாதையில் கதைகளை இயக்கினால் தமிழ் கலாசார, பண்பாட்டுக்கு சிதைவுகள் ஏற்படமாட்டா என்பதை உணர்ந்து சின் னத்திரை சிறப்புகள் பெறட்டும்.

**கவிஞர் பொன்னகரம் சுல்தான்**

## குழந்தைகள், பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத நிலை!



இவ்வளவு காலமாகியும், சிறு குழந்தைகள், பெண்களுக்கு முழுமையான பாதுகாப்பு இல்லாதநிலை மட்டுமல்லாமல், அங்கொன்றும் இங்கொன்றுமாக வன்புணர்வு சம்பவங்கள் நடப்பதும் வேதனை அளிக்கிறது.

தேசபிதா மகாத்மாகாந்தி நாட்டின் சுதந்திரத்திற்கு எவ்வளவு பாடுபட்டாரோ, அதற்கு இணையாக பெண்கள் பாதுகாப்பிலும் அதிக அக்கறையோடு இருந்தார். 'என்றைக்கு ஒரு பெண் கழுத்து நிறைய நகைகளை போட்டுக்கொண்டு தனியாக நள்ளிரவில் பாதுகாப்பாக நடந்து செல்லக்கூடிய சூழ்நிலை இருக்கிறதோ, அன்றுதான் உண்மையான சுதந்திரம் கிடைத்தது என்றுபொருள்' என்று கூறினார்.



சமீபகாலமாக சிறு குழந்தைகள் பாலியல் வன்கொடுமை சம்பவங்கள் ஆங்காங்கு நடக்கின்றன. தெரிந்தவர்கள், தெரியாதவர்கள், அக்கம் - பக்கத்தினர், வேலைசெய்பவர்கள், சொந்த உறவினர் என்று யாரையும் நம்பமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

கடும் தண்டனை விதிப்பதால் மட்டும் இந்த குற்றங்களை குறைத்துவிடமுடியாது. ஏற்கனவே பிரதேசம், மாநிலங்களில் குழந்தைகளை பாலியல் வன்கொடுமை செய்பவர்களுக்கு தூக்குத்தண்டனை விதிக்கும் சட்டம் இருந்தாலும், அங்கு குற்றங்கள் குறையவில்லை. அரபு நாடுகளைத் தவிர உலகில் பெரும்பாலான நாடுகளில் மரணதண்டனை ஒழிக்கப்பட்டு வரும் சூழ்நிலையில், இந்தச் சட்டத்தின் மூலம் மரண தண்டனை விதிப்பது பாலியல் வன்கொடுமை குற்றங்களை குறைக்குமா? என்பது போகப் போகத்தான் தெரியும்.

ஆனால் இந்த கொடூரவிதமான எண்ணம் ஏற்படாமல் இருக்க மனிதநேயமான பக்குவங்களை மக்களுக்கு ஏற்படுத்த வேண்டும். சிறு குழந்தைகளுக்கு இதுபோன்ற கொடூரர்களிடமிருந்து விலகி நிற்கவேண்டும் என்பதை பட்டும் படாமல், பள்ளிக்கூடங்களிலும், பெற்றோர்களும் கற்றுக்கொடுக்க வேண்டும்.

## முகப்பருக்களை விரட்ட எளிய முறைகள்!



முகப்பருவைப்போக்க ஏராளமானோர், எத்தனையோ முயற்சிகளை மேற்கொண்டிருப்பார்கள். குறிப்பாக முகப்பரு எண்ணெய் பசை சருமத்தினருக்கு தான் அதிகம் வரும். சருமத்தில் எண்ணெய் பசை அதிகம் இருந்தாலே, பருக்கள் வந்துவிடும்.

கணவாய் மீன் எலும்பை எடுத்துக் கொண்டு, ஒரு கல்லில் தண்ணீர் சேர்த்து தேய்த்து கிடைக்கும் பேஸ்ட்டை முகப்பரு மீது வைத்து உலர வைக்க வேண்டும். இப்படி ஒரு வாரம் தொடர்ந்து செய்து வந்தால் நல்ல பலன் கிடைக்கும்.


6 கிராம் உலர்ந்த தோடம்பழத் தோல், முட்டை ஓடு, பார்லி, கடலைப் பருப்பு, ஸ்டார்ட், பாதாம் கொன்னல் போன்றவற்றை அரைத்து பொடி செய்து கொள்ளவும். பின் தேவையான அளவு பொடியை எடுத்து தண்ணீர் ஊற்றி பேஸ்ட் செய்து, இரவில் படுக்கும் போது முகப்பரு உள்ள இடத்தில் தடவி இரவு முழுவதும் ஊற வைத்து, மறுநாள் காலையில் வெதுவெதுப்பான நீரில் கழுவ வேண்டும். இப்படி செய்தால், பருக்கள் விரைவில் அகலும்.

அப்பிளை துருவி, சிறிது தேன் சேர்த்து கலந்து பேஸ்ட் செய்து, முகத்தில் தடவி 15 நிமிடம் ஊற வைத்து, பின் குளிர்ந்த நீரில் கழுவினால், முகத்தில் உள்ள பருக்கள் விரைவில் போய்விடும்.

2 தேக்கரண்டி ஓட்ஸ் பொடி, 1 தேக்கரண்டி தேன் மற்றும் சிறிது தண்ணீர் சேர்த்து பேஸ்ட் செய்து, முகத்தில் தடவி 10 நிமிடம் ஊற வைத்து, பின் வெதுவெதுப்பான நீரில் கழுவ, நல்ல பலன் கிடைக்கும்.

பாதாம் பொடியை விளக்கெண்ணெய் சேர்த்து கலந்து, அந்த பேஸ்ட்டை முகத்தில் தடவி 10 - 15 நிமிடம் ஊற வைத்து பின் கழுவ, முகத்தில் பருக்கள் இருந்தால் சீக்கிரம் போய்விடும்.

## கூந்தல் பிரச்சினைக்கு கரும அழுகுக்கு வெந்தயம் சிறந்தது







வெந்தயத்தை முறையாக உணவில் சேர்த்துக்கொள்வது கூந்தல் மற்றும் சரும ஆரோக்கியத்துக்கும் உதவும். வெந்தயத்தை எந்த வகையில் பயன்படுத்த வேண்டும் என்று பார்க்கலாம்.

சரும ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது இதில் உள்ள விற்றமின் சி மற்றும் ஆன்ட்டி ஆக்சிடென்ட்டுகள் சருமத்தில் ஏற்படும் கொப்புளங்கள், எக்சீமா எனப் படும் சரும நோய் போன்றவற்றை சரியாக்கு கின்றன. சருமத்தில் உள்ள தழும்புகளையும் போக்குகிறது. வெந்தயத்தை ஊற வைத்து அரைத்த விழுதில் ஒரு சுத்தமான துணியை முக்கி, முகத்தில் சிறிது நேரம் வைத்திருந்து எடுப்பது சருமத் தழும்புகளை விரட்டியடிக்கும் எளிய சிகிச்சை.

வெந்தயம் சேர்த்துத் தயாரித்த ஃபேஸ்பேக்குகள் பருக்கள், கரும்புள்ளிகள், சுருக்கங்கள் போன்றவற்றை விரட்டக் கூடியவை. வெந்தயம் வேக வைத்த தண்ணீரை ஆற வைத்து முகம் கழுவ உபயோகிக்கலாம் அல்லது வெந்தய விழுதை முகத்தில் தடவி 15 நிமிடங்கள் ஊறிக் கழுவலாம். இவை எல்லாமே சரும அழகை மேம்படுத்தும்.

வெந்தயத்தை முறையாக உணவில் சேர்த்துக்கொள்வது கூந்தல் ஆரோக்கியத்துக்கும் உதவும். தேங்காய் எண்ணெயில் வெந்தயத்தை ஊறவைத்து, தினமும் இரவில் அந்த எண்ணெயை தலையில் தடவி மசாஜ் செய்து காலையில் குளித்து வந்தால் கூந்தல் உதிர்வது கட்டுப்படும். பொடுகையும் விரட்டும்.

## கேரளாவில் பாதிக்கப்பட்டவர்களுடன் ஆயர்கள்

கேரளாவில் இதுவரை இல்லாத அளவுக்கு இடம் பெற்றுள்ள வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுடன் தனது ஆழ்ந்த ஒருமைப்பாட்டுணர்வை இந்திய கத்தோலிக்க ஆயர் பேரவை தெரிவித்துள்ளது. இந்திய ஆயர் பேரவையின் பொதுச் செயலர் ஆயர் தியோடர் மஸ்கரீனஸ் ஆண்டகை வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த மிகப்பெரும் இயற்கைப் பேரிடரால் துயருறும் அனைத்து மக்களுடன் ஆயர்கள் தங்கள் அருகாமையைத் தெரிவிக்கிறார்கள் எனச் சொல்லப் பட்டுள்ளது.

காலைக்கதிர் Kālaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

## கேரள நிவாரணப் பணியில் இத்தாலிய கரித்தாஸ்

கேரளாவில் இரண்டாயிரத்துக்கும் அதிகமான வீடுகள் அழிந்தும் ஒன்ப தாயிரம் வீடுகள் சேதமடைந்துள்ளன. 24 ஆயிரம் ஹெக்டேர் சாகுபடி நிலங்கள் அழிந்துள்ளன. பத்து இலட்சம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர். கேரளாவின் அனைத்து மறைமாவட்டங்களும் துறவற சபைகளும் நிவாரணப் பணிகளில் முழுவீச்சுடன் ஈடுபட்டுள்ளவேளை இந்திய கரித்தாஸ் அமைப்பு அவற்றுடன் சேர்ந்து பணியாற்றுகின்றது என அதன் இயக்குனர் போல் அடிகளார் கூறியுள்ளார்.

# புனிய வளன் கத்தோலிக்க அச்சகம் மீண்டும் முன்னணிக்கு வரும்

## இயக்குநர் றொசான் அடிகளார் நம்பிக்கை






வடபகுதியின் முன்னனி அச்சகமாக மிக நீண்ட காலமாகத் திகழ்ந்த புனித வளன் கத்தோலிக்க அச்சகம் மீண்டும் வடபகுதியின் முன்னணி அச்சகமாகும் என நம்பிக்கை தெரிவித்திருக்கிறரர் புனித வளன் கத்தோலிக்க அச்சக இயக்குநர் ஏ.றொசான் அடிகளார். காலைக்கதிர் பத்திரிகையின் கிறிஸ்தவ செய்தி இதழுக்கு புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தின் நவீன விதமான முன்னேற்றம் பற்றித் தெரிவிக்கும் போதே அதன் இயக்குநர் ஏ.றொசான் அடிகளார் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு–

வரலாற்றுப் பாரம்பரியம் மிக்க யாழ் புனித வளன் கத்தோலிக்க அச்சகம் தன் பதிப்பகப் பணிகளை டிஜிற்றல் மயப்படுத்தியுள்ளது. பல வர்ண பதிப்புக்களை டிஜிற்றல் முறையில் பதிப்பிக்கக் கூடிய நவீனரக டிஜிற்றல் இலத்திரனியல் இயந்திரம் தற்போது புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. மேலும் 'கூள் லமி சேன்' இயந்திரமும் வாங்கப்பட்டு பயன்படுத்தப் படவுள்ளது. ஏற்கனவே சிறப்புற இயங்கி வந்த பாதுகாவலன் மண்டபம் புனர்நிர்மணம் செய்யப்பட்டு புதுப்பொலிவுடன் காணப்படுகிறது. பாதுகாவலன் மண்டபத்தை தங்கள் தேவைகளுக்கு யாரும் பயன்படுத்தலாம். இப்படிச் சொல்வதால் கட்டணம் செலுத்தாமல் என்று நினைக்க வேண்டாம். கட்டணம் செலுத்தித்தான் – என சிரிப்புடன் தொவித்தார்.

இதேவேளை புனித வளன் கத்தோலிக்க அச்சகம் சூரியஒளி மூலம் இயங்கும் மின்னுற்பத்தி இயந்திரத்தையும் கொள்வனவு செய்துள்ளது என அவர் மேலும் தொவித்தார். யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப் பிரகாசம் ஆண்டகை மேற்படி இயந்திரப் பணிகளை ஆசீர்வதித்து திறந்து வைத்து இதனைக் கொள்வனவு செய்ய பெரிதும் உதவிய ஜோசப் டிலிப் சிறில் குடும்பத்தினருக்கு நன்றிகளைத் தெரிவித்தார் என கடந்த வாரம் நாம் குறிப்பிட்டமை வாசகர் அறிந்ததே.

# உண்மையின் எண்ணங்கள்

## நவீன மயமாகும் புதிய நம்பிக்கையில் புனித வளன் கத்தோலிக்க அச்சகம்

புனித வளன் கத்தோலிக்க அச்சகம் மீண்டும் வடபகுதியின் முன்னணி அச்சகமாகும் என நம்பிக்கை தொவிக்கிறார் அச்சக இயக்குனர் ஏ.றொசான் அடிகளார் என்ற செய்தியை உண்மையின் எண்ணங்கள் தலையங்கத்தில் சிறப்பு முக்கியத்துவத்துடன் பதிவு செய்கிறது காலைக்கதிர் பத்திரிகையின் கிறிஸ்தவ செய்தி இதழு. புனித வளன் கத்தோலிக்க அச்சகம் மீண்டும்வடபகுதியின்முன்னனி அச்சகமாகும் என்ற நம்பிக்கை அறிவிப்பு துணிவோடும் தூர நோக்கோடும் பரந்த பாரிய நிர்வாக திட்டமிடலின் பின்னர் மேற் கொள்ளப்பட்ட ஒரு நம்பிக்கை வெளிப் பாடாகும். புனித வளன் கத்தோலிக்க அச்சகம் நீண்ட காலமாக வடபகுதியின் முன்ணனி அச்சகமாக சகல வசதிகளுடனும்அனைவருக்கும் பணியாற்றிய காலம் இருந்தது. அச்சகம் என்றால் அது கத்தோலிக்க அச்சகம்தான் என்று பல்கலைக்கழகம் முதல் பாடசாலைகள் ஈறாக அனைத்து அச்சுப்பணிகளும் இங்கே மேற்கொள்ளப்பட்ட காலம் இருந்தது. இலங்கையின் முதற் தமிழ் கத்தோலிக்க வாரஏடு என்ற பெருமையுடன் அங்கிருந்து வெளிவரும் யாழ் மறைமாவட்ட கத்தோலிக்க அதிகாரபூர்வ ஏடான பாதுகாலவன் பத்திரிகையே முதன் முதலில் எதிர் பதிவு அச்சுமுறையில் வெளியான பத்திரிகையாகும். போரும் போட்டிகளும் நவீன விலையுயர் இயந்திரங்களும் வந்தபோது வளர்ச்சிப்படிகளில் வேகமாக கத்தோலிக்க அச்சகம் ஏறவில்லைஎன்றேஎண்ணத்தோன்றுகிறது. புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தை மீண்டும் கட்டி எழுப்ப வேண்டியது காலத்தின் தேவையாகும். அப்பணியை துணிவோடும் தூரநோக்கோடும் பரந்த பாரிய நிர்வாக திட்டமிடலோடும் யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் வழிகாட்டலுடன்மேற்கொள்ளும் புனித வளன் கத்தோலிக்க அச்சக இயக்குநர் ஏ.றொசான் அடிக ளாரை காலைக்கதிர் பத்திரிகையின் கிறிஸ்தவ செய்தி இதழ் வெகுவாகப் பாராட்டி நிற்கிறது. அச்ச இயக்குநராக பணியாற்றுவது ஓர் இலகுவான பணியல்ல. வருகின்ற எல்லா வேலைகளையும் எடுக்க வேண்டும் என்ற ஏக்கம் இருக்கும். எல்லாவற்றையும் உரிய நேரத்தில் முடிக்க வேண்டும் என்ற அங்கலாய்ப்பு இருக்கும். வருகின்ற குற்றங்களையும் குறைகளையும் தனிமனிதனாய் தாங்க வேண்டிய வேதனை இருக்கும். அச்ச இயக்குநராக பணியாற்றுவது ஓர் இலகுவான பணியல்ல. புனிதவளன்கத்தோலிக்க அச்சக இயக்குநர் ஏ.றொசான் அடிகளார் எடுக்கின்ற திட்டமிடல்கள் அனைத்து சிறப்புற காலைக் கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் அன்பு நெஞ்சங்களின் வாழ்த் துக்களைத் தெரிவிக்கிறது.

## திருத்தந்தையின் பயணத்தை ஒட்டி அயர்லாந்தில் புதிய தபால் தலைகள்

திருத்தந்தைபிரான்சிஸ் அவர்களின் அயர்லாந்து திருத்தூதுப் பயணத்தை முன்னிட்டு அயர்லாந்து அஞ்சல் அலுவலகம், இரு புதிய தபால்தலைகளை வெளியிட்டுள்ளது. 9 ஆவது உலக குடும்பங்கள் மாநாட்டுக்காக அயர்லாந்துக்கு திருத்தந்தை மேற்கொள்ளும் திருத்தூதுப் பயணத்தின் நினைவாக வெளியிடப்பட்டுள்ள ஒரு யுரோ தபால் தலை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் புறாவுடன் விமானப் பயணத்தை தொடங்குவது போலவும் 1.50 யுரோ மதிப்புடைய பன்னாட்டு தபால் தலை கடற்கரையில் குடும்பங்கள் ஒன்று சேர்ந்து நடப்பது போலவும் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஐந்து இலட்சம் ஒரு யுரோ தபால் தலைகளும் ஒரு இலட்சத்துக்கு அதிகமான ஒன்றரை யுரோ தபால்தலைகளும் அச்சிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தபால் தலைகளை வெளியிட்டுப் பேசிய டப்ளின் பேராயர் திருத்தந்தைக்கு நாம் அளிக்கும் தகுதியான மதிப்பாக இவை உள்ளன என்றும் தபால் தலைகளைச் சேகரிக்கும் பொழுதுபோக்கு உள்ளவர்களுக்கு இது உதவியாக இருக்கும் என்று கூறினார்.

## வாஜ்பாய்க்கு புகழாரம்

முன்னாள் இந்திய பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் அவர்கள் கிறிஸ்தவ சமூகத்தின் மிகப்பெரும் நண்பர் அவர் பல மதங்கள் கொண்ட இந்தியாவைக் கனவு கண்டவர் என வாஜ்பாய் அவர்களின் இறப்பை முன்னிட்டு இந்திய ஆயர்கள் சார்பில் இரங்கல் அறிக்கை வெளியிட்டுள்ளார் கர்தினால் கிரேசியஸ் அவர்கள். கிறிஸ்தவ சமூகத்தின் தேவைகள் மீது எப்போதும் கவனமாய் இருந்து அவர்களின் பிரச்சினைகளைப் பொறுமையுடன் கேட்டவர் என்றும் மறைந்த வாஜ்பாய் அவர்களுக்குப் புகழாரம் சூட்டினார் கர்தினால் கிரேசியஸ். 1999ஆம் ஆண்டில் புனித திருத்தந்தை 2ஆம் யோன் பால் அவர்கள் இந்தியாவுக்குத் திருத்தூதுப் பயணம் மேற்கொண்டவேளையில் திருத்தந்தைக்கும் வாஜ்பாய் அவர்களுக்கும் இடையே நிலவிய நட்புறவை மகிழ்வுடன் நினைத்துப் பார்ப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார் கர்தினால் கிரேசியஸ்.

# டப்ளினில் திருத்தந்தை

நேற்று உரோம் பன்னாட்டு விமான நிலையத்திலிருந்து புறப்படவிருந்த திருத்தந்தை டப்ளின் பன்னாட்டுவிமானநிலையத்தை அடைவார். அங்கிருந்து அரசுத் தலைவர் மாளிகை சென்று அங்கு நடைபெறும் அதிகாரபூர்வ வரவேற்பைப் பெற்று மரியாதை நிமித்தம் அரசுத் தலைவரைச் சந்திப்பார் திருத்தந்தை பிரான்சிஸ்.

டப்ளின் அரண்மனையில் அரசு அதிகாரிகள் பொது மக்கள் பிரதிநிதிகள் தூதரக அதிகாரிகள் உள்ளிட்ட முக்கிய தலைவர்களைச் சந்தித்து உரையாற்றும் திருத் தந்தை புனித மரியா பேராலயம் செல்வார். டப்ளின் நகரிலுள்ள கப்புச்சின் சபை அருள் பணியாளர்கள் இல்லம் சென்று வீடற்ற குடும்பங்களுக்கு அச்சபையினர் நடத்தும் இல்லத்தைப் பார்வையிடும் திருத்தந்தை உலக குடும்பங்கள் விழாவில் கலந்து கொள்வார்.

டப்ளினில் உலக குடும்பங்கள் மாநாடு தொடங்குகின்றது. உலகின் அனைத்துக் குடும்பங்களுக்காக குறிப்பாக, இன்னலிலுள்ள குடும்பங்களுக்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்துசெபிப்போம்என்ற சொற்கள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் டுவிட்டரில்செய்தியில்வெளியாகியுள்ளது. அயர்லாந்து நாட்டின் டப்ளின் நகரில் 21 ஓகஸ்ட் 2018 அன்று 9 ஆவது உலக குடும்பங்கள் மாநாடு தொடங்கியமையை முன்னிட்டு அனைத்துக் குடும்பங்களுக்காகச்செபிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

## கேரள வெள்ளத்தால் பாதிப்புற்ற மக்களுக்காக திருத்தந்தை செபம்

கேரளாவில் கனமழை, நிலச்சரிவுகள், வெள்ளம் ஆகியவற்றால் பலியாகியுள்ள, பாதிக்கப்பட்டுள்ள மற்றும் காணாமற்போயுள்ள எண்ணற்ற மக்களை இந் நேரத்தில் நினைத்துப் பார்க்கிறேன் என இஞ்ஞாயிறு நண்பகல் மூவேளை செப உரைக்குப் பின்னர் தெரிவித்தார் திருத்தந்தை பிரான்சிஸ். இடர்துடைப்புப் பணிகளை முன்னின்று ஆற்றும் கேரளத்திரு அவைக்கு நம் ஒருமைப்பாட்டுணர்வைத் தெரிவிப்போம் எனவும் இந்த நம் சகோதர, சகோதரிகள் நம் ஒருமைப்பாட்டுணர்வாலும் உலகளாவிய சமுதாயத்தின் தெளிவான உதவிகளாலும் ஆதரவளிக்கப்படுவார்கள் என்ற தன் நம்பிக்கையையும் வெளிப்படுத்தினார் திருத்தந்தை பிரான்சிஸ். இப்பேரிடரில் உயிரிழந்தவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்காகச் செபிப்போம் என்று கூறி, வத்திக்கான் வளாகத்தில் கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களோடு இணைந்து அருள்நிறைந்த மரியே என்ற செபத்தை செபித்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

## கிளிநொச்சி, முல்லை மறைக் கோட்ட மறையாசிரியர்களுக்கு பயிற்சி நெறி



2019ஆம் ஆண்டு யாழ் மறைமாவட்டத்தில் கற்பிக்கப்படவிருக்கும் மூன்று மாத கால வதிவிட மறையாசிரியர் பயிற்சிக்கு தோற்றவிருக்கும் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மறைக்கோட்டங்களைக் சோந்தவர்களின் தகைமையை உயர்த்தும் நோக்குடன் அடிப்படைத் தயாரிப்பு துரித பயிற்சிநெறி முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு றோ.க. வித்தியாலயத்தில் 2018 ஓகஸ்ட் 5ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை நடத்தப்பட்டுள்ளது.

இந்த அடிப்படைத் தயாரிப்பு துரித பயிற்சிநெறியில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மறைக்கோட்டங்களைச் சேர்ந்த பங்குகளிலிருந்து 25 பேர் கலந்து பயிற்சி பெற்றனர். இவர்களுக்கு திருவிவிலியம், திருவழிபாடு, திருஅவை, திருவருட்சாதனங்கள், கத்தோலிக்க திருமறையின் அடிப்படைக் கொள்கைகள் போன்ற பகுதிகளில் பாடங்கள் கற்பிக்கப்பட்டன. அத்துடன் மறையாசிரியர்களுக்கான தியானம் வழிபாடு கலைவழி மறைக்கல்வி, குழும வாழ்வு போன்ற பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாண மறைமாவட்ட மறைக் கல்வி நிலைய இயக்குநர் ஏ.எவ்.பெனற் அடிகளாரின் நெறிப்படுத்தலில் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு றோ.க. வித்தியாலய அதிபர் அ. றொபின்சன் அடிகளார் மற்றும் பாடசாலை சமூகத்தினர், புதுக்குடியிருப்பு பங்குத் தந்தை சுதர்சன் அடிகளார், அவரின் பங்குமக்கள் ஆகியோரின் தாராள ஒத்துழைப்புடன் இந்நிகழ்வு சிறப்புற நடைபெற்றுள்ளது.

# போர்டியாக்ஸ் பயிற்சியாளராக தியெரி ஹென்றி



விளையாட்டுத் துறையில் செல்வாக்கு மிக்க விளையாட்டு போட்டியான, உதைபந்துப்போட்டியை விரும்பாதவர்களே இவ்வுலகில் இருக்கமாட்டார்கள். ஏனென்றால், கால்பந்து விளையாட்டு சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை, வயது பாரபட்சமின்றி அனைவரையும் ஆட்கொண்டுள்ளது.

மாற்றங்களை எதிர்பார்க்கும் மனிதர்கள் விளையாட்டுக்களிலும் மாற்றங்களை எதிர்பார்க்கின்றனர். அதுமட்டுமன்றி திறமையான வீரர்களை உள்வாங்கி, விஷப்பரீட்சைக்கு உட்படுத்தும் கால்பந்து கழகங்களும் மாற்றங்களை எதிர்பார்க்கின்றன.

அதற்காக அவர்கள் புதிய வீரர்களை உள்வாங்குதல், பிற அணிகளில் உள்ள வீரர்களையும், பயிற்சியாளர்களையும் மாற்றுதல் போன்ற திகில் மாற்றங்களையும் கழகங்கள் அவ்வப்போது செய்துதான் வருகின்றன. அந்த வரிசையில், தற்போது பழமையான கழக அணியான கருதப்படும் பிரான்ஸின் போர்டியாக்ஸ் கழக அணியில், முக்கிய மாற்றமொன்று நிகழவுள்ளது.

ஆம்! கடந்த காலங்களில் சிறந்த பெறுபேறுகளைப் பதிவு செய்ய திணறிவரும் போர்டியாக்ஸ் கழக அணிக்கு, பிரான்ஸின் கால்பந்தாட்ட அணியின் முன்னாள் வீரரான தியெரி ஹென்றியை பயிற்சியாளராக நியமிக்க அந்த அணி நிர்வாகம் தீர்மானித்துள்ளது.


இதற்கு தியெரி ஹென்றியும் இணக்கம் தெரிவித்துள்ளதாக தெரிகின்றது. இதற்கு முன்னதாக அணியின் பயிற்சியாளராக இருந்த உருகுவே அணியின் முன்னாள் வீரரான கஸ் பொயெட்டுக்கு பதிலாக, தியெரி ஹென்றி நியமிக்கப்படுகிறார்.

இதற்கு முன்னதாக, பெல்ஜியம் உதைபந்து அணியின் உதவி பயிற்றுவிப்பாளராக தியெரி ஹென்றி, செயற்பட்டு வந்தார். இந்த அனுபவமும் அவருக்குக் கைகொடுக்கும் என நம்பப்படுகின்றது.

இதற்கமைய தற்போது நடைபெற்றுவரும் பிரான்ஸ் லீக் 1 தொடரிலிருந்து தனது பணியை தியெரி ஹென்றி, தொடருவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. முன் கள வீரரான தியெரி ஹென்றி, 1997ஆம் ஆண்டு தொடக்கம் 2010ஆம் ஆண்டு வரை பிரான்ஸ் அணியில் இடம்பிடித்திருந்தார். அவர் அணிக்காக 123 போட்டிகளில் விளையாடி 51 கோல்களை அடித்துள்ளார்.

இதுதவிர முன்னணி கழக அணிகளான மொனோக்கோ, ஜுவெண்டஸ், ஆர்சனல், பார்சிலோனா ஆகிய கழகங்களுக்காகவும் விளையாடியுள்ளார். 137 வருடங்கள் பழமையான போர்டியாக்ஸ் கழக அணி, ஐரோப்பிய கிண்ணம், யு.இ.எவ்.ஏ. கிண்ணம், லத்தின் கிண்ணம், யு.இ.எவ்.ஏ.இண்டர் டொட்டோ கிண்ணம் ஆகிய கிண்ணங்களை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தென்கொரியா உதைபந்து அணியின் பயிற்சியாளரானார் போல் பெண்டோ



தென்கொரியா தேசிய உதைபந்து அணியின் பயிற்சியாளர் பதவியை, போர்த்துக்கல் உதைபந்து அணியின் முன்னாள் வீரரான போல் பெண்டோ, உத்தியோகபூர்வமாக ஏற்றுள்ளார்.

கடந்த 17ஆம் திகதி தென்கொரியா தேசிய உதைபந்து அணியின் பயிற்சியாளராக, போல் பெண்டோவை நியமித்துள்ளதாக சியோலில் அமைந்துள்ள தென் கொரியா தேசிய உதைபந்து அணியின் தலைமையகம் அறிவித்தது. இந்நிலையில் அவர் அந்த பதவியைத் தற்போது ல் உத்தியோகபூர்வமாக ஏற்றுள்ளார்.

தனது பயிற்சிகள் தென்கொரியாவின் எதிர்காலச் சந்தியினருக்கும் உதவும் என போல் பெண்டோ தெரிவித்துள்ளார்.

போர்த்துக்கல் உதைபந்து அணியின் முன்னாள் பயிற்சியாளராக இருந்த, 49வயதான போல் பெண்டோ, நான்கு ஆண்டுகள் வரை, அதாவது கட்டாரில் எதிர்வரும் 2022ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ண உதைபந்து தொடர் வரை அணியுடன் இணைந்திருப்பார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய பயிற்சியாளராக பொறுப்பேற்றுள்ள போல் பெண்டோ, அணிக்கு சிறந்ததொரு பங்களிப்பை வழங்குவார் என தாம் உறுதியாக நம்புவதாக தென்கொரியா தேசிய உதைபந்து சங்கம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

கடந்த 1992ஆம் ஆண்டு தொடக்கம் 2002ஆம் ஆண்டு வரை, போர்த்துக்கல் கால்பந்து அணிக்காக போல் பெண்டோ, 35 போட்டிகளில் விளையாடியுள்ளார். அவர் தற்காப்பு மத்தியகள வீரராக அணியில் இடம் பெற்றிருந்தார்.

இதேவேளை, உதைபந்து துறையில் வளர்ந்து வரும் அணியாக உலகளவில் இனங்காணப்பட்டுள்ள தென்கொரியா, நடைபெற்று முடிந்த உலகக்கிண்ண தொடரில் சிறப்பாக விளையாடியது.

ரஷ்யாவில் நடைபெற்ற உலகக்கிண்ண தொடரில், எவ் பிரிவில் இடம்பெற்றிருந்த தென்கொரியா தான் விளையாடிய மூன்று போட்டிகளில் ஒரு போட்டியில் வெற்றி பெற்றது. ஏனைய இரண்டு போட்டிகளில் தோல்வியடைந்தாலும் அந்த இரண்டு போட்டிகளிலும் எதிரணிகளுக்கு கொடுத்தது.

முக்கியமாக நடப்பு சம்பியன் பட்டத்துடன் களமிறங்கிய ஜேர்மனி அணியை 2:0 என தோற்கடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பிரேசில் உதைபந்தாட்ட சம்மேளனத்தின் முன்னாள் தலைவருக்கு கடூழியச் சிறை

பிரேசில் உதைபந்தாட்ட சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் ஜோஸ் மரின் மார்டினுக்கு நான்கு வருட கடூழியச் தண்டனை வழங்கி அமெரிக்க நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

86 வயதான ஜோஸ் மரின் லஞ்சம், ஊழல், அச்சுறுத்தி பணம் பெற்றமை போன்ற பல மோசடிகளை செய்து, 200 மில்லியன் டொலருக்கு அதிகமான பணத்தினை சம்பாதித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டார்.

சுமார் 13 மாதங்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அவர் புதன்கிழமை நியூயோக்கில் அமைந்துள்ள புரூக்ளின் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். இதன்போது, 4 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. அத்தோடு, 1.2 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இழப்பீடும் 3.34 அமெரிக்க டொலர்கள் பறிமுதல் செய்யப்பட வேண்டுமென்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இவர் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் 42 பேர் தனிப்பட்ட ரீதியில் வழக்குப் பதிவு செய்திருந்தனர். அதன் பிரகாரம் சுமார் ஒரு வருட காலமாக விசாரணை நடத்தப்பட்டு தற்போது தண்டனை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஸிம்பாப்வே பயிற்சியாளராக லால் சாந்த் ராஜ்புட் நியமனம்

ஸிம்பாப்வே கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளராக இந்தியாவை சேர்ந்த லால் சாந்த் ராஜ்புட் நியமிக்கப்பட்டுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் மாதத்திலிருந்து சிம்பாவே அணியின் இடைக்கால பயிற்சியாளராக செயல்பட்டு வந்த நிலையிலேயே, அவருக்கு தலைமை பயிற்சியாளர் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 2007 ஆம் ஆண்டு இருபதுக்கு இருபது உலக கிண்ணம் வென்ற இந்திய அணியின் பயிற்சியாளர் குழாமில் அங்கம் பெற்றிருந்த லால் சாந்த் ராஜ்புட், அதன்பின்னர் ஆப்கானிஸ்தான் அணியின் தலைமை பயிற்சியாளராகவும் செயல்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# இலங்கை வருகிறது இந்திய மகளிர் அணி



இந்திய மகளிர் கிரிக்கெட் அணி இலங்கை மகளிர் அணியுடன் மூன்று ஒரு நாள் சர்வதேச போட்டிகள் மற்றும் ஐந்து ரி - 20 சர்வதேசப் போட்டிகள் கொண்ட தொடர்களில் விளையாடுவதற்காக செப்ரெம்பர் மாதம் இலங்கை வரவிருக்கின்றது.

செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி ஆரம்பமாகும் இத்தொடர், இரண்டு வாரங்கள் நடைபெற்று செப்ரெம்பர் மாதம் 25 ஆம் திகதியுடன் நிறைவுக்கு வருகின்றது.

இந்திய மகளிர் கிரிக்கெட் அணி மற்றும் இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி ஆகியவை இறுதியாக, ஜூன் மாதம் இடம்பெற்றிருந்த ஆசியக் கிண்ணத் தொடரின் போட்டியில் விளையாடியிருந்தது. அந்த போட்டியில் இந்திய மகளிர் அணி 7 விக்கெட்டுக்களால் இலங்கையை வீழ்த்தியிருந்தது.

(ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பங்குபற்றுவதற்கு சம்பிரதாய பூர்வமான அழைப்பை விடுப்பதற்காகவே அவர் இலங்கை வந்திருந்தார் என்பது தெரிந்ததே.

துரதிஷ்டவசமாக அவர் கொழும்பு வந்து இறங்கிய சமயம் மஹிந்த ராஜபக்ஷவின் இளைய சகோதரர் காலமாகியிருந்தார். மரணவீடு சொந்த ஊரான அம்பாந்தோட்டையில். அதனால் அச்சமயம் அங்கு நின்றிருந்தார் மஹிந்த ராஜபக்ஷ.

கொழும்பு வந்திறங்கிய சுப்பிரமணியன் சுவாமி கொழும்பு 'கிங்ஸ் பெரி' ஹோட்டலில் தங்கியிருந்தார். அவர் அம்பாந்தோட்டைக்குச் சென்று வருவதற்கு விசேட ஹெலிக் கொப்டர் ஒன்று ஒழுங்குபடுத்தப்பட்டது.

ஹெலிக்கொப்டரில் ஏறுவதற்கு இடையில் கொழும்புத் தமிழ்ப் பத்திரிகை ஒன்றின் செய்தியாளரை அவர் சந்தித்தார். பேட்டியளித்தார். அதை முடித்துக் கொண்டு அவர் அம்பாந்தோட்டை பயணமானார்.

அங்கு சாவு வீட்டில் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்தார். அவரது சகோதரின் பூதவுடலுக்கும் அஞ்சலி செலுத்தினார். அதெல்லாம் ஊருக்குத் தெரிந்த சங்கதிகள்.

சந்திப்பு முடிந்ததும் அது பற்றி தமது டுவிட்டரில் பதிவிட்டார் சுவாமி.

மஹிந்த ராஜபக்ஷவை, 'புலிகளைத் தோற்கடித்த பெரும் தலைவர்' என்றும், 'சிங்கள மக்களினால் பெரிதும் போற்றப்படுபவர்' என்றும் அந்தப் பதிவுகளில் பெரும் புகழாரம் சூட்டினார் சுவாமி.

அவர் அம்பாந்தோட்டையிலிருந்து கொழும்பு திரும்பியதும் அன்று பிற்பகலே. – மூன்று மணி அளவில் – அவர் தங்கியிருக்கும் 'கிங்ஸ்பெரி' ஹோட்டலில் அவர் ஊடகவியலாளரைச் சந்திப்பார் என்று நிகழ்ச்சி நிரல் போடப்பட்டிருந்தது.

ஆனால் தமது டுவிட்டரில் மஹிந்தவைப் போற்றிப் புகழ்ந்து பாராட்டி அவர் பதிவிட்ட சற்று நேரத்தில் அவரது செய்தியாளர் மாநாடு இரத்துச் செய்யப்பட்டு விட்டதாகத் திடீர் தகவல் வெளியானது.

புதுடில்லியிலிருந்து நேரடியாகவும் அதேசமயம் கொழும்பிலிருந்து இந்தியத் தூதரகம் வாயிலாகவும் வழங்கப்பட்ட அறிவுறுத்தலே செய்தியாளர் மாநாடு ரத்தானமைக்குக் காரணம் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

மஹிந்தவைப் புகழ்கின்ற சாக்கில் உள்நாட்டில் அரசியல் குழப்பங்களை ஏற்படுத்தும் கருத்துகளை சுவாமி உளறிக் கொட்டிவிட்டால், இந்தியாவில் மத்தியில் ஆட்சியிலிருக்கும் அவரது பாரதீய ஜனதாக் கட்சித் தரப்புக்கு இராஜதந்திர நெருக்கடி ஏற்படும் எனக் கொழும்பிலிருந்து சுட்டிக்காட்டப்பட்டமையால் செய்தியாளர் மாநாட்டைத் தவிர்க்கும் படியான வழிகாட்டல் புதுடில்லியிருந்து அவருக்கு வழங்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

தென்னிலங்கை அரசியல் இந்தியச் சார்பு, சீனச் சார்பு, அமெரிக்க சார்பு என்று பல முனைகளில் சூடு பிடித்திருக்கும் இச்சமயத்தில் இந்தியாவின் ஆளும் கட்சியின் தரப்பில் இருக்கும் ஒரு பிரமுகர் இங்கு வந்து எதிரணித் தலைவருக்குச் சாா்பான அரசியல் கருத்துக்களைப் பகிரங்கமாக முன்வைப்பது வீண் விபரீதங்களை ஏற்படுத்தும் என்பது புரிந்து கொள்ளத்தக்கதே.

அதுவும் சுப்பிரமணியன் சுவாமி போன்ற – எப்போதும் அரசியலில் குசும்புக் கருத்துகளையே முன் வைத்து வரும் பிரமுகர் ஒருவர் – இங்கு வந்து வாய் திறந்தால் சொல்லவும் வேண்டுமா?

அதனால்தான் முன்னெச்சரிக்கை ஏற்பாடாகச் செய்தியாளர் மாநாடே இரத்துச் செய்யப்பட்டதாம்.

அப்படி இரத்துச் செய்யப்படும் அளவுக்கு நெருக்கடி வந்ததால் சுப்பிரமணியன் சுவாமி பெரும் 'அப்–செட்' ஆகிய நிலையில் தான் நாட்டுக்குத் திரும்புவதற்குப் புறப்பட்டார் என்பதையும் அறிய முடிந்தது.

காலையில் நேரத்துடன் அவரைச் சந்திக்க கிடைத்த தமிழ்ப் பத்திரியாளருக்கு அது 'எக்ஸ்குளூசிவ்' பேட்டிதான். அது பெரும்பாலும் இன்றைய ஞாயிறு இதழில் வெளிவரும் என எதிர்பார்க்கலாம்.

-மின்னல்-

## எல்லை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்து ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்ற பேதமில்லாமல் இதனைச் செய்தோம்.

– இவ்வாறு தெரிவித்தார் தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன்.

வவுனியாவில் நேற்று நடைபெற்ற பண்டாரவன்னியனின் நினைவுதின நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நான் புதிதாக முளைத்த அல்லது வானத்தில் இருந்து வந்து குதித்த அரசியல்வாதி அல்லன். புதிய அமைச்சராக இருக்கலாம். ஆனால் வரலாறு அறிந்த, வரலாற்றிலே பங்களிப்பு செலுத்திய ஜனநாயக போராளி .

மேலாதிக்கவாதிகளின் ஆக்கிரமிப்புக்கு மத்தியிலும், பெரும் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் பண்டார வன்னியன் சிலை அமைக்கப்பட்டது.

அந்த நேரத்திலும் குள்ள நரித்தனமாக அவரது பெயரை வன்னி பண்டா என மாற்றினார்கள். அவர் ஒரு வீரன். எமக்கான முன்னோடியாக அவர் விளங்குகின்றார். ஓர் இனத்திற்கும் மதத்திற்கும் உரிய நாடாகவிருந்தால் இது இரண்டு நாடாகிவிடும்.

அவ்வாறான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திவிட வேண்டாம் என்று பேரினவாதிகளை நான் கேட்கின்றேன். நேற்று கூட மாகாண சபை தேர்தலிற்கான எல்லை நிர்ணய அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு எம் மீது திணிக்கப்பட்டது.

அந்த முயற்சியை நானும் சில தமிழ்க் கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் சேர்ந்து ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்ற பேதமில்லாமல் முறியடித்திருந்தோம். அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அந்த அறிக்கை தோற்கடிக்கப்படுவதற்காக வாக்களிக்கச் செய்தமையின் பின்னால் உள்ள வெற்றி எங்களின் வெற்றி.

சிறுபான்மைக் கட்சிகளாக இருந்து கொண்டு எங்களை வழிநடத்திச் சிறுமைப்படுத்துகிறார்கள் என்று ஆணவத்துடன் எங்களைப் பாா்த்து பேசியவர்கள் எல்லாம் நேற்று எங்கள் காலடியிலே விழுந்து நாம் சொல்வதைக் கேட்டு அதற்கு எதிராக வாக்களித்தார்கள்.

அந்த அறிக்கை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்குமானால் மாகாணசபை முறைமை கேள்விக்குறியாக்கப்படிருக்கும். அதனை நாம் முறியடித்திருக்கின்றோம். மாகாணசபை தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் கட்டமைப்பு அல்ல.

புதிய அரசியல் அமைப்பு வருமா, இல்லையா என்று எனக்குத்தெரியாது. வந்தால் நல்லதும். வரும் என்று நான் சொல்லமாட்டேன். அதற்காக நாம் முயற்சி செய்யாமல் இருக்க முடியாது.

கடந்த பல மாதங்களுக்கு முன்னால் இந்த மாகாண சபை முறைமை நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவரப்பட்டு ஆளும் கட்சியில் பங்காளிகளாக இருக்கும் எங்கள் மீது அழுத்தம் செலுத்திப் பலவந்தமாக வாக்களிக்க வைத்ததன் பின்னணியிலே கூட்டமைப்பு சாா்ந்த ஒருவரும் இருக்கிறார். அது உங்களுக்குத் தெரியும்.

தமிழர்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய ஒரு தீர்வு திட்டத்தை இலங்கை அரசு வழங்கவேண்டும் – என்றார். (ஐ)

## பிரதமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெறவுள்ள இந்த மாநாட்டில், பல நாடுகள் கலந்து கொள்கின்றன. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தப் பயணத்தின்போது பலநாட்டு அரசியல் தலைவர்களுடன் பேச்சுக்களில் ஈடுபடுவார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

## நல்லாட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்று வருவதாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் தெரிவித்தார்.

இலங்கையில் முன்னைய ஆட்சியில் இடம்பெற்றதைப் போன்று இல்லாவிட்டாலும் மனித உரிமை மீறல்கள் இப்போதும் இடம்பெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்தோடு, எந்த ஆட்சியில் உரிமை மீறல்கள் நடைபெற்றிருந்தாலும், அதற்குப் பொறுப்புக்கூறவேண்டியது அரசின் கடமை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நல்லாட்சி அரசில் பேச்சுச் சுதந்திரம் காணப்படுவதாகக் குறிப்பிட்ட அவர், இதுவரை காணாமல் ஆக்கப்படுதல் தொடர்பான முறைப்பாடுகள் எதுவும் மனித உரிமை ஆணைக்குழுவுக்குக் கிடைக்கப் பெறவில்லை என்றும் குறிப்பிட்டார். (ஐ)

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலணியில் கூட்டமைப்பு கலந்து கொள்வதால் தமிழ் மக்களின் அரசியல் தீர்விலோ அல்லது இதர விடயங்களிலோ எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாது என்று தெரிவித்துள்ள புளொட் அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், வடக்கு முதலமைச்சரை எதிர்ப்பதற்காக இத்தகையதொரு முடிவை கூட்டமைப்பு எடுக்கவில்லை என்றும் குறிப்பிட்டார்.

வடக்கு–கிழக்கு மாகாண அபிவிருத்தி தொடர்பான ஜனாதிபதியின் செயலணிக் கூட்டத்தில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளாமல் அதனைப் புறக்கணிக்க வேண்டுமென வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்கினேஸ்வரன் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தனிடம் கடந்த 22 ஆம் திகதி கடிதம் மூலம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த விடயம் தொடர்பில் அடுத்த நாள் இடம்பெற்ற கூட்டமைப்பின் நாடாளுமன்றக் கூட்டத்தில் கட்சித் தலைவரால் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எடுத்துக் கூறப்பட்டிருந்தது. ஆனாலும் ஜனாதிபதி செயலணியில் கலந்து கொள்ள வேண்டுமெனப் பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்ததற்கு அமைய செயலணியில் கலந்து கொள்வதெனக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு முடிவு செய்தது.

கூட்டமைப்பின் இந்த முடிவைக் கடுமையாக விமர்சித்து அறிக்கையொன்றை வெளியிட்டிருந்த வடக்கு மாகாண முதலமைச்சர், பணத்தையும் செல்வாக்கையும் எதிர்பார்த்தே இந்த முடிவு எடுக்கப்பட்டிருப்பதாகவும் குற்றஞ்சாட்டியிருந்தார்.

இது தொடர்பில் புளொட் அமைப்பின் நிலைப்பாடு என்ன என்று அதன் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான த. சித்தார்த்தனிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்–

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் கடந்த சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்றிருந்தது. அதன்போது ஜனாதிபதி செயலணிக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளக்கூடாதென வடக்கு முதலமைச்சர் கோரிய விடயம் குறித்து பேசப்பட்டது. இதில் எமது மக்களுக்காக அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவேண்டுமென்று ஒரு முடிவு எடுக்கப்பட்டிருக்கின்றது.

அந்த முடிவைக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளான ரெலோ, புளொட் மற்றும் தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைந்தே எடுத்திருந்தனர். அதில் நான் கலந்து கொள்ளாதுவிடினும் எமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலந்து கொண்டிருந்தார். இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு அவர்கள் கூறிய காரணம் என்னவெனில், இப்படியே தீர்வு வரும் தீர்வு வருமென்று கடந்த பல வருடமாக இழுபட்டுக் கொண்டிருக்கின்றோம். அதற்காக இனியும் அபிவிருத்தி வேலைகளில் நாங்கள் பங்கெடுப்பதைத் தவிர்த்துக் கொண்டிருக்காமல் அபிவிருத்தியையும் செய்து கொண்டு அரசியல் தீர்வை நோக்கியும் பயணிப்போம் என்று கூறியே இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கின்றது. அதை நானும் ஏற்றுக் கொள்கிறேன்.

இந்தக் கூட்டத்தில் பங்கேற்காமல் விடுவதால் உடனடியாக அரசமைப்பில் மாற்றம் கொண்டு வந்து தீர்வைக் காண முடியாது. இவ்வாறே தொடர்ந்தும் தீர்வு வரும் வரும் என்று இருந்தால் எமது மக்கள்தான் பாவம். ஆகையால் மக்களுக்கான அபிவிருத்தி நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவேண்டியிருக்கின்றது.

பணம், செல்வாக்கை எதிர்பார்த்து இத்தகையதொரு முடிவு எடுக்கப்படவில்லை. அபிவிருத்தி நோக்கம் கருதி மக்களுக்காகவே தான் இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கின்றது. அத்தோடு இந்த முடிவு முதலமைச்சரைத் தோற்கடிக்கவேண்டுமென்பதற்காக எடுக்கப்பட்டதாக நான் கருதவில்லை.

ஆனால் தமிழரசுக் கட்சியினர் என்ன நோக்கத்திற்காக அப்படியொரு முடிவை எடுத்தார்கள் என்று எனக்குத் தெரியாது. ஆனால் எங்களைப் பொறுத்தவரை முதலமைச்சரின் கருத்தை எதிர்க்கவேண்டும் அல்லது அவரைத் தோற்கடிப்பதற்காக அந்த முடிவு எடுக்கப்படவில்லை. குறிப்பாக அபிவிருத்தியை முன்னெடுக்கின்ற அதே நேரத்தில் அரசியல் தீர்வையும் நாங்கள் வலியுறுத்துவோம். இவ்வாறு இந்த இரண்டும் சமாந்தரமாக கொண்டு செல்லப்படவேண்டுமென்பதே எங்களுடைய நிலைப்பாடு ஆகும்–என்றார். (ஐ–7)

## செயலணிக்குச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு கிழக்கு அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலணியின் கூட்டம் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ள நிலையில் அந்தக் கூட்டத்தில் பங்கேற்கக் கூடாதென முக்கிய சில காரணங்களைச் சுட்டிக்காட்டி வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ. விக்கினேஸ்வரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

ஆயினும் ஜனாதிபதி செயலணியில் பங்கேற்பது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு ஏகமனதாகத் தீர்மானித்தது.

இதனை அடுத்து, ஜனாதிபதி செயலணியில் படையினருடன் இணைந்து செயற்படுவதானது அரசியல் தீர்வு உட்பட பல விடயங்களில் பாதிப்பை ஏற்படுத்தும் எனச் சுட்டிக்காட்டிய வடக்கு மாகாண முதலமைச்சர், ஜனாதிபதி செயலணியில் கூட்டமைப்பு பங்கேற்பதாக எடுத்த முடிவைக் கடுமையாக விமர்சித்து அறிக்கை ஒன்றையும் வெளியிட்டிருந்தார்.

இது தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே கூட்டமைப்பின் தலைவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதி செயலணியில் குறைகள் காணப்படுவதாகக் கூறிக்கொண்டு இருப்பதை விட அந்தச் செயலணியில் நேரடியாகப் பங்கேற்பதன் மூலம் குறைகளைச் சுட்டிக்காட்டி அதற்கான தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் இருக்கும் என்றே நாம் கருதுகின்றோம். அத்துடன் இந்தச் செயலணியில் பங்கேற்பதையும் அரசியல் தீர்வுக்கு உதவக் கூடிய வகையில் சாதகமாக மாற்றியமைப்பதற்கு முயற்சிப்போம் என்ற நம்பிக்கையை கொண்டிருக்கின்றோம் – என்றார். (ஐ)

## தொடர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்பு இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

மகாவலி அதிகார சபையால், முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லை கிராமங்களான கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய கிராமங்களில் தமிழ் மக்களின் நிலங்களில் அடாத்தாகத் தங்கியுள்ள சிங்கள மக்களுக்குக் காணி உத்தரவுப் பத்திரங்களை மகாவலி அதிகார சபை வழங்கியுள்ளது.


இந்நிலையில், மாவட்டத்தில் உள்ள புத்திஜீவிகள், சமூக ஆர்வலர்கள், கல்வியியலாளர்கள், பாதிக்கப்பட்ட பொதுமக்கள் இணைந்து மகாவலி எதிர்ப்பு தமிழர் மரபுரிமைப் பேரவை என்ற அமைப்பு ஒன்றை உருவாக்கியுள்ளனர்.

எதிர்வரும் 28ஆம் திகதி முற்பகல் 11 மணி தொடக்கம் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக இந்த அமைப்பினால் தொடர் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்தப் போராட்டத்தில் வடக்கு மாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களையும் சேர்ந்த புத்திஜீவிகள், சமூக ஆர்வலர்கள், கல்வியலாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், நகரசபை மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், அரசியல் கட்சிசார்ந்தவர்கள், இளைஞர், யுவதிகளைக் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)


# புத்தகம் வெளியிடுவதற்காக...

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)




ஈழவாணன் அதனைக் கண்டு என்ன நினைத்தாரோ தெரியவில்லை. அந்த ஊழியரிடமிருந்து குறிப்பிட்ட தாளை வாங்கிப் பார்த்தார். அங்கே ஒரு நவீன ஓவியம் உருவாகி இருந்தது. பின்பு அதனையே 'புளக்' செய்து அக்னி இதழின் முகப்பு அட்டையில் பிரசுரித்தார்.

ஆம். அட்டையில் அந்த ஓவியம் அழகாகத்தான் இருந்தது. பலரும் பின்னணி தெரியாமல் வியந்தார்கள். அக்னி இதழ் சுமார் 32 பக்கங்களில் வெளியானது. புதுக்கவிதைகளுக்காக கூடுதல் பக்கங்கள் ஒதுக்கப்பட்டாலும், புதுக்கவிதையின் தோற்றம் – வளர்ச்சி தொடர்பான கட்டுரைகள், நூல்விமர்சனங்கள், தரமான திரைப்படங்கள், ஓவியக்கலை தொடர்பான குறிப்புகளும் இடம்பெற்றன. அக்னியின் ஐந்தாவது இதழ் கறுப்பின மக்களின் ஆத்மாவை பிரதிபலிக்கும் கவிதைகளுக்கு களம் வழங்கியது. இச்சிறப்பிதழில், முருகையன், எம். ஏ. நுஃமான், கே. எஸ். சிவ குமாரன். பண்ணாமத்து கவிராயர் ஆகியோர் மொழிபெயர்த்த கவிதைகள் இடம் பெற்றன.




ஈழவாணனின் நட்பினால்தான் எனக்கு தமிழ்நாடு வானம்பாடி கவிஞர் அக்கினி புத்திரனுடைய தொடர்பும் கிடைத்தது. எனது முதலாவது சிறுகதைத் தொகுப்பிற்கு சுமையின் பங்காளிகள் எனப் பெயரிட்டதும் ஈழவாணன்தான். குறிப்பிட்ட தொகுதி வெளியானதன் பின்னர் நீர்கொழும்பில் நடந்த வெளியீட்டு விழாவிலும் கலந்துகொண்டு உரையாற்றினார். எனது தொகுப்பின் பிரதிகளை தமிழ் நாட்டுக்கு எடுத்துச் சென்று கவிஞர் அக்கினிபுத்திரனுக்கும் சேர்ப்பித்தார்.

அக்கினி புத்திரன் 06-07-1976 இல் எனக்கு எழுதியிருந்த கடிதத்தில் இந்தத் தகவலை குறிப்பிட்டு ,

ஏறத்தாழ ஈராயிரம் வருடங்களுக்குப் பின்னால் மக்கள் இலக்கியம் மக்கள் இலக்கிய கர்த்தாக்களால் படைக்கப்படும் ஒரு வரலாற்றுச்சிறப்பு மிக்க காலத்தில் நாம் வாழ்கின்றோம் என்பதில் நமக்குப் பெருமைதான்.

அந்த விதத்தில் உழைக்கும் மக்களின் ஜீவிதத்தை படைப்பிலக்கியமாக் குவதில் தமிழகத்தைப்போல ஈழ இலக்கிய சிருஷ்டிகர்த்தாக்களும் மும்முரமாக ஈடுபட்டிருக்கும் இந்தக்கால கட்டத்தில் தங்களது சுமையின் பங்காளிகள் வெளிவந்துள்ளது.

கலகங்களுக்குப் பின்னால் புரட்சிகள் நடத்தி புத்துலகம் படைக்கும் பாட்டாளி வர்க்க யுகத்தில் வாழும் சிருஷ்டி கர்த்தாக்களாகிய நாம், நமது படைப்புகளில் போராடும் வர்க்கத்தின் மனிதாபிமானத்தையும் அதன் சமரசமற்ற யுத்தத்தையும் முன்னிறுத்தி புதிய கலா சாரத்தை படைக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். என்று தொடங்கும்நீண்ட கடிதமொன்றை எனக்கு அனுப்பியிருந்தார்.

நீர்கொழும்பில் எமக்குகல்வி ஒளி வழங்கிய விஜயரத்தினம் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் மன்றம் நாமகள் விழாவை வெறும்சமயச் சடங்காக நடத்தாமல் கலை இலக்கிய விழாவாகவே கொண்டாடிய காலம் அது. ஒவ்வொரு நாமகள்விழாவிலும் இலக்கியச்சொற்பொழிவு ,கருத்தரங்கு, கவியரங்கு வைப்போம்.

ஒரு சமயம் 'விடியும் வரை கனவுகள்' என்ற தலைப்பில் கவியரங்கு. தலைமை ஈழவாணன். அவரை வரவேற்க , அக்னி வேள்வியில் வந்துதித்த கவிவாணா எமதன்பு ஈழவாணா என்று விளித்து கவிதை பாடினேன் இது மிகைப்படுத்தப்பட்ட கூற்றோ என்ற ஐயப்பாடும் எனக்கு பின்பு தோன்றியது.

ஈழவாணன் தினபதியில் மீண்டும் சேர்ந்து பணியாற்றி சிறிது காலத்தில் மாரடைப்பால் மறைந்தார்.

ஈழவாணனின் நீண்ட கால நண்பரும் தினபதி செய்தி ஆசிரியருமான வி.ரி.இரத்தினம், ஈழவாணனின் பூத உடலை ஒரு தமிழ்க் கவிஞருக்கே உரித்தான முறையில் வேட்டி, சால்வையுடன் அலங்கரிக்க ஏற்பாடுசெய்திருந்தார்.

ஈழவாணனின் மனைவியின் ஊர் திருநெல்வேலியில் இறுதிச் சடங்கு. பூத உடல் கொழும்பிலிருந்து புறப்பட்டது.

எனக்கு உரிய நேரத்தில் பஸ் கிடைக்காமல் இறுதிச் சடங்கு முடிந்து, மறுநாள் காலையில் அஸ்தி எடுக்கும் வேளையிலேயே அங்கு போய்ச் சேர்ந்தேன்.

அவரின் அருமைத்துணைவி என்னைக் கண்டு கதறிய காட்சியும் அவரின் அன்புச் செல்வன் சிறிய பாலகன் வேட்டி அணிந்து என்னுடன் கைகோத்து தந்தையின் அஸ்தி எடுக்க புறப்பட்டு வந்ததும் இன்றும் என் மனக்கண்ணில் அழியாத சோகச் சித்திரம்தான்.

1984இல் கொழும்பில் வலம்புரி கவிதா வட்டம் (வகவம்) தினகரன் ஆசிரியர் சிவகுருநாதன் தலைமையில் ஈழவாணனுக்கு கவிதா அஞ்சலிநிகழ்வை நடத்திய பொழுது எனது கண்ணீர் அஞ்சலியைச் சமர்ப்பித்தேன்.


யுக வெளியின்
கவிப்புருஷா
நீ அக்னி யிடம்
அகப்பட்டுக் கொண்டாலும்
உன் அக்னிக் கவிதைகள்
உன்னையும் – உன்
காலத்தையும் வாழ்விக்கும்.

என்று வகவம் அன்று வெளியிட்ட சிறிய பிரசுரத்தின் முன் பக்கத்தில் அவரைப் போற்றியிருந்தது.




புதுமைப்பித்தன் மறைந்த பின்பு அவருடன் நெருங்கிப் பழகிய சிதம்பர ரகுநாதன் எழுதிய புதுமைப்பித்தன் வரலாறு நூலின் முன்னுரையில் குறிப்பிட்டதே என் நினைவுக்கு வருகின்றது. புதுமைப்பித் தனது வாழ்க்கை தமிழ் எழுத்தாளர் ஒருவரின் சோக நாடகம். உயிருள்ள எழுத்தாளர்களுக்கு ஓர் எச்சரிக்கை.

கவிஞர் ஈழவாணனைப் பற்றி நான் கூறுவதாயின் அவர் எமக்கெல்லாம்




ஒரு பாடம். மல்லிகை இதழிலும் கவிஞர் ஈழவாணனுக்கு அட்டைப்பட அதிதி கௌரவம் கிடைத்துள்ளது. கவிஞர்கள் சொக்கநாதன், கந்தவனம் ஆகியோரது கவிதைகளுடன் ஈழவாணனின் கவிதைகளும் தொகுக்கப்பட்ட சிட்டுக்குருவி என்ற நூலும் வெளியாகியிருக்கிறது.

இலங்கையில் போர் முடிந்த பின்னர் 2010ஆம் ஆண்டு ஜனவரியில் அங்கு சென்றேன். ஈழவாணனின் மனைவியும் பிள்ளைகளும் திருகோணமலையில் உவர்மலையில் வசிக்கிறார்கள் என அறிந்து அவர்களைத்தேடிக் கொண்டு சென்றேன். ஈழவாணன் கவிஞர் புதுவை ரத்தினதுரையின் உறவினர். அந்தப் பயணத்தில் புதுவையின் மனைவி மகனைப் பார்த்துவிட்டு திருமதி ஈழவாணனின் வீடு பற்றிக் கேட்டேன்.

புதுவையின் இளைய மகன் உடன் வந்து வீட்டைக்காண்பித்தார். சுமார் 27 வருடங்களின் பின்னர் அவரைக் கண்டேன். அன்று தந்தை ஈழவாணன் தகனமாகிய பின்னர் என்னுடன் அஸ்தி எடுப்பதற்காக வந்த அவரது புதல்வன் வளர்ந்து தற்பொழுது மட்டக்களப்பில் ஆசிரியராகப் பணியாற்றுகிறார்.

ஈழவாணனின் தொடர்பினால் எனக்கு நண்பரான – கவிஞர் அக்கினிபுத்திரனை 1990இல் சென்னையிலும் பின்னர் நீண்ட இடைவெளியையடுத்து கடந்த 2014 ஜனவரியில் கோயம்புத்தூரிலும் சந்தித்து மறைந்த ஈழவாணனின் நினைவுகளை பகிர்ந்து கொண்டேன்.

காலம்தான் எவ்வளவு விரைவாக ஓடிவிடுகிறது. ஆனால் – கவிஞர் ஈழவாணனுடன் கழிந்த கணப்பொழுதுகள் மனதைவிட்டு ஓடிவிடாமல் நிலைத்துள்ளன.

## 60 ஆண்டு கால பிரிவுக்குப் பின்

# முதல் காதலனை கரம் பிடிக்கும் 79 வயதான மூதாட்டி காதலி!



லண்டனைச் சேர்ந்த ரூத் ஹோல்ட் என்ற மூதாட்டி 60 ஆண்டுகளுக்குப் பிறகு தனது முதல் காதலனை திருமணம் செய்ய இருக்கும் சுவாரஸ்ய நிகழ்வு நடந்துள்ளது


1950 களில் 79 வயதான ரூத் ஹோல்ட் என்ற முதாட்டியும், 84 வயதான ரான் ஓவனும் அலுவலகம் ஒன்றில் பணிபுரியும் போது காதலித்துள்ளனர். அதன் பிறகு வாழ்கை இருவருக்கு வெவ்வேறு பாதையில் சென்றுவிட்டது. ரான் பாடகராக வேண்டும் என்று தனது கனவை நோக்கி நகர, ரூத் வேறு ஒருவரை திருமணம் செய்து கொண்டு சவுதி அரேபியாவுக்குச் சென்றார்.

அதன்பிறகு 83 இல் குடும்ப உறவில் ஏற்பட்ட விரிசல் காரணமாக ரூத் விவாகரத்து செய்து கொண்டார். அது முதல் தனது முதல் காதலையே ரூத் நினைத்துக் கொண்டிருந்துள்ளார். ரான் எங்கு இருக்கிறார், தற்போது என்ன செய்து கொண்டிருக்கிறார் என நாள்களை நகர்த்திக் கொண்டிருந்த ரூத்துக்கு இன்ப அதிர்ச்சி காத்திருந்தது.

தற்போது நான்கு பேரக் குழந்தைகளுடன் வசித்து வரும் ரூத்துக்கு சில ஆண்டுகளுக்கு முன்னர் அவரது சகோதரி மூலம் இசை நிகழ்ச்சி ஒன்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அந்த இசை நிகழ்ச்சியில் ரான் என்ற பாடகர் பாட இருக்கிறார் என்றும் அவது சகோதரி கூறி இருக்கிறார்.

இதுகுறித்து ரூத் கூறும்போது, நான் நேசித்த ரான் என்று கேட்ட போது எனக்கு நம்ப முடியாத பதில் கிடைத்தது. அது ரான்தான் என்று.

அதனைத்தொடர்ந்து அவரைச் சந்தித்து பேசினேன். 2014 ஆம் ஆண்டு ரான் என்னைக் காதலிப்பதாகக் கூறினார். வரும் செப்ரெம்பர் மாதம் நாங்கள் திருமணம் செய்ய இருக்கிறோம் என்று கூறியிருக்கிறார்.



60 ஆண்டுகளுக்கு பின்னர் திருமணம் செய்து கொள்ளும் இந்தக் காதலர்களுக்கு சமூகவலைதளங்களில் பலரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

# அன்னதானக் கந்தன் தேரேறி அருட்காட்சி




வரலாற்று புகழ்மிக்க தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத் தேர்த்திருவிழா நேற்றுச் சிறப்பாக இடம்பெற்றது.

கடந்த 11ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய செல்வச்சந்நிதி ஆலய மகோற்சவத்தை முன்னிட்டுத் தொடர்ச்சியாக விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்று வந்தன. நேற்றுக் காலை நடைபெற்ற வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து செல்வச் சந்நிதியான், பிள்ளையார் மற்றும் வேல் தாங்கிய மூன்று இரதங்கள் வெளிவீதி உலா வந்து பக்தர்களுக்கு அருட்காட்சி அளித்தன.

இதன்போது பக்தர்கள் அங்கப் பிரதட்சணம் செய்து, வேல் பூட்டி, காவடி தூக்கி தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றினர்.

தேர்த் திருவிழாவில் வடக்கு, கிழக்கு உள்ளிட்ட பல பகுதிகளைச் சேர்ந்த பெருமளவான பக்தர்கள் கலந்துகொண்டமையோடு, புலம்பெயர் தேசங்களிலிருந்து வருகை தந்த பக்தர்களும் பங்கேற்றனர்.

உங்கள் பிள்ளைகளின் கனவிற்கு துணை நில்லுங்கள்
Aspirations Education (PVT) LTD
15 வருடங்களிற்கு மேல் வெளிநாட்டு உயர் கல்வி வாய்ப்புகளை வழங்கி வரும் நிறுவனத்தின் யாழ். கிளையில் பணிபுரிய இரண்டு யுவதிகளிற்கான உடனடி வேலை வாய்ப்பு.
க.பொ.த. உயர்தரம் அல்லது அதற்கு மேல் கல்வி பயின்றவர்கள் மின் அஞ்சல் மூலம் 30 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.
Jaffna@aspirations.edu.lk. 077 768 7821
AVNOR COMPLEX
269, A9 Palaly Road, Kandarmadam, Jaffna.
www.aspirations.edu.lk.

யாழ் நகரில்
இப்போது உள்வாங்கப்படுகிறார்கள்
SR CITY CAMPUS
நேர்முகத்தேர்வில் உங்கள் டிப்ளோமாவை விட அது சார்ந்த அறிவையே எதிர்பார்ப்பார்கள் என நீங்கள் அறிவீர்களா?
அவை இரண்டையும் எங்களிடம் பெறுங்கள்!

3 மாதங்களில்
3 டிப்ளோமா
Hotline 77 00 51 539
Get for Rs.29,999
ஆங்கிலம் | தகவல் தொழில்நுட்பம் + உங்கள் விருப்பத்தெரிவு
உங்கள் நான்காவது நண்பருக்கு அனைத்து டிப்ளோமாக்களும் இலவசம்!
Free விருப்பத்தெரிவு
Dip in Journalism|Spoken English|Psychology|
Photography|Art & Design |HR|Hospitality management
அனைத்துப் பாடநெறிகளும் இலகு தவணைக் கட்டண முறையினை அடிப்படையாகக் கொண்டன..



1980 ஆம் ஆண்டு மக்கள் வங்கிக் குடும்பத்தில் பதவி நிலை உதவியாளராய் இணைந்து, உதவி முகாமையாளர், பிரதி முகாமையாளர், முகாமையாளர், உதவிப் பிராந்திய முகாமையாளர், பிராந்திய முகாமையாளர் எனும் பதவிகளில் உயர்ந்து, இலங்கைத் தீவின் பல பாகங்களில் மக்களுக்கும் மக்கள் வங்கிக்கும் ஆற்றிய மகத்தான வங்கிச் சேவைக்கு மனமுவந்து தலை வணங்குவதோடு அவரின் ஓய்வு காலம் சிறப்புற அமைய வாழ்த்தி நிற்கின்றோம்.
மக்கள் வங்கி குடும்பம்
யாழ். பிராந்தியம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.08.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.